அகஸ்தியருக்கணையணைன்

புராணம்.

Q23:417
N45
175348

திருத்துறையூர்த் திருநாவுக்கரசு சுவாமிகள்
சைவ சித்தாந்த கழக வெளியீடு - 5

3??

உ

சிவமயம்

# அப்பூதியடிகணாயனார் புராணம்

உரையுடனும் படங்களுடனும்

20 AUG 1946

பதிப்பாசிரியர்:

கோவை - வழக்கறிஞர்

சிவக்கவிமணி - C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.

பண்ருட்டி - மிராசுதார்

திரு. A. C. இராசகோபால் செட்டியார் அவர்கள்

உதவிகொண்டு

சாது அச்சுக்கூடத்தில்
(இராயப்பேட்டை - சென்னை)
பதிப்பிக்கப்பட்டன

திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ சித்தாந்த கழகம்
திருத்துறையூர் & 41, பிராட்வே, சென்னை
1945

]   [விலை ரூ. 1—0—0

Q23:417
N45
125348

திருத்துறையூர் திருநாவுக்கரசு சுவாமிகள்
சைவ சித்தாந்த கழக வெளியீடு - 5

உ

சிவமயம்

# அப்பூதியடிகளுயனுர் புராணம்

உரையுடனும் படங்களுடனும்

20 AUG 1946

பதிப்பாசிரியர்:

கோவை - வழக்கறிஞர்

சிவக்கவிமணி - C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.

பண்ருட்டி - மிராசுதார்

திரு. A. C. இராசகோபால் செட்டியார் அவர்கள்

உதவிகொண்டு

சாது அச்சுக்கூடத்தில்
(இராயப்பேட்டை - சென்னை)
பதிப்பிக்கப்பட்டன

திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ சித்தாந்த கழகம்
திருத்துறையூர் & 41, பிராட்வே சென்னை
1945

உரிமை ஆசிரியருக்கே] [விலை ரூ. 1—0—0

சிவமயம்

# முகவுரை

திருத்தொண்டர் புராணத்தினுள் இருபத்தைந்தாவதாக விளங்குவது அப்பூதியடிகணாயனார் புராணம். உரை வெளியீடு முற்றும் பெற இயலாத அன்பர்களும் தமிழ் மாணவர்களும், மற்றும் அப்பூதியடிகணாயனார்பால் அன்பு மிக்குப் பத்திபண்ணும் அடியார்களும் பயன்பெறும்படி இப்புராணம் உரையுடன் தனிப்பதிப்பாக வெளியிடப்பெறுகின்றது. இதனை இவ்வாறு தனிப் பதிப்பாக வெளியிடவேண்டுமென்று கருதி அதற்கு வேண்டிய பொருளுதவியுஞ் செய்வதாக எம்மை ஊக்கப்படுத்தியவர் பண்ருட்டி ப. வே. தருமபரிபாலகரான மிராசுதார் பேரன்பர் திரு. A. C. இராசகோபாலச் செட்டியாரவர்கள். இவர்கள் அப்பூதியடிகளிடம் பேரன்பு பூண்டு அவர் பெயராற் பல நல்ல அறங்களையும் கட்டளைகளையும் சிறப்புக்களையும் செய்யும் அடிமைத் திறத்தினின்றவர். இத்தனிப் பதிப்புக்காக அவர் ரூ. 200 (இருநூறு ரூபாய்) திருத்துறையூர் திருநாவுக்கரசு சுவாமிகள் சைவசித்தாந்த கழக ஊழியரும் இப்புராண வெளியீட்டுக்குத் தொடக்கம் முதல் பணியாற்றி வருபவருமான அன்பர் திரு. K. ஆறுமுக நயினார் மூலம் நன்கொடையாக உதவி ஷை தனிப்பதிப்பை திருநாவுக்கரசு சுவாமிகள் சைவசித்தாந்த கழக வெளியீடாக வெளியிடப்பட்டது. எமது நன்றியை முன்னமே 19-வது சஞ்சிகை உறைத்தாளில் அறிவித்துள்ளோம். போர் காரணமாகக் காகிதங் கிடையாமையால் இப்பதிப்பு வெளியிட மிகத் தாமதப்பட்டமை குறித்து வருந்துகின்றோம். இப்பதிப்பு வெளியாகுமுன் அன்பர் இராசகோபால் செட்டியார் சிவபதமடைந்து விட்டார்கள். அதுபற்றி மிகவும் வருந்துகின்றோம். அவரது இன்னுயிர் அப்பூதியடிகளார் திருவடிகளின்கீழ் அமைதி பெற்று இன்புறுவதாக.

"சேக்கிழார் நிலையம்"
கோயமுத்தூர்
15-11-1945

C. K. சுப்பிரமணிய முதலியார்
பதிப்பாசிரியர்
கோவைத் தமிழ்ச்சங்கத் தலைவர்

# முன்னுரை

"சொற்குறுதி அப்பர்" என்ற முதுமொழிக்கிணங்க நமது சைவசமயாசாரியராகிய திருநாவுக்கரசு சுவாமிகள், திருப்பெயரையே, அப்பூதியடிகள் உறுதி தரும் திருவைந்தெழுத்தாக, ஓதி, உணர்ந்து, ஒழுகியும் மனைவி மக்கள் மாக்கள் சோலை நந்தனவனம் குளம் தண்ணீர்ப்பந்தர் முதலியவைகளுக்கு மகுடமாக சூட்டி வழங்கியும் வாழ்ந்து வந்தார். இறுதியில் அத்திருநாவுக்கரசு சுவாமிகள் தாமே வலிய வந்து ஆட்கொண்ட பெருமை சைவ உலக முழுதும் அறிந்ததொன்றாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் பெருமையை சைவ உலகம் தமிழ் அறிவுகொண்டு அறியும்படி செய்தவர் நம் அப்பூதியடிகள் ஆவார். ஆகையால் அவருடைய சரித வரலாற்றை எங்கள் கழக வெளியீடாக வெளியிட அனுமதி தந்த உயர்திருவாளர் சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு எங்கள் வணக்கம் உரித்தாகுக.

சைவசித்தாந்த கழகம் திருத்துறையூர் &
41, பிராட்வே சென்னை

இங்ஙனம்
K. ஆறுமுக நயினார்

---

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அப்பூதியடிகணாயனார் புராணம் ... | க—ருஉ |
| 2. | சரிதச் சுருக்கமும் - கற்பனையும் ... | ருஉ—ருரு |
| 3. | தலவிசேடம் - திங்களூர்-திருப்பழனம் ... | ருரு |
| 4. | சில குறிப்புக்கள் ... | ருரு |
| 5. | துதிகளும் பாட்டு முதற்குறிப்பும் ... | ருசு |


175348



திருத்“ திங்களூர் ” (பாட்டு - 1786)
(இக் கோயிலின் முன்பு அப்பூதியாரது மகனுடலைக் கொணர்வித்துத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடி விடம் தீர்த்தருளினர்)

---

தலவிசேடம்: திங்களூர் - III - பக்கம் ௩௧௫ பார்க்க. கோயில் மிகப் பழுதாயும், வெளிமதில் இடிந்து தரைமட்டமாயும், உள் மதில் பழுதுபட்டும், கோபுரங்கள் சிகரமின்றியும் உள்ளன; படம் பார்க்க. தண்ணீர்ப் பந்தர் மட்டும் ஒரு இடங்குறித்து நீண்டகாலமாக நடந்துவருகிறது; அப்பூதியாரின் திருவுருவந்தானும் இத்திருக் கோயிலில் வைத்து வழிபடப்பெறவில்லை.

அரசுகள் அப்பூதியாரின் மகனாரது உடலைக் கோயிலின் திருமுன்பு கொண்டு வரச்செய்து பதிகம் பாடி உயிர்ப்பித்த பாடற்சிறப்புடைய இத்திருக்கோயிலைப் புதுப்பித்தும், ஆளுடைய அரசுகள், அப்பூதியார், மகனார், மனைவியார் திருவுருவங்களைத் தாபித்தும், சோலை குளம் திருமடம் முதலியவை கண்டும் திருத்தொண்டு செய்தல் மிகமேலான சிவபுண்ணியமாகும்.

சுவாமி - கைலாசநாதர். அம்மை - பெரியநாயகி யம்மையார்; பதிகம் 1; பொதுப்பதிகம்; இத்தலத்தைத் தேவார வைப்புத்தலங்களுள் ஒன்றாகவும் கொள்வர்.

திருப்பழனத்தினின்றும் வடக்கில் மட்சாலை வழி ஒரு நாழிகை யளவில் அடையத்தக்கது.



அப்பூதியார் சரிதங்காட்டத் தண்ணீர்ப் பந்தரில் உள்ள படம்



"திருநாவுக்கரசு நாயனார் தண்ணீர்ப் பந்தர்"
அப்பூதி நாயனார் அமைத்த இடம்
(பாட்டு - 1786)



திருப்பழனம் - கோபுரம்

(பாட்டு - 1786)



திருப்பழனம் - விமானமும்
சண்டீசர் கோயிலும்
(பாட்டு - 1793)

உ

திருச்சிற்றம்பலம்

# 25. அப்பூதியடிகணாயனார் புராணம்

## தொகை

" ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன் "—திருத்தொண்டத் தொகை

## வகை

" தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்று
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே
யினமாத் தனது பெயரிடப் பெற்றவ னெங்கள்பிரான்
அனமார் வயற்றிங்க ளூரினில் வேதிய னப்பூதியே "

—திருத்தொண்டர் திருவந்தாதி

## விரி

1783. தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலா ; ரெல்லையி றவத்தின் மிக்கார் ;
ஆண்டசீ ரரசின் பாத மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா யுள்ளார். க

புராணம் :—அப்பூதியடிகள் என்னும் பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, கிறுத்த முறையானே, திருநின்ற சருக்கத்துள் ஐந்தாவது அப்பூதியடிகணாயனாரது சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை :—ஒரு நம்பியாகிய அப்பூதியடிகளுடைய அடியார்களுக்கும் நான் அடியேன்.

அடியார்க்கும் என்ற உம்மை முன்கூறிய பெரியார்களுடன் இவர்களுக்கும் என்றும், அப்பூதியாருக்கேயன்றி அவரது அடியார்க்கும் என்றும், கொள்ள நின்றமையின் இறந்தது தழுவிய எச்சவும்மை. ஒரு - ஒப்பற்ற. நம்பி - நன்மையுடைமையும் தீமையிலாமையும் சார்ந்த ஆடவருட் சிறந்தவர். 1783, 1784 பார்க்க. இக்காரணம் பற்றியே மணமகனை நம்பி என்று வழங்கியது முன்னாள் தமிழ் வழக்கு. " திலத நுதலுமை நங்கைக்குந் திருவா வடுதுறை நம்பிக்கும் " (சேந் - திருவிசைப் - 5) ; " நங்கையவ டனைநயந்த நம்பி யோடு " (திருஞான - புரா - 483) ; திருநாவுக்கரசு நாயனாரின் திருவடிகளே உறுதியாவன என்ற ஒரு நம்பிக்கையினை மேற்கொண்டவர் என்ற சரிதக் குறிப்பும்பட நின்றது. அப்பூதி - நாயனாரது பெயர்.

வகை :—அழியாப் பெருஞ் செல்வமாவது திருநாவுக்கரசு நாயனாருடைய இனிய திருவடிகளே என்று மனமார்ந்த தண்ணீர்ப்பந்தர் முதலிய அறங்களை அத்திருவடிகளை வாழ்த்தி அப்பெயராற் செய்துவைத்து, அதனாலே அவரது வளப்பமிக்க தமிழாகிய தேவாரத் திருவாக்கினில் தமது பெயரை வைக்கப்பெற்றவர் ; எங்கள் தலைவர் ; அன்னங்கள் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திங்களூரில் அவதரித்த அந்தணராகிய அப்பூதியடிகள்.

தனம் - ஏனைச் செல்வங்களெல்லாம் பெற்றதன் பயனாகிய பெருஞ்செல்வம். " பெற்றநீடு பயன் கொள்வார் " (441) ; " வளத்தினால் வருபயன் கொள்வார் "

(504) என்பவை காண்க. எனு - என்று தெளிந்து. மனமார் - தாம் மனமார மகிழ்ந்து வைத்த என்றும், அடைந்தோர்களது மனங்குளிர - மகிழ-என்றும், அத்திரு நாவுக்கரசினது மனமும் பொருந்தும் என்றும் உரைக்க நின்றது. புனற் பந்தர் - இனம்பற்றி ஏனைய அறங்களையும் கொள்க; திருநாவுக்கரசரது திருமனம் பொருந்திச் சரித விளைவுக்குக் காரணமாய் நின்ற சிறப்புப்பற்றி இதனை எடுத்துக் கூறினர். வாழ்த்தி வைத்தல் - வாழ்த்தும் வகையாலே வைத்தல்; வாழ்க! என்று எழுதி வைத்தல் என்றலும் அமையும்; வைத்துப் பேற்றவன் - என்க. வைத்து - வைத்த தன் பயனாக என்று காரணப்பொருளில் வந்தது. தண்ணீர்ப் பந்தரில் அரசுகளின் திருப்பெயர் இட்டதனால் அரசுகளது தமிழில் தமது பெயரை இடப்பெற்றவர். வண் தமிழ் - தேவாரம். வண்மை - கேளாமலே உயிரையும் மீட்டுத்தரும் வள்ளன்மை. விடந்தீர்த்து மகனை மீட்ட சரித வரலாற்றுக் குறிப்பு. ஏகாரம் பிரிநிலை. குவ்வுருபு ஏழன் பொருளில் வந்தது. இடுதல் - பொறித்து வைத்தல். பேற்றவன்- பெரும்பேறு என்பது குறிப்பு. தமிழ் - திருப்பழனத் திருப்பதிகத்தினுள் "அஞ்சிப் போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதிக், குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்" என்றது. 1476 பாட்டும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. திங்களூர் - அப்பூதியாரது தலம். வேதியன் - அவரது மரபு. இனமா - அடியார் இனத்தவராக வைத்து; "பித்துப் பத்தரினத்தாய்" (போதம்).

பெயரும் சரித வரலாற்றுக் குறிப்பும் தொகை நூல் காட்டிற்று; ஊரும், மரபும், பேரும், செய்த திருத்தொண்டுகளின் வரலாறுகளும், பெற்றபேறும் வகைநூல் வகுத்துக் காட்டிற்று; இவை விரிந்தபடி விரிநூலுட் கண்டுகொள்க. அவற்றுள் ஊரும் மரபும் சில சிறப்பியல்புகளும் முன்னரே திருநாவுக்கரசு நாயனார் புராணத்துள் 200வது திருப்பாட்டு முதல் 211வது திருப்பாட்டு வரை (1465—1476) உள்ள பதினொரு பாசுரங்களில் விரிக்கப்பட்டன; ஏனையவை இப்புராணத்தினுள் விரித்துரைக்கப் பெற்றன. முன் உரைத்தவை ஆளுடைய அரசுகளின் சரிதச் சார்பும், ஈண்டுரைப்பவை அப்பூதியார் சரிதச்சார்பும் பெரும்பான்மைத் தொடர்புபற்றி முறையே அங்கும் இங்குமாக விரிக்க வைத்தவாறும் கண்டு அமைத்துக்கொள்க.

1783. (இ - ள்) தாண்டவம்...அன்பர் - பெருங்கூத்து இயற்றுதலில் வல்லவராகிய தம்பெருமானுக்கு அன்புடையவர்; ஈண்டிய புகழின் பாலார் - பொருந்திய புகழினையுடையவர்; எல்லையில் தவத்தின் மிக்கார் - அளவில்லாத தவத்தினுன் மிக்கவர்; ஆண்டசீர் அரசின் பாதம் அடைந்து - சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட சிறப்பு மிக்க திருநாவுக்கரசு நாயனாரின் பாதங்களையே சார்பாக அடைந்து; அவர்... உள்ளார் - அவர் தம்மை அறியா முன்னே காணத்தக்க காதல் மிக்கதனால் உள்ளங் கலந்த அன்புகொண்டவராக வுள்ளவர்.

(வி - ரை) தாண்டவம் - ஐந்தொழில் அருட்கூத்து. வல்ல - ஏனை எவர்க்கும் இயலாதது என்றதும், சிவபெருமானுக்கு எளிய விளையாட்டாவது என்றதும் கருத்து;

தம்பிரானுர்க்கு அன்பர் - அப்பூதியார் திருநாவுக்கரசு நாயனாற்பாற் கொண்ட அன்பின் திறம்பற்றி முன் (1465 - 1476) அறிவித்த ஆசிரியர், அவ்வாறு அவரது அடியார் பத்தியினால் அறியப்பட்ட இறைவன்பா லன்புடைமையினை ஈண்டு முதற்கண் எடுத்துக்கூறினார். "அடியவர்க் கன்பில்லார் - ஈசனுக் கன்பில்லார்" (11வது சூத் - சித்தி) என்பது சாத்திரம். அவரது இவ்வியல்புபற்றி "அப்பூதிக் குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்" என்று தேவாரத்திற் போற்றப்பட்டது மிக்கருத்து.

ஈண்டிய புகழின் பாலார் - ஈண்டுதல் - அணுகுதல். புகழ் இவரை நோக்கி வந்து ஈண்டிற்று என்க. "ஆக்க மதர்வினுய்ச் செல்லும்" என்புழிப்போல.

எல்லையில் தவத்தின் மிக்கார் - அளவில்லாத முற்செய்தவங்களான் மேம்பட்டவர். தவம் - முற்செய் தவம். "மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்" (ஏயர்கோ - புரா - 239); "ஒப்பரிய தவஞ்செய்தே ணுதலிணு லும்மடிகள், இப்பொழுது தாங்கிவரப் பெற்று" (திருஞான - புரா - 935). எல்லையில் - என்பது பெருமையாலும் தொகுதியாலும் அளவில்லாமையினையும், மிக்கார் - என்பது அவை இவரிடத்து நின்ற மிகுதிப்பாட்டினையும் குறித்தன. தவத்தின் மிக்காராதலின் அரசின் பாதம் அறியாமுன்னே அடைந்து அன்பினராஞர் என்று காரணங் கூறியபடி. சரித விளைவுக்குக் காரணமாயின சிறப்பிஞல் கலந்த அன்பினர் என்று எடுத்துக் கூறிய இயைபும் காண்க.

ஆண்ட அரசு - என்க. ஆண்ட - ஆளுடைய இறைவரால் ஆட்கொள்ளப் பட்ட என்பது. இச் சரிதவிளைவுக் குறிப்பும் ஆம். அரசு - திருநாவுக்கரசு.

அடைந்து - வழிபாட்டிஞற் புகலாக அடைந்து. அடைந்து - கலந்த - அன்பினராய் - என்று கூட்டுக. கலத்தல் - உணர்வு வகையிஞல் ஒன்றுபடுதல்.

அவர் அறியாமுன் - தம்மை அவர் அறியாத முன்பு.

காண்டகு காதல் - உள்ளடங்காமல் வெளிப்பட்டுப் பிறர் கண்டுகொள்ளத் தக்கதாய். அறியா முன்னேயும் வர்க்கின் வேந்தர் காண்டகு காதல் என்று கூட்டி, வேந்தர் காணத்தக்க அடிமைத்திறம் என்பதுமாம். இப்பொருளில், காதல் கூரும்படி கலந்த என்று முடிக்க. நாயஞரது நாடும் நகரமும் முதலியவை முன்னர்க்(1465) கூறியமையின் இங்குக் கூருமலே தொடங்கிஞர்.

குணத்தின் மிக்கார்—என்பதும் பாடம். 1

1784. களவு பொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார் ;
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையிஞர் ; மனைப்பா லுள்ள
அளவைக ணிறைகோன் மக்க ளாவொடு மேதி மற்று
உளவெலா மரசி ஞமஞ் சாற்றுமவ் வொழுக்க லாற்ருர் ; ௨

(இ - ள்) களவு...காய்ந்தார் - களவும், பொய்யும், காமமும், கோபமும் முதலாகிய எல்லாக் குற்றங்களையும் ஒழித்தவர் ; வளமிகு...நிலையிஞர் - வளம் மிகுந்த இல்லற வாழ்க்கையில் நின்றவர் ; மனைப்பால்...ஆற்ருர் - வீட்டினிடத்துள்ள முகத்தல் - நீட்டல் - முதலிய அளவுக் கருவிகளும், துலைக்கோல் போன்ற எடுத்தளவைக் கருகளும், மக்களும், பசுக்களுடனே எருமைகளும், மற்றும் உள்ள எல்லாமும் திருநாவுக்கரசு நாயஞருடைய திருநாமம் சூட்டி அழைக்கும் அவ்வொழுக்க நெறியின் நின்றவர் ;

(வி - ரை) களவு...காய்ந்தார் - முன்பாட்டிற் குணத்தால் மிக்கார் என்றுரைத்த தன்மையினைத் தொடர்ந்து, நற்குணங்களை மிக்குடையோரும் தீக்குணங்களையும் ஒரோவழி உடையராயிருப்பக் காண்டுமாதலின் அவ்வையப்பாட்டினை நீக்குதற்கு, ஈண்டு இவ்வாறு தீக்குணங்களையெல்லாம் அறவே யொழித்தவர் என்றுறுதி கூறிஞர். குணத்தின் என்று வாளா கூறியதுபோலன்றி, களவு - முதலிய என்று எடுத்துக்காட்டியும், முற்றும்மை தந்தும், காய்ந்தார் என்று வலியுறுத்தியும் கூறிஞர். ஒரு நம்பி என்ற முதனூற் கருத்தை விரித்தவாறு.

களவு - பொய் - முதலிய குற்றம் - "அறவிது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம்" (1811); "இப்போ திங்கவ ஞதவான்" (1814) எனவரும் பிற்சரித

விளைவுகளில் உலகநிலையின் நிகழக்கூடிய ஐயப்பாடுகளைக் குறித்தன என்று இங்கு ஆராய்ச்சி செய்வாருமுண்டு. அவ்வாறல்லாமை மேல் ஆண்டு விளக்கப்படும்.

களவு - பிறன் பொருள் வெளவுதல்; போய் - மெய்ம்மையின் மாறுகோள்; கோபம் - தகாத சினம்; காமம் - தீயவற்றில் விருப்பம்.

நிறைகோல் மக்கள் - "தக்கார் தகவில ரென்ப தவரவ, ரெச்சத்தாற் காணப் படும்" (குறள்) என்றபடி தமது தகவினை அறிதற்குத் துணைசெய்யும் துலாக்கோல் போன்ற மக்கள் என்பதும் குறிப்பு. இச்சரிதவிளைவினுள்வரும் அப்பூதியாருடைய முதல் மகனது தன்மைகளைக் குறிப்பினு லறிவித்தபடியுமாம்; (1806—1809 பாட்டுக்கள் பார்க்க); அளவைகளாகிய நிறைகோல் என்று கூட்டியுரைப்பர் முன் உரைகாரர். அளவைகள் என்றமையால் அக்கருவிகள் எல்லாம் அடங்குமாதலானும், நிறை கோலினை வேறு எடுத்துக்காட்டச் சரித இயைபும் சிறப்புமின்மையானும் அது பொருந்தாமை யறிக. அளவைகளுக்கு இவ்வாறு உயர் பெயரிடும் வழக்கு முற் காலக் கல்வெட்டு முதலிய சரிதச் சான்றுகளாலறிக.*

மக்கள் ஆவோடு மேதி - இவை உயிர்ச் சார்புகள். (முன் சொன்ன அளவை முதலியவை உயிரில் பொருட் சார்புகள்.) சிறப்புப்பற்றி மக்களை முதலில் வைத் தார். ஆவோடு மேதி - என்று ஒடு வுருபை ஆவுடன் சேர்த்தியதும் சிறப்புப்பற்றி.

மற்றும் உள ஏனைப் பொருட் சார்புகள். "திருநாவுக்கரசு திருவீதி" என்ற ஒரு கல்வெட்டுச் செய்தியால் இவ்வாறுள்ள வழக்கு உறுதிப்படுகின்றது. (403 21: திருவதிகை வீரட்டானம்).

அரசு - திருநாவுக்கரசு.

நாமம் சாற்றும் - நாமத்தை இட்டு அழைக்கும். அவையெல்லாம் நாமத்தை எடுத்துச் சொல்லும் என்ற குறிப்புமாம்.

ஒழுக்கல் ஆறு - ஒழுகும் நெறி. ஆற்றர் - நெறியின் நின்றவர்.

குற்றம் காய்ந்தார் - குணத்தின் மிக்காராதலின் அதன் பயனாகக் குற்றங் காய்ந் தனர் என்றும், அன்பினராயுள்ளாராதலின் அரசினுமம் சாற்றும் அவ்வொழுக்க நெறியினின்றார் என்றும் முன் பாட்டுக் காரணமும், இப்பாட்டுக் காரியமும் ஆக நின்றமுறை காண்க. குணம் - குற்றம் காய்வதனையும், கலந்த அன்பு - நாமமே சாற்றுவதனையும் விளைத்தன.

சாத்துமிவ் வொழுகலாற்றர்—என்பதும் பாடம். 2

1785. வடிவுதாங் காணு ராயு மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானு ரருளுங்கேட் டவர்நா மத்தாற்
படிநிகழ் மடங்க டண்ணீர்ப் பந்தர்கண் முதலா யுள்ள
முடிவிலா வறங்கள் செய்து முறைமையால் வாழு நாளில்; ௩

வேறு

1786. பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவு முடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினொடுந் திங்களூர் மருங்குவழி மேவுவார்; ௪

---

*" ......தக்ஷிணமேரு விடங்கன் என்னும் கல்லால் நிறை எடுத்தும், பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்தும்" (S. I. I. Vol. II No. 38 1014 A. D.) இராசராசர் காலத்துக் கல்வெட்டு முதலியவை காண்க.

1787. அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையி லருளுடையார்
உளமனைய தண்ணளித்தா யுறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போற் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவு நிழறருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார். ௫

1785. (இ - ள்) வடிவுதான் காணாராயும் - திருவடிவத்தினைத் தானும் காணாதவராயினும்; மன்னுசீர்...கேட்டு - நிலைபெற்ற சிறப்பினையுடைய திருநாவுக்கரசு நாயனாருடைய திருத்தொண்டின் திறத்தினையும், பெருமானார் வைத்த திருவருளினையும் கேட்டு; அவர் நாமத்தால்...செய்து - அவரது திருப்பெயரால் படி நிகழும் திருமடங்களும் தண்ணீர்ப் பந்தர்களும் முதலாக உள்ள முடிவில்லாத அறங்களைச் செய்து; முறைமையால் வாழும் நாளில் - அந்நியதியின் அமைந்து வாழ்கின்ற நாளிலே, ௩

1786. (இ - ள்) பொருப்பரையன்...திருநாவுக்கரசர் - மலையரசன் மகளாராகிய இளம்பிடி போன்ற பார்வதியம்மையாருடனணையும் சிவக்களிற்றினது திருப்பழனம் என்னும் தலத்தினைப் பணிந்து திருப்பணிசெய்யும் திருநாவுக்கரசர்; ஒருப்படு...விருப்பினொடும் - உடைய பெருமானது பிற பதிகளையும் ஒன்றுபட்ட காதலினால் வணங்கும் விருப்பினோடும்; திங்களூர் மருங்கு வழி மேவுவார் - திங்களூரின் பக்கத்தில் வழி வருவாராகி; ௪

1787. (இ - ள்) அளவில் சனம் செலவு ஒழியா வழிக்கரையில் - அளவில்லாத சனங்கள் சென்று கொண்டிருத்தலை நீங்காத நல்ல வழியின் கரையிலே; அருள் உடையார் உளம் அனைய தண் அளித்தாய் உறுவேனில் பரிவு அகற்றி - அருள் உடைய பெரியோர்களது உள்ளத்தைப்போலக் குளிர்ந்த கருணைத் தன்மையினையுடையதாய், உறும் வேனில் வெம்மையின் துன்பத்தையெல்லாம் போக்கி; குளம் நிறைந்த...பரப்பினதாய் - குளமும் நிறைந்த நீரினையுடைய தடமும் போலக் குளிர்ச்சி நீங்காது முழுதும் தங்கும் பரப்பினையுடையதாகி; வளமருவு நிழல்தரு தண்ணீர்ப்பந்தர் வந்து அணைந்தார் - வளம் பொருந்திய நிழலைத் தரும் தண்ணீர்ப் பந்தரினைவந்து அணைந்தனர். ௫

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவுபடுத்தி உரைக்க நின்றன.

1785. (வி - ரை) வடிவுதான் காணாராயும் - தான் - தானும். உம்மை வடிவும் கூட எனச் சிறப்பின்கண் வந்தது. காணாராயும் - கேட்டு - உம்மை எச்சவும்மை.

அடிமையும் - அருளும் - கேட்டு - (அதனால்) என்க. "ஆட்பா லவர்கட் கருளும் வண்ணமு மாதி மாண்பும்" (திருப்பாசுரம்.) அடிமை - அடிமைத் திறம். அடிமை செய்யும் பண்பும் தன்மையும்; அருள் - அவ்வடிமைத் திறத்திற்கு ஏற்றவாறு அருள் வைக்கும் இறைவனது அருட்பண்பு. அடிமை - அருள் - என்பன ஈண்டு முறையே உலகர் புறத்துக் காண நிகழ்ந்த புற நிகழ்ச்சிகளைக் குறித்தன. கேட்டு - அடியார் சொல்லக் கேட்டு; அடிமையும் அருளுமாகியவற்றைப் பேசுதலும் பிறவற்றைப் பேசாமையும் அடியார் செய்கை; ஆதலின் "என்னை யாண்ட நிகரிலா வண்ணங்களும், சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து" (திருப்பல்லாண்டு) என்றபடி அவற்றைப் பேசக் கேட்டலும், பிறவற்றைக் கேளாமையுமுடைய அடியார்கள் அவற்றைக்கேட்டு ஈடுபட்டு மனமுருகுவர் என்க.

கேட்டு - அவர் நாமத்தால் அறங்கள்செய்து - முன்னர், அளவைகள்...மேதி மற்றும் அரசின் நாமம் சாற்றும் அவ்வொழுகலாறு விளைந்தது முன்னைத் தவத்தாலும்

பொதுக் கேள்வியாலும் ஆயிற்று என்றும், இங்கு நாமத்தால் அறங்கள்செய்து வாழ்ந்தது அடிமையும் அருளும்பற்றிய சிறப்புக் கேள்வியால் என்றும் கொள்க. முன்னர் விளைந்த அன்பு மேன்மேலும் கேட்கக் கேட்க முதிர்ந்து மேலும் மேலும் பத்திச் செயல்களுக்குக் காரணமாயிற்று என்பதாம் - ' முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்...'' (தாண்) என்ற நாயனாரது திருவாக்கே இவ்வாறு அன்புக் கேள்வியால் அன்பு பெருகி முதிரும் நிலையினை விளக்குதல் காண்க. முன்னர், உயிர்ச் சார்பு பொருட் சார்புகளுக்கு அரசுகளின் நாமஞ் சாற்றி அழைத்தல் தாம் பல காலும் சொல்லிப் பயன்பெறும் பொருட்டும், அத்திருநாமத்தால் அறங்கள் செய்தல் தன்போற் பிறரும் பயன்பெறுதற் பொருட்டும் என இவ்வாறு அன்பு விரிந்து செல்லும் நிலையும் காண்க. நாமத்தாற் செய்தலாவது - அவரது திருநாமத்தை அறச் சாலையில் எங்கும் எழுதி இஃது அவரது தருமம் என வழங்க வைத்தல்.

மடங்கள் - தண்ணீர்ப் பந்தர்கள் - முதலாவுள்ள முடிவிலா அறங்கள் - நிலைபெற்ற அறங்கள். நிலைபேறுவது சிவனடிச்சார்பாகிய நிலைத்த பயனைத் தந்து நிற்றல். மடங்கள் - அடியார் இரவில் தங்குதற்கும், தண்ணீர்ப்பந்தர் வெளியில் இளைப்பாறுதற்குமாம். திருநாவுக்கரசர் பெயரால் திருமடங்களைப் பலர் அமைத்தது பழங் கல்வெட்டுக்களால் அறியப்படும். (திருச்சி - 644 ; தஞ் - 843 ; செங் - 1131 ; தஞ் - 219 - 17 ; அப்பர் புரா - சரித ஆராய்ச்சிக் குறிப்பு - பக் - எஎரு பார்க்க). மடங்கள் - தண்ணீர்ப் பந்தர்கள் - சாலை - குளம் - சோலை முதலியவை பசு புண்ணியங்களாகிச் சுவர்க்காதி போகங்களைப் பயப்பித்துப் பின்னும் பிறவிக் கேதுவாவன ; ஆனால் இங்கு அவை வாகீசராகிய குரு வழிபாட்டின்பாற்பட்டுச் சிவனடிமைத்திறத்தினிற் செய்யப்பட்டமையால் அவ்வாறு ஏனையோர் செய்வன போலப் பசுபுண்ணியமா யொழியாது பதிபுண்ணியங்களாக மாறி முத்திக் கேது வாயின. ஆதலின் முடிவிலா அறங்கள் என்றார்.

முறைமையால் - ஆண்டானடிமைத் திறத்தினிற்கும் அம்முறைமையால்.

அன்பர் - வாழுநாளில் - திருநாவுக்கரசர் - திங்களூர் - மருங்கு - வழிமேவு வாராய்த் - தண்ணீர்ப் பந்தர் வந்தணைந்தார் - என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. 3

1786. (வி - ரை) திருநாவுக்கரசு நாயனார் புராணத்தினுள் அப்பெருமான் திங்களூருக்கு எழுந்தருளும் சரிதப்பகுதி கூறும், " நாவினுக்கு வேந்தர்தா மேவினார், செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளூர் திங்களூர் '' (1465) என்ற, 200வது பாட்டினைத் தொடர்ந்து எடுத்து அச்சரிதத்தினையே அப்பூதியார்பாற் சரித விளைவினை விரிப்ப தாதலின் அந்த யாப்பினையே தொடர்ந்து எடுத்துக்கொண்ட கவிநயமும் அமைதியும் காண்க.

பொருப்பரையன் மடப்பிடி - பார்வதி. பிடி - பெண் யானை. பிடி போன்றார். விநாயகரது திருவவதாரத்தின் பொருட்டுச் சித்திரமாக எழுதப்பட்ட பிடிவடிவ ஓங்காரத்தை அம்மையார் திருநோக்கம்பற்றிய வரலாறு காண்க. " பிடியத னுருவுமை கொள '' (தேவா). சிவக் களிறு - களிறு - ஆண் யானை. பிடி என்றதற்கேற்பக் களிறு என்றார். பிடி வடிவ ஓங்காரத்தினின்று திருநோக்கருளினால் விநாயகரை வரவருளினார். " வழிபடு மவரிடர் கடிகண பதிவர அருளினன் '' என்ற பயன் குறிப்பாலுணர்த்தியது காண்க.

பணி செய் - கைத்திருத்தொண்டும் சொன்மாலை புனைதலும் செய்த.

ஒருப்படு காதலில் - பதி-வணங்கும் - ஒருப்படுகாதல் - மன வொருமைப்பாடு வருவதற்குக் காரணமான காதல். ஒருப்படுதற்குப் பதி வணங்குதல் சாதனமாம் என்பதும் குறிப்பு. உடையவர் - தலைவர்.

திங்களூர் மருங்கு - திங்களூரின் பக்கத்து.

வழி மேவுவார் - வழியிற் செல்வாராகி ; முற்றெச்சம். மேவுவார் - அணைந்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. உடையவர் பதி வணங்கும் கருத்தினோடு வழி மேவினாரேயன்றித் திங்களூர் மேவுங் கருத்திலர் என்பதும், ஆயினும் அங்குச் சேர்ந்து நிகழ்ந்தபின் வரலாறுகள் உடையவ ரருளின்வழி நிகழ்ந்தன என்பதும் குறிப்பு. 4

1787. (வி - ரை) இப்பாட்டு அப்பூதியடிகள் செய்த தண்ணீர்ப் பந்தரின் சிறப்பினை அவ்வாறே நம் கண்முன் தோன்றும்படி எழுதிக் காட்டுகின்ற ஓவியம். அன்றியும், அவ்வாறு தண்ணீர்ப் பந்தர் இயற்றுவோர் பார்த்துப் படியெடுத் தொழுக மனங்கொள்ளும் படிப்பினையும் கற்பிக்கின்றது.

அளவில் சனம் செலவு ஒழியா வழிக்கரையில் - தண்ணீர்ப் பந்தர் வைப்பதற்குத் தகுதியான இடம் தேடிக்கொள்ளுதல் முதலிற் செய்யவேண்டியதாதல் குறிப்பு. Site selection என்பர் நவீனர். நீரும் நிழலும் வேண்டுவார் வழி போவாராதலின் அவர் செல்லும் வழியில் இது செய்யத் தக்கது. பெறுவோரிடத்தை நாடிச் செய்வோர் சென்று அறஞ் செய்தலும், கேளாமலே செய்தலும் அறத்தின் சிறப்பாம். அளவில் சனம் - என்றதனால் மக்கள் திரள் திரளாகச் செல்லுதலும், செலவு ஒழியா என்றதனால் நாளில் எந்நேரமும் செல்லுதலும், வழிக் கரையில் என்றதனால் அவ்வழியின் முன்புற மருங்கில் அமைதலும் பெறப்பட்டன. Much frequented public high way என்பர் நவீனர். இரவிலும் சனம் சென்றுகொண்டிருத்தல் நல்ல பெரிய சாலைகளில் காணப்படும் இயல்பு. அந்நேரத்திலும் வழி போவார் தங்கி இளைப்பாறு மிடமாய் இப்பந்தர் உதவுமென்பது. இங்கு அப்பூதியார் தாம் தங்கும் இடத்திற்கருகாக இடம் தேடாது அதற்குச் சில தூரத்தில் சனம் செலவொழியா வழிக் கரையை நாடிப் பந்தர் அமைத்தது இக்கருத்து. ஆனால் அவரது திருமனையை இதனை நணுக வைத்துப் பலவாறும் தாமே கண்காணித்து வந்தனர் என்பதும் (1790) அறியப்படும்.

வழிக்கரை - இவ்வழி திருநல்லூரிலிருந்து திருப்பழனம் வழியாகச் செல்லும் பெரும் பாதை என்பது கருதப்படும். காவிரிக்கு தென்கரையில் இத்தண்ணீர்ப் பந்தர் இருந்த இடம் இன்றும் அறியப்பட்டு விழாக் கொண்டாடப்படுகிறது.

அருளுடையார் உளம் அனைய தண் அளித்தாய் - அகற்றி - என்க. அருளுடையார் - எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோர். பரிவு அகற்றுதலில் நீர்ப் பந்தர் அருளுடைய பெரியோர்களது உள்ளம்போலக் குளிர்ந்த அளியுடன் விளங்கிற்று. பந்தர் அளியுடன் பரிவு அகற்றுதலாவது அங்குள்ள எல்லாப் பொருள்களும் வந்தடைந்தார்களது பரிவு மாற்றுதலில் ஒத்துக் குளிர்ச்சிசெய்து நிற்றல். அங்குள்ளாரது அளியுமாம். கருணையுள்ள பெரியோர் உள்ளம் பந்தரின் அளியினுக்கு உவமையாயிற்று. வினைபற்றி வந்த உவமம். "பெரியோ ருள்ளம் போல வோங்குநிலைத் தன்மையவாய்" (1165) என்ற விடத்துரைத்தவை காண்க.

குளம் நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய் - குளமும் தடமும் போல என்க. குளம் - இயற்கை யமைப்புக்களுடைய பெரு நீர் நிலை ; தடம் - அவ்வப்போது நீர் நிறைக்கப்படும் சிறு வாவி ; குளம் - பயிர்களுக்கும், தடம் - ஏனை மக்கள் முதலிய உயிர்களுக்கும் ஆவன. குளிர்தூங்கும் பரப்பு - குளிர்ச்சி நிலைத்

துள்ள நீர்ப் பரப்பு. தூளம் - வெல்லம் என்ற குறிப்பும் தந்து பானகம்போன்று இனிய நீர்கொண்டதோர் நீர் நிலை என்ற பொருளும்பட நிற்றல் காண்க. வெயிற் காலத்து நீர்ப் பந்தர்களில் வெல்லங் கலந்த பானகம் அளிக்கும் வழக்கும் காண்க.

வளமருவு நிழல் தரு - தண்ணீர்ப் பந்தரினில், குளிர்ந்த நீரும் அதனோடொப்பக் குளிர்ந்த நிழலும் வேண்டப்படுவன. வழிவரும் தாகத்தைப் போக்க நீரும், வெப்ப விளைப்புப் போக்க நிழலும் உதவுவன.

தண்ணீர்ப் பந்தல் அறம் செய்வோர் இப்பாட்டிற் கண்ட இன்றியமையாத தன்மைகளைக் குறிக்கொண்டு அறமியற்றுவார்களாயின் நலம் தரும்.

வழிமேவுவார் - வந்தணைந்தார் - அவ்வழிச் செல்வார் இதனை வந்தணையாமல் விலகிச் செல்லலாகா வகையில் அமைந்தது என்பதாம்; பதிவணங்கும் விருப்பி னுடன் செல்லும் நாயனார் வழியில் தாகம் அயர்வு முதலியவற்றை நோக்காது செல் வது உணரப்படும் ஆதலின். 1569-வது பாட்டுப் பார்க்க. 5

1788. வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமுமாந் தண்ணீரும் பார்த்தருளிச்,
சிந்தைவியப் புறவருவார், "திருநாவுக் கர"செனும்பேர்
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார். சு

(இ - ள்) வந்தணைந்த...பார்த்தருளி - அவ்வாறு அங்கு வந்து அணைந்த திரு நாவுக்கரசு நாயனார் தண்ணிதாய் மெல்லிதாய் வீசு மிளந்தென்றற் காற்றினையுடைய குளிர்ந்த பந்தருடனே அமுதமாகிய தண்ணீரும் பார்த்தருள்செய்து; சிந்தை வியப்பு உற வருவார் - திரு மனத்தினுள் வியப்புப் பொருந்த வருவார்; "திரு நாவுக்கரசு" எனும்...கண்டார் - திருநாவுக்கரசு எனும் பெயரைச் சந்தம் பொருந்த எழுதியதனை அங்கு எப்பக்கத்திலும் தாம் கண்டருளினர்.

(வி - ரை) மந்தமாருதம்...பார்த்தருளி - மந்தமாருதம் - மெல்லிதாய் வீசும் இளந்தென்றல். தண்ணீர்ப்பந்தர் நிகழ்வது வேனிற் காலமாதலால் அது இளந் தென்றல் வந்துலவும் காலமாம். "குளிர்சார விடைவளர்ந்த கொழுந்தென்றல், அங்கணையத் திருவாரூ ரணிவீதி யழகரவர், மங்கலநாள் வசந்தமெதிர் கொண்டரு ளும் வகை" (ஏயர் - புரா - 270). சீதப்பந்தர் - குளிர் நிழலுடைய பந்தர்.

அமுதமுமாம் தண்ணீரும் - அமுதமுமாம் - வேனிற் பரிவாகிய தாகம் தீர்த்து உயிரைக் காத்தலேயன்றிச் சுவையாலும் அமுதமாம் நீர் என்பார் அமுதமுமாம் என்றார். உம்மை - பயனலன்றிச் சுவையானும் என இறந்தது தழுவிய எச்சம். தண்ணீரும் - பந்தருடனே நீரினையும்; உம்மை எண்ணின்கண் வந்தது. பார்த்தருளி- காற்றும் நிழலும் நீரும் என்றவற்றைப் பொருளாகக் காணாராயினும் ஓரருளிப்பாட் டின் குறிப்பினைப் பார்த்தனர் என்பது.

சிந்தை வியப்பு உற - வியப்பாவது பந்தர் அமைந்த இடத்தின் தகுதியும், பிற அமைப்புக்களின் சீரும் நலமும், இத்துணையும் நாடிவைத்த கருத்தின் அகலமும், பிறவும் கண்டு களி கூரும் மன நிகழ்ச்சி.

எனும் பேர் எம்மருங்கும் சந்தமுற வரைந்ததனைத் தாம் கண்டார் - என்க.

எம்மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும் காணும்படியாக. சந்தமுற - சந்தம் பொருந்த - புகழ் விளங்க என்றலுமாம்.

வரைந்ததனைத்தாம் கண்டார் - வரைந்திருத்தலைத் தாமே கண்டனர். தாம் - பிறர் சொல்லக் கேட்டலன்றித் தாமே நேரில்; தன்னை என்பது தனை என நின்ற

தென்றுகொண்டு வரைந்ததன் பொருளாகிய தன்னையே தாம் கண்டனர் என்ற அரியதொரு பொருள் தர நிற்பதும் காண்க. "காண்பிட மேதெனிற், புண்ணியன் புகலூருமென் னெஞ்சுமே" (குறுந்); "அம்பலத் தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே" (குறுந்); "தொண்ட ரகமலாற் கோயிலில்லை யைய்னை யாறனுர்க்கே" (நேரிசை); என்றபடி இறைவரை அடியார்கள் மனத்தினுட் காணுமாறுபோல, நாயனுரை அப்பூதியார் திருமனத்தினுள்ளும் அவரது தண்ணீர்ப் பந்தரினும் காணலாம் என்க. தம்மை மறந்து சிவனையே நினைக்கும் நாயனுர் தம்மை ஈண்டுக் காணலாயினர் என்பதுமாம். "சிக்கெனப் பிடித்தேன்" "புறம் போக வொட்டேனே" என்பவை இங்குப் பொருந்துவன. 6

1789. "இப்பந்த ரிப்பெயரிட் டிங்கமைத்தா ரியா"ரென்ருர்க்
கப்பந்த ரறிந்தார்க "ளாண்டவர செனும்பெயராற்
செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளார் செய்தமைத்தார்;
தப்பின்றி யெங்குமுள சாலைகுளங் கா"வென்ருர். எ

(இ - ள்) இப்பந்தர்...என்ருர்க்கு - "இந்தப் பந்தரை இந்தப் பெயரை இட்டு இங்கே அமைத்தவர் யாவர்?" என்று கேட்ட நாயனுருக்கு; அப்பந்தர் அறிந்தார்...கள் - அந்தப் பந்தரின் வரலாற்றை அறிந்த அங்கு இருந்தவர்கள்; "ஆண்ட அரசு எனும் பெயரால்...கா" என்ருர் - ஆண்ட அரசு எனும் பெயரினுலே சொல்லுதற் கரிய சிறப்புப் பொருந்திய அப்பூதியடிகளார் செய்து அமைத்தனர்; தவறுதல் எதுவும் இன்றி இன்னும் இவ்வாறே சாலை, குளம், சோலை இவைகளும் எங்கும் உள்ளன என்ருர்.

(வி - ரை) இப்பந்தர் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யார் - இப்பந்தர் - இங்கு - இகரச்சுட்டுக்கள் பந்தரின் சிறப்பையும் இடவமைதியின் நலத்தையும் குறித்தன. இப்பெயர் - எதிர்பாராத இந்தப்பெயர் என்க. யார்? - இவ்வினு அங்குள்ளாரைப் பொதுப்பட நோக்கி அரசுகள் நிகழ்த்தியது. தமக்குள் தாமே வினவிக் கொண்டனர் என்றலுமாம். இகரச் சுட்டுக்கள் அரசு அப்பந்தரினுள் இருந்த அணிமை குறித்தன; "மச்சிது செய்தார் யாரோ?" (757) என்புழிப்போல. சிறந்த இந்த அறத்தினைச் செய்த நல்லோர் தமது பெயராற் செய்யாது வேறு பெயராற் செய்த கருத்தை அறிய விரும்பினரன்றித் தம்மைப் பற்றிய பெருமையாலன்று என்க. "இதற்கென்னே கருத்து?" (1790) என்றதும், "வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்?" (1794) என்றதும் காண்க.

"ஆண்டவரசு...கா" என்றர் - இது அங்கிருந்தார்கள் சொல்லியது. அவர்கள் அந்தப்பந்தரினை-அதன் வரலாற்றினை - அறிந்தவர்கள் என்பது. அவரைச் சார்ந்தார் புகழ்ச்சிமொழி யன்றி அப்பந்தர் முதலிய அறங்களை உள்ளவாறறிந்தோர் எடுத்துக்கூறிய உண்மை மொழி என்பார், அவரை அறிந்தார் என்னுது அப்பந்தர் அறிந்தார்கள் என்ருர்.

ஆண்ட அரசு என்னும் பெயரால் செய்தமைத்தார் - கா - என்று பிரித்து, அரசே! உமது திருப்பெயரால் செய்தனர்; அவரைக் காப்பீராக" எனத் தம்மை அறியாமலே அவர்கள் வாக்கில் வந்த உண்மையின் தொனிக்குறிப்பும் காண்க. 702—715 முதலியவை காண்க. இவர்கள் திருநாவுக்கரசர் பெருமானை நேர் கண்டு பேசப்பெறும் பேறு பெற்ற பெரு மக்களன்றே?

அப்பூதியடிகளார் - முன்னர்த் திருநாவுக்கரசு நாயனுர் புராணத்தில் கூறியதன் தொடர்ச்சியாக இப்புராணங் கூறினுராதலின் நாயனுரது பெயர் தானும் இதுவரை

கூறுது, இங்கு அப்பூதியார் அறிந்தார்களது வாக்கில் வைத்து அப்பருக்கு விடை கூறு முகத்தால் முதன் முறையாகக் கூறிய சிறப்புக் கவிநயமும் காண்க. ஏழாவது பாட்டில் அமைந்த தெய்விகச் சிறப்பும் கருதுக. "யார்?" என்ற வினுவுக்கு அவர் பெயரையும் பிற நலன்களையும் உடனே சேர்த்துக் கூறி மேல் வினுவுக்கு இடமின்றிச் சொல்லிய விடையின் அமைதியும் காண்க.

தப்பின்றி எங்கும் உள - வேண்டிய எவ்விடத்தும் தவருதும், அமைக்கவேண்டிய முறைகளில் தவருதும் உள்ளன.

சாலை - நிழல் அமைந்த வழிகள். கா - சோலைகள். குளம் - தண்ணீர்ப் பந்தரின் வந்து பரிவு தீர்ந்தார்களேயன்றி, மற்றும் எல்லாரும் எவ்வுயிரும் எக்காலத்தும் பிறிதொருவர் உதவி வேண்டாது தம்மிச்சையாற் பரிவு தீர்த்துக்கொள்வதற்கும் பயிர்களுக்கும் உதவும்பொருட்டும் காவும் குளமும் அமைத்தனர் என்க.

அறிவார்கள்—ஆண்டவரசின் பெயரால் —என்பனவும் பாடங்கள். 7

1790. என்றுரைக்க, வரசுகேட் "டிதற்கென்னே கருத் "தென்று
நின்றவரை நோக்கி," யவ ரெவ்விடத்தா" ரெனவினவத்,
"துன்றியநூன் மார்பருமித் தொல்பதியார்; மனையின்கட்
சென்றனரிப் பொழு ;ததுவுஞ் சேய்த்தன்று ; நணித் "தென்றார்.

(இ - ள்) என்று உரைக்க அரசு கேட்டு - மேலே கண்டவாறு அவர்கள் சொல்ல அதை அரசுகள் கேட்டு; இதற்கு...வினவ - இதற்கு என்ன கருத்து என்று எண்ணிக்கொண்டு அங்கு நின்றவர்களை நோக்கி "அவர் எவ்விடத்துள்ளார்?" என்று கேட்க; துன்றிய...என்றார். "பூணுநூல் பொருந்திய மார்பினையுடைய அவரும் இந்தப் பழய பதியினராவர்; இப்பொழுதுதான் மனையின்கண்ணே சென்றனர்; அந்த மனை உள்ள இடமும் நெடுந்தூரமன்று; அணிமையிலுள்ளது" என்றனர்.

(வி - ரை) இதற்கு என்னே கருத்து - என்று - இவ்வாறு இப்பெயரால் இத்தருமங்களைச் செய்வதற்கு ஏதோ கருத்து இருத்தல்வேண்டும்; அது யாது என்று தம்முள் எண்ணிக்கொண்டு. என்று - என்றெண்ணி.

எவ்விடத்தார் என வினவ - இடம் - இருக்கும் பதியும், மனையும் என்ற இரு பொருளும் தருதலின் அவ்விரண்டும்பற்றி அவர்கள் விடை கூறினர்.

"துன்றிய...நணித்து" என்றார் - "எவ்விடத்தார்?" என்ற வினுவினுல் அவரைக் காண விரும்பினர் இவ்வடியவர் என்றுகொண்ட அவர்கள் அவ்வினுவுக்கு உள்ள விடைமட்டி லமையாது அவர் சென்று காண்பதற்குரிய எல்லாச் செய்திகளையும் தொகுத்து மேல் வினுக்களுக்கு இடமில்லாதவாறு கூறிய அறிவுடை நயம் காண்க. அடியார்களிடத்துக்கொண்ட அன்பின் திறமும் குறிப்பு. 116-வது பாட்டில் மந்திரி கூறும் விடையின் குறிப்புக்கள்போலக் கண்டுகொள்க. துன்றிய நூன் மார்பர் - என்றதனுல் அவர் மறையவர் மரபினர் என்ற அடையாளம் கூறியபடி; இத்தொல்பதி - இவ்வூரினர் என்றதனுல் சென்று காணும் மனவெழுச்சியைப் பலப்படுத்தியபடி; மனையின்கண் இப்பொழுது சென்றனர் என்றதனுல் இதுகாறும் இங்கிருந்து அடியவர்க்கு ஆவனவற்றைத் தாமே செய்தனர் என அவரது அறத்தின் இயல்பும், எளிமையும், அன்பும் புலப்படுத்தி அவரைக்காணும் ஊக்கத்தை மிகுதிப்படுத்தியபடி; அதுவும் சேய்த்தன்று - நணித்து - என்றதனுல் அதனை விரைவுபடுத்திச் செல்லும் அடையாளங் காட்டி வழிப்படுத்தியபடி என்றிவ்வாறு கண்டுகொள்க.

என நிறைந்து—என நினைந்து—என்பனவும் பாடங்கள். 8

1791. அங்ககன்று முனிவரும்போ யப்பூதி யடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக, வுள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் "செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் றமரொருவ" ரெனக்கேட்டு நண்ணினார். சு

(இ - ள்) அங்கு அகன்று......சார்வாக - அவ்விடத்தினின்றும் நீங்கி முனிவ ராகிய திருநாவுக்கரசு நாயனாரும் போய் அப்பூதி யடிகளார் வாழும் திருமனையின் முன் கடையிற் சார்ந்தாராக; உள்ளிருந்த திங்களூர் மறைத் தலைவர் - மனையி னுள்ளே சென்று தங்கியிருந்த திங்களூர் வேதியர் தலைவராகிய அப்பூதியார்; செழுங் கடையில்......எனக் கேட்டு - செழிப்புடைய தமது மனை முன் கடையில் நமது சிவ பெருமானது அடியவர் ஒருவர் வந்து அணைந்தனர் என்று சொல்லக் கேட்டு; நண்ணி னார் - மனையின் உள்ளிருந்து முன் கடையில் வந்து சேர்ந்தனர்.

(வி - ரை) அங்கு - அங்கு நின்றும்; தண்ணீர்ப் பந்தரினின்றும்; ஐந்தனுருபு தொக்கது. முனிவரும் - முனிவர் - திருநாவுக்கரசர். "ஞானத் தவமுனிவர்" (1266) பார்க்க. இவ்வாறு தமது பெயரின் விளக்கத்தாற் போந்த புகழ்ச்சியின் விருப்பத்தாற் போந்தனர் என்று மக்கள் எண்ணி அபசாரப்பட்டு விடாதபடி, அற் றன்று; இவர் உலக நிலை எல்லாம் முனிந்த பெரு முனிவர்; சிவனை முன்னுதலே யன்றி, வேறொன்றும் முன்னாத பெரு முனிவர்; ஆதலின் அவர் சென்ற கருத்து வேறு; திருவருளும் அன்பின்றிறமும் வெளிப்படும்படி அருள் கூட்டச் சென்றனர் என்பார் முனிவரும் என்றார். உம்மையும் இச்சிறப்புக் குறித்தது. பின்னர் அப்பூதி யார் முனிந்து சில கூறுதற் கிடமாக நிற்பவர் (1795 - 1797) என்றதும் குறிப்பு.

கடைத்தலை - முன்றில். இவரது கடை - கால்; அவரது தலை - முன் சார் வாக; திருவடி அவரது தலைமுன் சார்வாக அமைய என்ற குறிப்பும் காண்க.

முன் சார்வு ஆக - கடைத்தலையின் முன்பு சார; முன்னரே சார்வாகக் கொண்ட நிலை இப்போது வெளிப்படக் கைகூடி உளதாக. ஆக - ஆக்கம் தருவதாக - என்பதும் தொனி.

உள்ளிருந்த - மறைத் தலைவர் - கேட்டு - நண்ணினார் - அப்போதுதான் மனைக் குட் சென்றமர்ந்த வேதியர் வெளியில் வந்தனர். இதுவரை உலகறியவாராது உள்ளே ஒடுங்கியிருந்தது அவரது பெருமை; இப்போது வெளிப்பட நண்ணலாயிற்று என்ற குறிப்பும் காண்க. கேட்டு - கேட்டலுமே; தாம் அப்போது தான் மனையிற் போந்தனராயினும் வந்த காரியத்தையும் அயர்வையும் பாராது ஓர் அடியவர் வந்தார் எனக் கேட்டவுடன் வெளிப்போந்தமை அவரது அடியார்க்கடியாராந் தன்மையின் உறைப்பினைக் காட்டுவதாம்.

செழுங்கடை......என - அடியார்கள் போதருமிடமாதலின் செழுங்கடை என்றார். பிரான் தமர் - அடியவர்: "எம்பிரான் றமரேயோ" (318): பெருமா னால் தம்மவராக ஆட்கொண்டருளப் பெற்றவர். ஒருவர் - ஒப்பற்றவர் என்ற குறிப்புமாம்.

எனக்கேட்டு - அடிகளைச் சூழ இருந்தவர்களும் அன்பின்றிறத்தால் மேம்பட் டார்களாதலின் முனிவர் சார்ந்த செய்தியை உடனே அறிவிக்க அது கேட்டு என்க.

நண்ணினார் - வெளியே மனைக்கடையில் வந்தனர். 9

1792. கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியு மரசினெதி ரந்தணனர்
"முடிவிறவஞ் செய்தேன்கொன்; முன்பொழியுங் கருணைபுரி
வடிவுடையீ ரென்மனையில் வந்தருளிற் றென்!"னென்றார். கO

(இ - ள்) கடிது...பணிய - (அப்பூதியார்) விரைவில் வந்தணைந்து வாகீசருடைய திருவடிகளை வணங்க; மற்றவர்...எதிர் - அவர் தமது திருவடிகளில் பணிந்து வணங்குதற்கு முன்னமே தாம் பணிகின்ற திருநாவுக்கரசர் முன்பு; அந்தணனர் - அந்தணராகிய அப்பூதியார்; முன்பொழியுங் கருணைபுரி வடிவுடையீர்! - முன்னே பொழிகின்ற கருணை புரியும் திருவடிவினையுடைய பெரியீரே!; முடிவில் தவம் செய்தேன்கொல்! என் மனையில் வந்தருளிற்று - முடிவில்லாத தவத்தை முன்னம் செய்திருந்தேன் போலும் தேவரீர் அடியேனது மனையில் வந்தருளிச் செய்தது; என்? என்றார் - தேவரீரது வருகை என்ன அதிசயம்! என்று கேட்டனர்.

(வி - ரை) கடிது அணைந்து-அடியார் அடைந்ததனைக் கேட்டவுடன் விரைந்து வந்தணைந்தமை அன்பின் உறைப்பு.

கழல் பணிய - திருவேடத்தைச் சிவனெனவே கண்டு வழிபடும் தன்மை குறித்தது. "நேய மலிந்தவர் வேடமும்...அரனெனத் தொழுமே" (போதம் - 12 சூத்). "வடிவுடையீர்!" - என்றதன் கருத்துக் காண்க. ஆளுடைய பிள்ளையாரும் "தொண்டர் திருவேட நேரே தோன்றியதென்று தொழு"தனர் (திருஞான - புரா- 271) என்பதும் ஈண்டுக் கருதுக. 1405-ல் உரைத்தவையும் பார்க்க.

முன் பணியும் அரசு - யாவர்க்கு நன்றும் பணிதலவருள்ளுஞ், செல்வர்க்கே செல்வந் தகைத்து" (குறள்) என்றபடி அடியார் யாவர்க்கும் பணிவுரியது. "தாழ் வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயம் சாரும் ஊழ்" (சித்தி 2-91). ஆனல் அடியவர் கட்கரசராகிய நாயனருக்கு அது மிகவும் உரிமையுடையதாம் என்ற குறிப்புப்பெற "முன் பணியு மரசு" என்றார்.

அவர்தம் அடிபணியா முன்பணியும் அரசு - திருவேடங் கண்டு அடியவரைப் பணிய அப்பூதியார் முற்பட்டனர்; அடியார்பால் அவரினும் அன்பு மிக்க அரசுகள் அவரைப் பணிய அதனினும் விரைந்தனர் என்க. ஒருவரை ஒருவர் ஒரே காலத்தில் பணிதல். இவ்வாறு பணிதலில் ஒருவரை ஒருவர் முற்படுதல் அடிமைத் திறத்தின்பால் வைத்த அன்பின் உறைப்பு. "முன் பிறைஞ்சின ரியாவரென் றறியா முறைமையால்" (244) என்றது காண்க. "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம்" என்பது நாயனரது மனநிலை. அப்பூதியாரது அன்பின்றிறம் அவரது வேடத்தாலும் அறியக் கிடப்பதொன்றென்க.

முடிவில் தவஞ் செய்தேன்கோல்......மனை வந்தருளிற்று - மனையில் தாமே வந்தருளுதற்கு எல்லையில்லாத தவம் முன்பு செய்திருந்தாலன்றிக் கூடாது; அவ் வாறு தவஞ் செய்ததை யானறியேன்; ஆயினும் இப்பேறு கைகூடப் பெற்றமையால் யான் தவஞ் செய்தேனகல் வேண்டும் என ஐயப்பாடும், அனுமானத்தாற் போந்த துணிபும் உடன் கூறுவார் செய்தேன் கோல்? என்ற வினவகையாற் கூறினர். தாம், அவரைக் காணும் தன்மையானன்றி உணர்வு வகையால் தியானப் பொருளாக் கொண்டு அவரது திருநாமத்தையே சிந்தித்திருந்ததுவே பெருந் தவமாக அத்தவப் பயனைக் கைகூடச் செய்தது என்ற உண்மை அவர் அறியாமலே அவர் திருவாக்கிற் போந்தது. முடிவில் தவம் என்றமையால் இனிச் சிவன் கழல் சேரும் நிலையினைப் பெறும் வரையில் அத்தவமே செய்து வருதலும் குறிப்பு.

"அறியா முன்னே" (1783) என்றவிடத்தில் போந்த முன்னைத் தவத்தின் குறிப்பும் கருதுக. இத்தவம், முன்னைப் பிறவியிற் செய்தனவும், இப்பிறவியிற் செய்தனவுமாம். இப்பிறவியிற் செய்தவை போதா; ஆதலின் முன்னும் செய்திருத்தல் வேண்டுமென்றது குறிப்பு. முடிவில் என்ற குறிப்புமது.

**முன் பொழியும் கருணை புரி** - முன் - முன்பாக. தேற்றமாக அறியும்படி என்றும், கருணை பெறுவோர் வந்து அடைந்து கேட்பதன்முன் என்றும் உரைக்கின்றது. அப்பூதியார் தேடிச் செல்லாது அரசுகள் தாமே மனைக் கடைத்தலையில் வந்தடைந்த அருளின் திறம் பற்றிய உண்மைக் குறிப்பு. பொழிதல் - மிகுதியாக மாரி பொழிவது போல வழங்குதல் என்பது குறிப்பு. புரிதல் - "எப்பொழுதும் மேற்கோடல்"; "போக்கு வரவு புரிய" (போதம். 2 - சூத் - சிற்றுரை).

**வடிவுடையீர்** - அரசுகளது திருவடிவின் காட்சியின் றுணையாலே அப்பூதியார் இத்துணையும் போற்றி வழிபட்டது.

"பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னுளமைத்தால், இவனெனைப் பன்னுளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே" (தனித்திருவி) என்ற அரசுகளது திருவாக்கின் இலக்கியமாகிய ஆண்டவரைப் போலவே, அரசுகள் தாமும் விளங்கிய தெய்வவருட் கருணைத் திறம் ஈண்டுக் கருதிப் போற்றற்பாலது.

**வந்தருளிற்று** - தாமே வந்தது; அருளிற்று - என, இனிச் செய்ய நிற்பதாகிய பேரருளின் றிறத்தையும் விரைவுபற்றி இறந்த காலத்தாற் கூறிய குறிப்புமாம்.

**என் !** - வினா. அதிசயக் குறிப்புப்பட வந்தது. ஈதென்ன அதிசயம் என்க. அது **முடிவில் தவஞ் செய்தேன் கொல்?** என்ற ஐயப்பாட்டினைத் தொடர்ந்து கூறியதனாலும் அறிக. இனி, **என் ?** என்றற்கு நீர் வந்த காரணம் என்னை? என்றுரைத்தலுமாம்.　10

1793. "ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றோம்; வழிக்கரையி னீர்வைத்த வாய்ந்தவளந்
தருகின்ற நிழற்றண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற வறம்பிறவுங் கேட்டணைந்தோ" மெனப்புகல்வார்,　கக

1794. "ஆறணியுஞ் சடைமுடியா ரடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரினும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணமென்கொல்?"
கூறு"மென வெதிர்மொழிந்தார் கோதின்மொழிக் கொற்றவனார்.　கஉ

1793. (இ - ள்) ஒரு......வருகின்றோம் - ஒப்பற்ற மாமேருமலையை வில்லாக வுடைய சிவபெருமானைத் திருப்பழனம் என்னும் தலத்தில் வணங்கிக்கொண்டு வருகின்றோம்; வழிக் கரையில்......கண்டு - வரும் வழியின் கரையில் நீர் வைத்திருக்கும் வாய்ப்புடைய வளத்தைத் தரும் நிழலையுடைய தண்ணீர்ப் பந்தரினைக் கண்டும்; அத்தகைமை......கேட்டு - அத்தன்மையாற் புரிகின்ற அறங்கள் பிறவற்றையும் கேட்டும்; அணைந்தோம் எனப் புகல்வார் - இங்கு வந்தணைந்தோம் என்று சொல்வாராகி,　கக

1794. (இ - ள்) ஆறு அணியும்......எழுதாதே - கங்கையைத் தரித்த சடை முடியாரது அடியவர்களுக்காக நீர் வைப்பித்த முடிவில்லாத பெருமையுடைய தண்ணீர்ப் பந்தரில் உமது பெயரை எழுதாமல்; வேறொரு பேர்......என்கொல்; கூறும் என - வேறு ஒரு பெயரை முன் எழுத வேண்டிய காரணம் என்னை கொலோ?

சொல்வீராக என்று; கோதின்மொழிக் கொற்றவனர் எதிர்மொழிந்தார் - குற்ற மில்லாத மொழி வேந்தராகிய நாயனர் எதிர் மொழிந்தனர். ௧௦

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1793. (வி - ரை) ஒருகுன்ற...வருகின்றேம் - "என் மனையில் வந்தருளிற்று என்?" என்று அப்பூதியார் கூறியதனையே தொடர்ந்துகொண்டு வாகீசர் தம்மை இன்னவர் என்று அறிவியாமலே தாம் வந்த வரலாற்றையும், மனைக்கடைத்தலையிற் சார்ந்ததன் கருத்தினையும் அறிவிக்கின்றபடி.

குன்ற வில்லாரைத் திருப்பழனத்துள் இறைஞ்சி - பல தளிகளிலும் வேறு எங்கும் கயிலாயநாதனையே காணலாமே என்று நாயனர் தாம் அருளியவாறே பல தலங்களிலும் சென்று சிவபெருமானையே எங்கும் கண்டிறைஞ்சும் தன்மையாற் கூறினர். "ஆலயந் தானு மரனெனத் தொழுமே" (போதம் - 12. சூத்.) என்றபடி நாயனர் சீவன்முத்த நிலையிற் சரித்தனர் என்க.

வருகின்றேம் - பன்மை இறைபணி நிற்றலின் பெருமை குறித்தது.

வழிக் கரையில் - வரும் வழியில் ஓரத்தில். "அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில்" (1787).

நீர் வைத்த - தண்ணீர்ப் பந்தர் என்க. வைத்த - வைப்பித்த என்க; பிறவினை விகுதி தொக்கது. நீர் - "அமுதமுமாம் தண்ணீரும்" என்றபடி தக்கவாறு அமைந்த நீர் என்ற குறிப்புப் பொருளும் தந்து நின்றது.

வாய்ந்த வளம் - வாய்ப்பாவது முன் 1787-ல் உரைத்த நலங்களின் தொகுதி. நிழல் தண்ணீர்ப் பந்தர் - தண்ணீர்ப் பந்தருக்கு நீரினைப் போலவே குளிர் நிழலும் இன்றியமையாது வேண்டப்படுவதென்பது. முன் 1787-ல் பந்தர் அமைப்பித்தவர் கொண்ட மனப்பான்மையின் சார்புபற்றிக் கூறினர்; இங்கு அதனை நுகர்ந்தவர்களின் சார்புபற்றிக் கூறினர்.

கண்டு - கேட்டு - எண்ணும்மைகள் தொக்கன. கண்டதனைக்கொண்டு, காணாதனவும் கேட்டனவுமாகிய பிற அறங்களின் தன்மையினையும் தெரிந்து என்றபடி.

அத்தகைமை புரிகின்ற அறம் பிற - அது போலவே அரசுகளின் பெயரால் செய்யப்பட்டனவும், உரியவாறு அவ்வவற்றிற்கு வாய்ந்த வளந்தருகின்றனவும் ஆகிய பிற அறங்கள். அவை, "சாலை - குளம் - கா" (1789) என்று முன் அங்கு அறிந்தார்பாற் கேட்டவை; கேட்டவையும், கண்ட அத்தகையனவே என்பது. காண்டலும் கருதலுமாகிய இரண்டு அளவைகளாலும் அறிந்தன என்பார் கண்டு - கேட்டு என இருவகையும் கூறினர்.

புரிகின்ற - இடைவிடாது மேற்கொண்டு - விரும்பிச் - செய்கின்ற.

அணைந்தோம் - வழியே சென்றுவிடாது, இந்த உமது மனைக்கடையின்கண் என்றது இசையெச்சம்.

புகல்வார் - மேலும் புகல்வாராகி; முற்றெச்சம். புகல்வார் - மொழிந்தார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. இதனல் "வடிவுடையீர் - என் மனையில் வந்தருளிற்று" என்ற பகுதிக்கு விடையாகத் தாம் வந்த வரலாற்றைக் கூறினர்; இனி, "என்?" என்றதற்கு விடைபோலத் தாம் வந்த கருத்தினை வேருக மேல்வரும் பாட்டாற் கூறுகின்றார். 11

1794. (வி - ரை) அடியார்க்கு - அடியார்க்குதவும் பொருட்டு. "அளவில் சனஞ் செலவொழியா வழிக்கரையில்" (1787) அமைத்தபடியால் இது எல்லாருக்

கும் பயன்படுமாயினும், சிறப்பும் தலையாகிய பயனும்பற்றி அடியார்க்கு என்றார். வணங்கி வழிபடத்தக்கார் அவர்களேயாம். அவர்களையே குறிக்கொண்டார் என்பது.

ஈறில் பெரும் என்றது தண்ணீர்ப்பந்தரின் சிறப்பு அமைதியும், முத்தி சாதன மாகும் பெருமையும் குறித்தது.

**தண்ணீர்ப் பந்தரில் நும்பேர்** - என்றும், பந்தரினும் பேர் எழுதாதே என்றும் உரைக்க நின்றது. **பந்தரினும்** - உம்மை உயர்வு சிறப்பு. பயன் பற்றுமலே பல இடத்தும் தம் பெயரை விளம்பரப்படுத்திக்கொள்வோர் நிற்க, நீர் அடியார்க்காக அமைத்த அரிய பந்தரில் தானும் எழுதாதே என்பது குறிப்பு.

**முன் எழுத** - முன்புறம் எழுத. முன்னல் விளக்கமாக எழுத என்றலுமாம். உமது பேர் எழுத வேண்டிய முன்பக்கத்து - முகப்பில் - என்பது.

**எதிர்** - எதிரில் என்றும், அப்பூதியார் கருதிய கொள்கைக்கு எதிர்மறையாக - மாறுபாடாக - என்றும் உரைக்க நின்றது.

**கோதில் மொழிக் கொற்றவனுர்** - இவர் கூறிய மொழிகள் அப்பூதியார் அன்பு பற்றி வெகுள்வதற்கு ஏதுவாயினவேனும், அவ்வாறு தீங்கு குறியாத மொழிகள் என்பது. தீமையில்லாத சொற்களையே சொல்லுதலில் வல்ல அரசர் என்க. கோதுஇல் மொழி - தீமையை - குற்றத்தை - இல்லையாகச் செய்யும் மொழி என்ற குறிப்பும், பின் 1798-ல் கூறுவனவும், 1817-ல் அருள் விளைப்பனவும் ஆகிய சரிதக் குறிப்பும் பட நின்றன.

**வேறு ஒரு பேர்** - "நாவுக்கரசு" என்று "உலகேழினுநின் னுமங்க ணயப்புற நண்ணுக" என்று இறைவர் ஏனையோரின் வேருகத் தனிச் சிறப்புப்பெற வைத்த ஒப்பற்ற பெயர் என்ற வாய்மையும் காண்க.

**எழுத வேண்டிய காரணம் என் கொல்?** - "இதற்கென்னே கருத்து" (1790) என்று உண்மை தெரியும் நோக்கத்துடன் சென்றமையால் இவ்வாறு கேட்டனர்.

**என் கொல்?** - அவ்வாறு எழுத வேறு இயைபில்லாமையும், ஆயினும் எழுதப் பட்டு இயைந்தமையால் காரணம் புலப்படாமையும் தோன்ற என் கொல்? என்று ஐயப்பாட்டிற் கூறினர்.

12

1795. நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
"நன்றருளிச் செய்திலீர்!; நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டி னுறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ 'வேறொருபேர்'?" எனவெகுள்வார், கங

1796. "நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
யிம்மையிலும் பிழைப்பதென வென்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்" எனவிளம்பி, கச

1797. "பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை
யங்கணர்தம் புவனத்தி லறியாதா ரியாருளரே!
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்;
எங்குறைவீர்? நீர்தாமியார்? இயம்பு"மென வியம்பினர். கரு

1795. (இ - ள்) நின்ற...சிந்தையராய் - நின்ற அப்பூதி மறையவர் அதனைக் கேட்டுச் சிந்தைதன் னிலை யழிந்தவராகி; "நன்றருளிச் செய்திலீர்...வேறொரு

பேர் ?" என வெகுள்வார் - நீர் நன்கான மொழிகளை அருளிச் செய்திலீர் ! நாண மில்லாத சமணர்களாகிய சண்டாளர்களுடன் சேர்ந்த அரசன் செய்த சூழ்ச்சிகளை யெல்லாம் திருத்தொண்டினது உறைப்பினையே துணையாகக்கொண்டு வென்ற அவரது திருப்பெயரோ வேறொரு பேர் என்று சொல்லத்தக்கது ?" என்று வெகுள் வாராகி, கஙு

1796. (இ - ள்) நம்மை யுடையவர்...தெளிய - நம்மை யுடையவராகிய சிவ பெருமானது திருவடிகளின் கீழ்ச் செய்யும் திருத்தொண்டினாலே இம்மையிலும் நாம் உய்தியைப் பெறுவது என்று என்போல்வார்களும் தெளியும்படி; செம்மைபுரி... எழுத - செம்மையைப் புரியும் திருநாவுக்கரசரது திருப்பெயரினை நான் எழுதிடவும்; வெம்மை...விளம்பினீர் என விளம்பி - வெவ்விய சொற்களை யான் கேட்கும்படி சொன்னீர் ! என்று சொல்லி, கசு

1797. (இ - ள்) பொங்குகடல்...யாருளரே - பொங்கும் கடலினைக், கல்லே மிதப்பதாகக் கொண்டு போந்து கரையேறிய அவர் பெருமையினைச் சிவபெருமானது புவனத்தில் அறியாதவர்கள் யாரேனு முளரோ ?; மங்கலமாம்...மொழிந்தீர் - மங்கலமாம் திருவேடத்துடன் நின்றும் இவ்வகையாக மொழிந்தீர்; எங்கு உறைவீர் - நீர் எவ்விடத்துள்ளவர் ?; நீர்தாம் யார் ?-நீர்தாம் யாவர் ?; இயம்பும் - சொல்வீராக; என இயம்பினர் - என்று சொன்னர். கரு

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1795. (வி - ரை) நின்ற - ஒரு அடியவர் என்ற நிலையில் வரவேற்றுபசரிக்க, அரசுகளினெதிரில் மனைக்கடைத்தலையில் நின்ற.

**மறையவர்** - மறுத்துப் பேசவுள்ள குறிப்பு.

**நிலையழிந்த சிந்தையராய்** - உலகில் மக்கள் எவரேயாயினும் சிந்தையை நிறுத்த வேண்டிய பொறை முதலிய நிலையினின்றும் எக்காலத்தும் அழியலாகாது; அதிலும் சிவனடியார்கள் சிறப்பாக எஞ்ஞான்றும் சிந்தைநிலை யழியலாகா மரபுடையோராதல் வேண்டும்; "மலையே வந்து விழினு மனிதர்காள், நிலையி னின்று கலங்கப் பெறுதி ரேற், றலைவ னாகிய வீசன் றமர்களைக், கொலைகை யானைதான் கொன்றிட கிற்குமே" என்பது வாகீசர் திருவாக்கு (தனிக்குறுந்). மேலும், அடியவர்களின் திருமுன்பு, அன்பராயினோர் ஆசையொடும் அடைந்து, கூசி மொழிந்து கும்பிட்டு நிற்கக் கடவர்; இத்தன்மை யெல்லாம்விட்டு இங்கு அப்பூதியார் சிந்தைநிலை யழிந்தமை என்னையோ ? எனின்; "மறைக ணிந்தனை சைவ நிந்தனை பொறு மனம்" தரவேண்டு மென்று நந்திதேவர் வரங்கேட்டபடி, இங்குத் "திருநாவுக்கரசர்" என்ற திருப்பெயரை "வேறொரு பெயர்" என்று சொன்னதைப் பெரு நிந்தனையாகக் கொண்டதனால் அப்பூதியார் மனம் நிலையழிந்ததென்க. சிவனையும் அடியாரையும் சிவ நூல்களையும் யாரேனும் நிந்தனை செய்வாராகில் அதைக் கேட்கலாகாது; கேட்டுச் சும்மா இருத் தல் பாவமாம். சத்தி நாயனர் சிவ நிந்தனை புரிவோர்களது நாக்கை அறுத்தனர். இந்நாட் சைவ வுலகம் எனப்படுவது சிவ நிந்தனைகளை உளம் பதைக்காமல் வாளா கேட்டுச் சும்மா இருப்பதே யன்றித், தானும் பலவாற்றானும் சிவ நிந்தனைகளைச் செய் கின்றது; காலத்தின் கொடுமை!. ஆதலின் அப்பூதியார் கொண்ட மனப்பான்மையின் தத்துவம் இந்நாளில் விளங்குதல் அரிது. தம்மையேனும், தம் உடலோடொழி யும் மனைவி - மக்கள் - சுற்றத்தார்களையேனும் ஒருவர் நிந்திக்கக் கேட்டால் எத் தனை கோபமும் கலகமும் விளைக்கின்றார்கள். அவ்வாறன்றி உயிரினுடன் வரும் இறைவனையும், நமது உயிரின் சுற்றமாகிய அவன் அடியார்களையும் நிந்திக்கக் கேட்

டால் சிறிதும் எண்ணாது வாளா இருத்தல் எத்தனை மடமையும் பாவமுமாகும்!. நிறையழிந்த - என்பதும் பாடம். நிறை - காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் சீலம்.

நன்றருளிச் செய்திலீர் - தீங்கு சொன்னீர் என்னாது இவ்வாறு சொன்னது நிலையழிந்த சிந்தையராகியபோதும் அடியார் திருவேடத்தின்கண் அப்பூதியார் வைத்த அன்பின் நிலை.

நாண் இல் அமண் பதகர் - நாணமில்லாமையாவது தாம் செய்த வஞ்சனை வெளிப்பட்டபோதும் அதனால் நாணித் தலை கவிழ்ந்து ஒழியாது பின்னரும் மேன்மேலும் ஒவ்வொன்றாகப் பொய் கூறி வஞ்சிக்க முற்படுதல். 1347 - 1367 - 1373-1385 (மானமழிந்து - புலம்ப) - 1389 முதலியவற்றிற் கூறப்பட்டவை.

சூழ்ச்சி - கொலை சூழ்ந்து செய்த உபாயங்கள்.

திருத்தொண்டின் உறைப்பாலே - சிவன் திருவடிகளிற் பதிந்த திருத்தொண்டின் அழுத்தமே துணையாகக் கொண்டு. தொண்டாவது திருவடியிணையே பற்றிக் கிடத்தல். "என்கடன் பணிசெய்து கிடத்தல் - தன்கடன் அடியேனையுந் தாங்குதல்" (அப்பர்) என்ற மன உறுதி.

சூழ்ச்சிகளை வென்றமை நாயனார் புராணத்துள் விரிக்கப்பட்டன. இவற்றை அடியார்கள் சொல்லக் கேட்ட தன்மையால் அப்பூதியார்க்கு வாகீசர்பாற் பத்தி முதிர்ந்த தென்பதாம். காரணம் என்? என்றார்க்கு ஒன்றாக முதலில் ஒரு காரணங் கூறியது காண்க.

திருப்பேரோ வேறொரு பேர்? - அப்பூதியார் வெகுண்டமைக்குக் காரணம் கூறியபடி.

வெகுள்வார் - விளம்பி-இயம்பினார் என இம்மூன்று பாட்டுக்களையும் முடிக்க. 13

1796. (வி - ரை) நம்மை யுடையவர் - சிவபெருமான்; முன்னின்று இவ்வகை மொழிந்த உம்மையும் என்னையும் இன்னும் ஏனை எல்லா உயிர் வருக்கங்களையும் அடிமையாக உடைய தலைவர் என்க; நம்மை - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

நயந்த - அன்புடன் செய்த; நயப்பு - மனமுருகிய அன்பு.

இம்மையிலும் - அம்மை மறுமைகளிலேயன்றி யிம்மையிலும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. அம்மை மறுமைகளில் உடனிருந்து உய்தியைச் செய்பவர் என்பது மறுக்கலாகா உண்மையாதலின், அதுவேயன்றி, யிம்மையிலும் பிழைப்பது திருத்தொண்டின் காரணமேயாம் என்றார்.

என்போல்வாரும் தெளிய - மந்த மதிகளாய் அறிவு சுருங்கிய என்னைப் போன்றவர்களும். உம்மை இழிவுசிறப்பு. தன்முனைப்பு என்பது சிறிதுமின்றித் சைவத்தின் "தாழ்வெனும் தன்மை"யை அணிகலமாப் பூண்டவர் அப்பூதியார் என்பது.

என் போல்வாரும் தெளியச் செம்மைபுரி - அறிவில்லா உலக மாக்களும் அறியும்படி செம்மை புரிந்த என்றது திருநாவுக்கரசர் சமணர்களின் தீய செயல்களையெல்லாம் சிவனடித் தொண்டின் திறம்போற்றியே வென்று காட்டிய செயல்களைக் குறித்தது. "ஈச னெந்தை யிணையடி நீழலே" என்றும், "ஒருவர் தமர்நா மஞ்சுவ தியாதொன்று மில்லை, அஞ்ச வருவது மில்லை" என்றும், "அடி பொருந்தக் கைதொழ, நற்றுணை யாவது நமச்சி வாயவே", "ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே" என்றும், சொல்லியும் காட்டியும் செய்த செம்மைகளையே நினைவில் அழுந்தக்கொண்டு அப்பூதியார் கூறினர் என்க. மேல்வரும் பாட்டுப் பார்க்க. செம்மை - சிவமாம் தன்மை; புரிதல் இடைவிடாது மேற்கொள்ளுதல். "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசன்" என்று ஆளுடையநம்பிகள் திருத்

தொண்டத்தொகையினுள் இத்திறம்பற்றியே போற்றியதும் காண்க. (1266 உரை பார்க்க). உலகம் கண்டுய்தற் பொருட்டே அரசுகளது வாழ்க்கை நிகழ்ந்தது என்பது.

**எழுத** - எழுதியிடவும். **வெம்மைமொழி** - அதனை வேறொரு பேர் என்ற வெவ்விய மொழி.

**யான் கேட்க** - மறைவானன்றி எதிரில் நானே காதுகொள்ளக் கேட்கும்படியாக. கேட்க நின்றது தமது தீவினை - துர்ப்பாக்கியம் - என்பது குறிப்பு. 14

1797. (வி - ரை) போங்குகடல் என்றும், **கல் மிதப்பில்** என்றும், போந்து என்றும், ஏறும் என்றும் தனித்தனி அச்செயலைப் பிரித்து எடுத்து விதந்து கூறியது ஒவ்வொன்றும் செயற்கரிய பெருஞ் செயல்களேயாக, அவையனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து நிகழச்செய்தது சொல்லற்கரிய பெருமையுடையதாகும் என்று காட்டுதற்கு. அவர் பெருமை என்றதனை விளக்கியவாறு. **மிதப்பு** - தெப்பம். **அறியாதார் யாருளரே** - இவ்வாறு தேற்றம்பட விளங்கும் மிகப் பெரியதொன்றினை அறியாதார் ஒருவருமிலர் என்க. **உளரே** - வினா இன்மை குறித்தது. **யாரும்** என்ற முற்றும்மை தொக்கது. **உளரே** - உள்ளாராக இருக்க இயலாது என்பது. **அங்கணர்தம் புவனம்** - அங்கணராகிய சிவபெருமானால் உயிர்கள் ஈடேறும் பொருட்டுப் படைத்தளிக்கப்பட்ட 224 என்னும் புவனங்கள். **புவனம்** - சாதியொருமை. "உலகே ழினுநின் னுமங்க ணயப்புற நண்ணுக" (1339) என்று இறைவர் அருளியமையால் எல்லா வுலகங்களும் அறிந்ததொன்றும் என்பதும் குறிப்பு. சிவனடிமைத் திறத்தினில் வாராத வேற்றுப்புவனத்துள்ளாரே அவர் பெருமை யறியாதிருத்தல் கூடும் என்பதும் குறிக்க அங்கணர்தம் புவனத்தில் என்றார்.

**மங்கலமாம் திருவேடத்துடன் நின்று** - உமது திருவேடம் நீர் வேற்றுப்புவனத்தவரல்லர் என்று அறிவியா நிற்பவும் என்பது. **நின்றும்** - என்று உயர்வு சிறப்பும்மை தொக்கது.

**இவ்வகை** - அத்திருவேடத்துடன் ஒவ்வாது அதற்கு மாறாகிய இவ்வாறு. **மங்கலமாம் திருவேடம்** என்றதனால், **மொழிந்தது** மங்கலத்துக்கு மாறாகியது. அமங்கல மொழி என்பது குறிப்பிற் பெறவைத்து அமங்கலத்தைத் திருவேடத்தார்பாற் சாரும்படி எடுத்துக் கூறாத மரபு காண்க. முன் "நன்றருளிச் செய்திலீர்" (1795) என்றதும் காண்க. ஏனாதியார் புராண உட்கிடையும் ஈண்டுக் கருதுக.

**எங்கு உறைவீர்?** அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் இலராதலின், நீர் உறைவது வேறு எங்கு எவ்விடம் என்றபடி. **எம் குறைவு ஈர்** - எமது குறைகளைப் போக்கும் என்று விண்ணப்பிக்கும் உண்மை தொனிப்பதும் காண்க.

**நீர்தாம் யார்?** - எங்கு என்றதனால் ஊரும், யார் என்றதனால் பெயரும் வினவியபடி. "ஊரென்ன வென்னவும் வாய்திற வீரொழி வீர்பழியேற், பேரென்ன வோவுரையீர்" (திருக்கோவையார் - 56) என்ற அகத்துறை வினாக்களின் குறிப்பும் ஈண்டு வைத்துக் காண்க. மங்கலமாம்...மொழிந்தீர் - எங்கு உறைவீர்? - நீர்தாம் யார்? - இயம்பும் - என்று பலவும் மேன்மேல் அடுக்கி வினவிக் கூறியது வெகுட்சி முடுகிய தன்மையாலாகியது. அவ்வளவிலும் அத்திருவேடத்திற் கொண்ட அன்பு மாறாது கூறும் திறமும் காண்க. 15

1798. திருமறையோ ரதுமொழியத், திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார் "பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினா லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யான்" என்றார். கசு

(இ - ள்) திருமறையோர் அது மொழிய - திருவுடைய வேதியராகிய அப்பூதியார் அவ்வாறு சொல்லக் கேட்டு; திருநாவுக்கரசர்...உரை செய்வார் - அவர் பெருமையினை அறிந்து திருநாவுக்கரசர் விடை சொல்வாராகி; "பிறதுறையினின்று ஏற...யான்" என்றார் - "புறச்சமயத்துறையினின்று ஏறும் பொருட்டு அருளிச் செய்து பெருஞ்சூலை நோய் தந்து இறைவர் ஆட்கொள்ள அடைந்து உய்தி பெற்ற தெருட்சி கொண்ட வுணர்வில்லாத சிறுமையினை உடையேன் நான்" என்று சொன்னார்.

(வி - ரை) திருமறையோர் - "நின்ற மறையோர்" (1795) என்றதனையே தொடர்ந்து கூறியது காண்க.

அது - நீர் கூறியது வெம்மை மொழி: நீர் யாவர்? என்றெல்லாம் கூறிய அவை. அது - அவ்வாறு என்ற பொருளில் வந்தது. பெருமை - அன்பின் பெருமை தம்மைப் பெருமைபடக் கூறியதனாலன்று: இறைவரது திருத்தொண்டில் ஈடுபட்ட பெருமையினையே கருதியபடி.

அறிந்து - கண்ட வெருட்சியாகிய மெய்ப்பாட்டினின்றும், கேட்ட மொழிகளினின்றும் உள்ளிருந்த அன்பின் பெருமை அறியவந்தது என்பது.

உரை செய்வார் - அவர் கேட்ட வினவுக்கு விடை சொல்வாராகி. உரை - விடை. உரை செய்வாராகி; முற்றெச்சம். உரை செய்வார் - என்றார் என முடிக்க.

பிறதுறை - "பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறையில் சமணீசர் புறத்துறையா, மவ்வாழ்குழி" (1338) என்ற புறச்சமயக் குழி. எல்லாச் சமயங்களும் அவ்வந்நிலைக்கேற்ற படித்துறைகளாக அமைந்தொழிவன ஆதலின் அதனையும் துறை என்றார்.

துறையினின் றேற - என்றதனால் அது கடைபோக ஈடேற்றிச் செலுத்தும் துறையன்று என்பது. நின்று - நிற்கவைத்ததும் அருளேயாம் என்பது.

ஏற அருளும் - ஏறும் பொருட்டுக் கொடுத்து அருளும்; பெருஞ்சூலை - அருளின் உருவம் என்றபடி. "வாழ்வு பெறத் தரு சூலை" (1338) என்று போற்றியது காண்க. நோய் - நல்குரவு முதலிய துன்பங்கள் யாவையும் இறைவர் உயிர்களைத் தூய்மையாக்கி ஈடேற்றுதற்குச்செய்யும் அருளின் வண்ணங்களே என்று கொள்வது அறிவுடையோர் இயல்பு.

ஆட்கொள்ள அடைந்து - அவன் அருளி ஆட்கொண்டதனால் வந்து அடைந்து.

அடைந்துய்ந்த - சிறுமையேன், உணர்வில்லாத சிறுமையேன் என்று தனித் தனி இயைக்க.

தெருளும் உணர்வில்லாத சிறுமை என்றது சைவத்திற் பிறந்தும் அதன் பெருமையை உணரமாட்டாது, சமயங்களின் நன்மை தீமைகளையும் உணரமாட்டாது, புறச்சமயம் புக்குச் சிவனை இகழ்ந்த சிறுமை. ஏழைத்திருத்தாண்டகமும், திருவாரூர்த் திருவிருத்தமும், பிறவும் பார்க்க.

சிறுமையேன் யான் - அப்பூதியார் "அவர் பெருமை" (1897) என்று தமது தன்மையைப் பெருமையாகப் போற்றினும், தம்மைத்தாம் உணர்வில்லாத சிறுமையாராகவே உணர்ந்து ஒழுகினர் அப்பர்; இது அவர் பெருமை. அப்பூதியார் தமது பெருமையைக் கண்ட விடத்தில் தமது சிறுமையினையே கண்டனர் நாயனர். இது அவர் திருவாக்கிற் பலவிடத்தும் காணலாம். சிறுமையைப் பெருமையாகக் கொண்டது அப்பூதியாரது பெருமையாமென்று நாயனர் கொண்டனர். "அவர் பெருமை அறிந்து" என்றது இக்கருத்து.

இவ்வாறு தத்தம் சிறுமை கண்டு ஒழுகுவது அறிவுடைமையும் ஈடேறும் நெறியுமாம்; இவ்வாறன்றி இது தம் பெருமை யென்றறிவது ஆணவத்தை மிகச் செய்து வீழ்ச்சிக்கே காரணமாகும். இவ்வுண்மையை இந்நாள் உலகம் சிறிதும் காணாது ஒழுகுகின்றது கொடுமை! இதை அறிந்து தக்கவாறு ஒழுகின் உலகம் நலம் பெறும். இங்கு அப்பர் "சிறுமையேன் யான்" என்று தம்மை அறிவித்துக்கொண்டது அவையடக்கம் போன்ற உபசாரமன்றி, உண்மையிலே உணர்ந்து உள்ளூறி அப்பர் ஒழுகிய நெறியாகும் என்பதற்கு "பித்தனேன் பேதையேன் பேயே னாயேன் பிழைத்தனக ளெத்தனையும் பொறுத்தா யன்றே" என்று இறைவரிடத்து அவர் உள்ளங்கலந்து செய்யும் விண்ணப்பங்கள் பலவும் சான்றும்.

நின்றேற்ற—அருள் பெருகு—என்பனவும் பாடங்கள். 16

1799. அரசறிய வுரைசெய்ய, வப்பூதி யடிகடாங்
கரகமல மிசைகுவியக், கண்ணருவி பாய்ந்திழிய,
வுரைகுழறி, யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார். கஎ

(இ - ள்) அரசு அறிய உரை செய்ய - இவ்வாறு அரசுகள் அப்பூதியார் தம்மை அறியும்படி உரைத்தருளிச் செய்யவே; அப்பூதி அடிகள் தாம் - உண்மை அறிந்துகொண்ட அப்பூதியடிகள்; கரகமலம் மிசைக்குவிய - கைமலர்கள் தாமே தலையின் மேல் குவிந்துகொள்ளவும், கண் அருவி பாய்ந்து இழிய - கண்களினின்றும் நீர் அருவிபோலப் பாய்ந்து வழியவும்; உரை குழறி...பொலிய - மொழி தடுமாறி உடம்பு முழுதும் மயிர்க்கூச்செறிந்து விளங்கவும் (இவ்வண்ணம் மெய்ப்பாடுகள் உண்டாகும் நிலையினை அடைந்து); தரையின்...பூண்டார் - நிலத்தின்மேல் உடல் பொருந்தக் கீழே வீழ்ந்து அவரது திருவடித்தாமரைகளைத் தலையிற் பொருந்தப் பூண்டனர்.

(வி - ரை) தாம் எதிர்பாராமலும் அறியாமலும் இருந்த நிலையில் சடுதியில் தமக்கு வலியக் கிடைத்த பெரும்பேற்றினை அறிந்தபோது அப்பூதியார் அடைந்த மனநிலையும் மெய்ப்பாடும் ஆகிய செயல்களை அறிவிப்பது இத்திருப்பாட்டு.

1795 - 1796 - 1797 பாட்டுக்களில் அறியுமாறு அப்பூதியார் இருந்த நிலையினையும், இப்பாட்டினிற் றெரியுமாறு அவர் அடைந்த அதனின் முற்றும் மாறுபட்ட நிலையினையும் தெரிக்கும்படி சித்திரம் தீட்டுவதென்றால் ஒரு பெரும் ஓவியப் புலவனுக்கும் அரிய வேலையாம். இவ்விரு பெருமக்கள் முதன் முறை சந்தித்த இந்நிலையினை நம் கண்முன் காணும்படி தீட்டுவது ஆசிரியரது தெய்வக் கவிநலத்திற்கே உரியதும் எளியதுமாம்.

அரசு - திருநாவுக்கரசர். முன் பாட்டில் கூறியபடி தம்மை அறிந்து அறிவித்துக் கொள்வது நாவரசருக்கே இயல்பதாம் என்பார் அரசு என்ற தன்மையாற் கூறினார். அறிய - அப்பூதியார் அறிந்துகொள்ளும்படி.

கர கமலம் மிசை குவிய - மனத்தின் தூண்டுதலாகிய முயற்சியின்றிக் கைகள் தாமே தலையின்மேல் ஏறக் கூப்புதல் நீண்ட பழக்கத்தாலாவது. குவிய என்ற கருத்துமது. மேல் சரண கமலம் என்பதற்கேற்ப இங்குக் கர கமலம் என்றார், ஓரினமாய்க் கூடும் ஒற்றுமை நயம்பற்றி. கண் அருவி பாய்ந்து இழிய - நீர் என்பது தொக்கி நின்றது. அன்பு வெளிப்பாட்டினால் கண்ணீர் பாயும் மெய்ப்பாடு நிகழ்வதற்கு முன் கண்ணினுள் மறைந்து நிற்பது போல, அது குறிக்கும் சொல்லும் தொக்கி நின்ற நயம் காண்க.

பாய்தல் - கதுமென வெளிப்படுதல். இழிதல் இடைவிடாது பெய்தல்; வழிதல். உரை குழறுதலும், உரோம புளகம் பொலிதலும் அன்பு முதிர்ந்தபோது உளவாகும் மெய்ப்பாடுகளாம். வீழ்ந்து - அடியற்ற மரம் சாய்ந்து வீழ்வதுபோல் உடல் வசமற்று வீழ்ந்து.

பூண்டார் - அடிகளைக் கைகளாற்பற்றித் தலைபொருந்தவைத்து அணிந்து கொண்டார். "பொன்ன டிக்கம லங்களிற் பொருந்தமுன் வீழ்ந்தார்" (திருஞான - புரா - 671), புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில முறவிழுந்தார்" (ஷை 729), "சரண கமலம்பற்றி" (ஷை 720) முதலியவை காண்க. 17

1800. மற்றவரை யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள
அற்றவர்க ளருநிதியம் பெற்றாற்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ வோடினர் பாடினர். கஅ

(இ - ள்) மற்றவரை...எடுத்தருள - அவ்வாறு வீழ்ந்து திருவடி பூண்டு கிடந்த அப்பூதியாரைத் திருநாவுக்கரசர் தாமும் எதிர்வணங்கி அவரை எடுத்தருளவே; அருமறையோர் - அரிய வேதியராகிய அப்பூதியார்; அற்றவர்கள் அருநிதியம் பெற்றாற்போல்-வறியவர்களாயுள்ளோர் தேடிய பெருநிதியத்தைப் பெற்றதுபோல; முற்ற... பாடினர் - மனமுழுதும் பெருமகிழ்ச்சி கூர்ந்து, அவர் முன்பு நின்று ஆனந்தக்கூத்தாடி மிகுந்த விருப்பத்துடனே அவரைச் சூழ்ந்து ஓடினர்; பாடினர்.

(வி - ரை) முன் பாட்டிற் கூறியவை தமது மனத்தெழுந்த முயற்சியில்லாமலே தாமாகவே விளைந்த மெய்ப்பாடுகள்; Involuntary என்பர் நவீனர். இப்பாட்டிற் கூறியவை அறிந்து நிகழ்த்திய செயல்கள். மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

எதிர்வணங்கி - அவர் வீழ்ந்து வணங்கியதுபோலத் தாமும் அவரை வணங்கி. எதிர்வணக்கமாவது அவ்வணக்கம் போலத் தாமும் செய்தல். "கழல் பணிய... பணியாமுன் பணியும்" (1792) என்றது காண்க. முன்னர் நிகழ்ந்தவை ஒருவரை ஒருவர் முன்பு வடிவு காணாராயினும் அடியார் வேடம் என்ற மாத்திரையாற் செய்த பொது வணக்கம். இங்கு நிகழ்ந்தது ஒருவரிலொருவர் அன்பு விளங்கக் கண்டவிடத்துச் செய்த சிறப்பு வணக்கம்.

வணங்கி எடுத்தருள - கீழ்வீழ்ந்து வணங்கியவரை எடுத்தருளுவது முதற்காரியமாயிருக்க அதன் முன்பு எதிர்வணக்கத்தைச் செய்து பின் எடுத்தருளியது அன்புக்குத் தாழ்வது தலையாய கடமை என்ற உண்மை ஒழுக்கத்தில் நின்றமை குறித்தது.

அற்றவர்கள் - பொருளில்லாத வறியோர். அருநிதியம் - தாம் எவ்வகையாற்றேடினும் பெறுதற்கரியதாயும் நிதியமெல்லாவற்றினும் அரியதாயும் உள்ளது. பெரும்புதையல் கண்டெடுத்தாற்போல. உளம் முற்றக்களிகூர - என்றது உள்ளம் எத்துணைக் களிப்புக் கொள்ளுமோ அத்துணையும் நிறைதல். இதனையே தமது வாழ்வின் பயனாகிய உறுதிப் பொருளாகக் கொண்டு அப்பூதியார் தவஞ் செய்திருந்தாராதலின், வாழ்க்கையின் பயன் கைகூடியபோது பெறவேண்டிய பேறு வேறின்மையின் அதுகாரணமாய் நிகழும் களிகூர்தலும் முற்றுப்பெற்றதாயிற்று.

முன் நின்று கூத்தாடி - ஆசையொடும் அரனடியா ரடியாரை யடைந்திட்டு... கூசிமொழிந் தருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" (சித்தி - 12 - 2) என்றது சாத்திரம். குருவருள் பெற்று, அணைந்தோர் தன்மையின் முற்றுப்பேறுடையராய்ச் சீவன்முத்த நிலையினை அடைந்தவர் அப்பூதி

யார் ஆதலின் தமது ஞான குருநாதரைக் கைவரப்பெற்றபோது அடியார் என்றும் குரு என்றும் இருதன்மையிலும் வைத்துத் திருநாவுக்கரசரை இறைவராகவே கண்டார். இறைவரருள் பெற்றபோது முன்பு நின்று செய்யும் ஆடுதல், பாடுதல் முதலியவை ஈண்டும் நிகழ்வனவாயின. "ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலையென்புருகிப் பாடுகின்றிலை" (திருவாசகம்); "மெய்விரவு பேரன்பு மிகுதியினா லாடுதலு, மவ்வியல்பிற் பாடுதலு மாய்நிகழ்வார்" (1055) முதலியவை காண்க.

**உற்ற விருப்புடன் சூழ ஓடினர்** - வலம் வந்தனர். ஆயின், வலம் வருவார் அதற்குரிய விதிப்படி அடியிட்டு மெல்ல நடந்து செல்லாமல் ஓடியது விருப்பமிகுதியினால் ஆகியது என்பார், உற்ற விருப்புடன் என்றார்; உறுதல் - மிகுதல்.

**பாடினர்** - நாயனரது பெருமைகளையும், தாம் பெற்ற பேற்றினையும் பாட்டாகச் சொல்லுதலும், உவகை நிறைந்தபோது உள்ளங் கலந்து எழும் கீதம்பாடுதலுமாம். "திரண்டு திரண்டுன் றிருவார்த்தை விரிப்பார் கேட்பார் மெச்சுவார்" (திருவாசகம்). 18

1801. மூண்டபெரு மகிழ்ச்சியினான் முன்செய்வ தறியாதே
ஈண்டமனை யகத்தெய்தி யில்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்டவர செழுந்தருளு மோகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார், கக

1802. மனைவியா ருடன்மக்கண் மற்றுமுள்ள சுற்றத்தோர்
அனைவரையுங் கொண்டிறைஞ்சி யாராத காதலுடன்
முனைவரையுள் ளெழுந்தருளு வித்தவர்தாண் முன்விளக்கும்
புனைமலர்நீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூரித்தார். உ௦

1801. (இ - ள்) மூண்ட......அறியாதே - பெரு மகிழ்ச்சி மூண்டதனாலே முன்னர்ச் செய்யக் கடவ திது என்பதும் அறியாதவராகி; ஈண்டமனை அகத்து எய்தி - திருமனையின் உள்ளே விரைந்து சென்று; இல்லவர்க்கும்......உரைத்து - மனைவியாருக்கும் மக்களுக்கும் வீட்டில் உள்ள ஏனைச் சுற்றத்தாருக்கும் ஆண்ட அரசுகள் எழுந்தருளும் உவகையைச் சொல்லி; ஆர்வமுற - ஆசை மிக; பூண்ட.... புறப்பட்டார் - அன்பு பூண்ட அப்பெருஞ் சுற்றத்தார் எல்லாரையும் உடன்கொண்டு மீண்டு வெளியில் வந்தாராகி, கக

1802. (இ - ள்) மனைவியாருடன்......இறைஞ்சி - மனைவியாருடன் மக்களும் மற்றும் உள்ள சுற்றத்தார்களும் முதலிய எல்லாரையும் கொண்டுவந்து வணங்கி; ஆராத காதலுடன் - தணியாத ஆசையோடு; முனைவரை......பூரித்தார் - தலைவராகிய வாகீசரை உள்ளே எழுந்தருளச்செய்து முன் அவருடைய பாதங்களை விளக்கும் மலர்களிட்ட பாத்திய நீரைத் தங்கள்மேல் தெளித்துக்கொண்டு அத்தீர்த்தத்தை உள்ளேயும் நிறைத்தனர். உ௦

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

1801. (வி - ரை) பெருமகிழ்ச்சி மூண்டதனால் என்க. மூண்டதனால் அறியாதே என்பதாம். **முன் செய்வது** - மனைக்கடைத்தலையில் அணைந்து நிற்கின்ற அவரை உள்ளே எழுந்தருளச்செய்து ஆசனத் தமர்த்திப் பின் உபசரிக்கவேண்டிய முறைப்படி செய்வதற்கு முன்செய்யும் காரியங்கள். முன் - திருமுன்பு என்றலுமாம்.

**அறியாதே** - அவற்றைச் செய்யாது அவர் நின்றபடியே அங்குக் கடைத்தலையில் நிற்கும்படி விடுத்துத் தாம் மனையகத்து எய்தியதனால் அறியாது செய்தனர் என்பதாம்.

பத்தி முதிர்வின் மகிழ்ச்சியினாற் செய்யப்பட்டதாதலின் அஃது அபசாரமாகாது உபசாரமேயாயிற்று. "பத்தர் சொன்னவும் பன்னப் படுபவோ?" என்றது அவரது செய்கைக்குமாம்.

**ஈண்ட** - விரைவாக. அன்பு திரண்ட என்றுரைப்பாருமுண்டு. மனையகத்து ஈண்ட எய்தி என்க.

**இல்லவர்** - மனைவியார். அன்று மனையின்கட் குழுமியிருக்கும் பேறுபெற்ற சுற்றத்தாரையும் குறிக்க இல்லவர் என்றார். மனைவியாருடன்...சுற்றத்தார் (1802) என்று மேல்வரும் பாட்டில் இதனை இரட்டுற மொழிந்துகொண்டு விரித்தல் காண்க.

**ஓகை** - உவகை என்பது ஓகை என நின்று, உவகையாகிய செய்திக்கு வந்தது.

**ஆர்வமுற** - ஆர்வமுற உரைத்து என்றும், ஆர்வமுறக்கொ(ண்)டு என்றும், ஆர்வமுறப் புறப்பட்டார் என்றும் கூட்டி உரைக்க நின்ற இடைநிலைத் தீபம்.

**பூண்ட பெருஞ் சுற்றம்** - **பூண்ட** - அன்பு பூண்ட. **பெருஞ் சுற்றம்** - பெருமையாவது அப்பூதியாரது அன்பும் தம் அன்பும் ஆதரவுபட வந்து சுற்றிச் சூழ்தல். நாயனார் எழுந்தருளும் பெரும்பேறு வாய்க்கப்பெற்ற அத்திருநாளில் அங்கிருக்கப் பெறுதலும் குறிப்பு. **சுற்றம் எலாம்** - சுற்றம் என்றது ஈண்டு மனைவியார் மக்கள் முதலிய அனைவரையும் குறித்தது. எலாம் என்றது தாதியர் ஏவலர் முதலிய அனைவரும் என்று பொருளும் தந்து நின்றது. "மனைவியாருடன்......அனைவரையும்" என்று மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

**மீளப் புறப்பட்டார்** - மனையினுட் புக்கவர் மீள வெளியில் வந்தார். **புறப்படுதல்** - புறத்தின் வருதல். **மீள** - முன்னர் "நங்கள்பிரான் றமரொருவர் எனக் கேட்டு நண்ணினார்" (1791) என்றது முதன்முறை மனையினின்றும் புறப்பட்டது. அது பொதுவகையால் அடியார் ஒருவரைக் காணப் போந்தது. இப்போது மீண்டும் போந்தனர் - இது சிறப்பு வகையாற் போந்தது. **மீள** - அரசினது திருவருள் பெற்று இப்பிறவியினின்று மீட்சி பெற்று, "மான்மறிக் கையர் பொற்றாள்" பெறும் பேறு வாகீசரடைவாற் பெறுதற்கு (1827) என்ற குறிப்பும் காண்க. **புறப்பட்டாராகி** - இறைஞ்சி என மேல்வரும் பாட்டினுடன் கூட்டுக. முற்றெச்சம். செய்யுளின் தொடர்ச்சி நோக்கி எச்சமாக்கி உரைக்கப்பட்டது. 19

1802. (வி - ரை) **மனைவியாருடன்**- தம்மோடு ஒத்த பங்கு உடையவராதலானும், சுற்றத்துள் முதன்மை பெறுவாராதலானும், மனையின் வாழ்க்கைக்குரிமையுடையவராதலின் நாயனாரை உபசரிப்பது அவர்பாலதே யாதலானும் அச்சிறப்புக்களை உணர்த்த முதற்கண் வைத்து ஓதியதுமன்றி, **உடன்** என்ற உருபையும் சார்த்தி ஓதினார். பின்னர்ச் சரித நிகழ்ச்சியினும் அரவினால் மகன் வீந்ததனை மறைத்து நாயனாரைத் திருவமுதூட்ட நினைந்து செய்த அன்பின் திறம் அப்பூதியார்பால் நின்றது போலவே மனைவியாரிடத்தும் நிறைந்து நிற்க உள்ளதும் குறிப்பு. அவர் திறம் அவ்வாறமையாவிடின் இச்சரித விளைவுக்கு ஏதுவில்லையாகு மென்பதும் உணர்க.

**மக்கள்** - "நிறைகோன் மக்கள்" (1784); "சேயவர் தம்மின் மூத்த" (1805); "இவர்க்கு மூத்த சேயையும் காட்டுக" (1814); "பிள்ளைகளுடனே நோக்கியரும்புதல் வர்களும்" (1822); "மைந்தரும்" (1823); முதலியவற்றால் அப்பூதியார்க்கு மக்கள் பலரிருந்தனர் என்பதுணரப்படும். இவர்களுள் பெண்மக்களுமுண்டோ என்று ஈண்டு வேண்டப்படா ஆராய்ச்சியிற்புகும் ஆராய்ச்சியாளருமுளர்.

**அனைவரையும்** - சுற்றத்தோர் அனைவரையும் என்றும், மக்களும் சுற்றத்தோர்களும் ஏனை ஏவலர் முதலிய அனைவரையும் என்றும் உரைக்க நின்றது. தாதியர்

ஏவலர் முதலியோரும் திருத்தொண்டிற் கலந்த வரலாறுகள் மெய்ப்பொருணயனர் புராணம், சிறுத்தொண்ட நாயனர் புராணம் முதலியவற்ரு லறியலாம்.

**கொண்டு இறைஞ்சி** - கூட அழைத்துக்கொண்டு போந்து எல்லாருமாகக் கூடிப் பணிந்து.

**முனைவர்** - முதல்வர் - தலைவர்.

**தாள் முன்விளக்கும் புனைமலர் நீர்** - தாள் விளக்குதல், கை விளக்குதல், வாய் பூசுதல் என்றிவைகட்குத் தரப்படும் நீர். இவை பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் என்று பூசை முறையிற் பெயர்பெறும். முன்-இவற்றுள் முதலிற் றரப்படும் நீர் பாதம் விளக்குவது பாத்தியம் என்பது.

**மலர்புனை நீர்** என்க. இறைவருக்கும் பெரியோர்க்கும் பாத்திய முதலியவற்றுக்குப் பயன்படும் நீரில் புதிய மலர்களையும் வாசனைப் பண்டங்களையும் இட்டு மந்திரித்துப் பண்பு செய்தல் மரபு.

**தங்கண்மேல் தெளித்து உள்ளும் பூரித்தார்** - திருவடி விளக்கியது புனித தீர்த்தமாதலின் அதுகொண்டு தமது உள்ளும் புறம்பும் தூய்மையாக்கிக் கொண்டனர் என்க. **பூரித்தல்** - நிறைவித்தல்.

**புனைமலி நீர்**—என்பதும் பாடம். 20

1803. ஆசனத்திற் பூசனைக ளமர்வித்து, விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக் காப்பேந்தி, மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பஞ் செய,வவரு மதுநேர்ந்தார். உக

(இ - ள்) **ஆசனத்தில்...காப்பேந்தி** - ஆசனத்தில் எழுந்தருளுவித்துச் செய்ய வேண்டிய அருச்சனை தூப தீபம் முதலியவற்றை விதிப்படி விரும்பிச் செய்து; **விருப்பினுடன்** - மிக்க விருப்பத்துடனே; **வாசநிறை திருநீற்றுக் காப்பு ஏந்தி** - வாசமிக்க திருநீற்றுக்காப்பு நிறைந்த திருநீற்று மடக்கை அவர்க்கு உபசாரமாக அவர் திருமுன் ஏந்தி; **மனம் தழைப்ப** - மனம் தழைத்தோங்க; **தேசம் உய்ய...நேசமுற** - உலகம் உய்யும்படி திருவவதாரம் செய்த நாயனாரைத் திருவமுது செய்விக்கும் அன்பு மீக்கூர; **விண்ணப்பம்...நேர்ந்தார்** - அவர்பால் விண்ணப்பஞ் செய்தார்கள்; அவரும் அதற்கு இசைந்தருளினர்.

(வி - ரை) **ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து** - ஆசனத்தில் என்றது பூசை முறையில் முதலில் செய்யப்படும் அங்கமாகிய, ஆசனங்கற்பித்து உரிய மந்திரம் பாவனைகளால் மூர்த்தியை அந்த ஆசனத்தில் எழுந்தருளச் செய்யும் முறை குறித்தது. "கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியே, மண்டு காதலி னாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்" (443); "கதுமெனக் கணவ னாரைக் கண்ணுதற் கன்ப ரோடும் விதிமுறை தீப மேந்தி" (951) என்ற விடங்களில் உரைத்தவையெல்லாம் ஈண்டுக் கொள்க. **பூசனைகள்** - தூபம் தீபங்கள் காட்டுதல் அருச்சித்தல் முதலாக மாகேசுவர பூசைக்கு விதித்தவை. **அமர்வித்தல்** - விருப்பத்துடன் அமையச் செய்தல்.

**விருப்பினுடன்** - அமர்வித்து என்றும், விருப்பினுடன் ஏந்தி என்றும் முன்னும் பின்னுமாகக் கூட்டியுரைக்க நின்ற இடைநிலைத் தீபம்

**வாசநிறை திருநீற்றுக் காப்பு ஏந்தி** - திருநீற்று மடக்கை ஏந்துதல் உபசாரங்களுள் ஒன்று. **நீற்றுக் காப்பு** - அதனைக் கொண்ட மடலுக்கு வந்தது. **காப்பு** - அணிந்தவரை இரட்சிப்பதனாற் போந்த பெயர்; இரட்சை என்னும் பெயரும் காண்க.

வாசம் - இயல்பாய்த் திருநீற்றிற்குரிய மணம். அதனுள் இடப்படும் புனுகு பசுங் கற்பூரம் முதலியவற்றின் மணம் என்றலுமாம்.

மனந்தழைப்ப - நேசமுற என்க. மனந் தழைத்தலாவது பெரும்பேறு பெற்ற தனால் மனமகிழ்ச்சி மிக்கோங்குதல். நேசம் - விருப்பம்.

நேர்தல் - இசைதல். அவர் இசைதல் அருமையாதலின் விண்ணப்பஞ் செய்ய என்று கூறி, இவரது அன்புக்குட்பட்டு இசைந்தமை குறிப்பித்தார். வரும் பாட்டும் பார்க்க. 21

வேறு

1804. செய்தவ ரிசைந்த போது திருமனை யவரை நோக்கி
"யெய்திய பேறு நம்பா லிருந்தவா றென்னே!" யென்று
"மைதிகழ் மிடற்றி னன்ற னருளினால் வந்த தென்றே,
"யுய்து"மென் றுகந்து கொண்டு திருவமு தாக்க லுற்றார். உஉ

(இ - ள்) செய்தவர் இசைந்தபோது - தவத்திற் பெரியோராகிய திருநாவுக் கரசர் இசைந்தபோது; திருமனையவரை...என்னே என்று - திருமனைவியாரை நோக்கி அப்பூதியார் "நம்மிடத்துப் பொருந்தியபேறு இருந்தவாறுதான் என்னே!" என்று கூறிப், பின்னும்; மைதிகழ்...உய்தும் என்று உவந்துகொண்டு - விடம் விளங்கும் கண்டத்தையுடைய சிவபெருமானது திருவருளினால் இது வந்ததென்று போற்றியே "நாம் உய்தி பெறுவோமாக" என்று தம்மில் மகிழ்ந்துகொண்டு; திருவமுது ஆக்கல் உற்றார் - திருவமுதினை அமைக்கத் தொடங்கினர்.

(வி - ரை) செய்தவர் - தவஞ்செய்தவர் என்க. செய்தவத்தின் பேறாகப் பெறப்பட்டவர் என்றலுமாம்.

இசைந்தபோது - எய்திய பேறு - இருந்தவாறு - திருவமுது செய்ய இசைந்த தனைப் பெரும் பேறாகக் கருதினர். எய்திய பேறு இருந்தவா - என்றதனால், எய்தியது ஒரு பேறும், அமுது செய்ய இசைந்திருந்தது அதன்மேல் மற்றுமொரு பேறுமாக என்ற குறிப்புத் தரப்பட்டது.

மைதிகழ்...உய்தும் - இப்பெரும் பேறுகள் தாம் ஒரு சிறிதும் எதிர்பாராத நிலையில் பெற்றபடியினால் திருவருளாலன்றி இவற்றைப் பெற இயலாதென்று சிவ னருளை வழுத்தி யுய்வோம் என்றபடி. தாம் பல நாளும் தியானித்ததன் பயனாக இப்பேறு பெறலாயிற்று என்னும் தற்போத மூனைப்புச் சிறிதும் இல்லாதவராதலின் சிவனருளால் வந்ததென்றே யுய்தும் என்றார். (அரசுகள்) தமக்கு அருட்பெருமை உளதா யிற்று என்றும், தமது பெருமையை உலகமறிந்தமையால் தம் பெயரால் அறங்கள் செய் யப்பட்டன என்றும், தற்போதம் சிறிதும் இல்லாது தமது பெயரை எழுதின காரணம் வினவிய திருநாவுக்கரசு நாயனாரைப் போலவே, அவரைத் தியானப் பொருளாய்க் கொண்டு தாம் செய்த தவத்தின் பயனாக நாயனார் தாமாகவே வந்து கிடைக்கப் பெற்றனர் என்று தற்போத நினைவு சிறிதுமிலராயினர் அப்பூதியார்; அதனால் திருவருளால் வந்ததென்று கொண்டனர். தவம் தானே பலன் றராது; செய்த தவத்தின் பயனை இறைவர் கூட்டுவித்தல் வேண்டும் என்ற ஞானசாத்திர உண்மை இங்கு உய்த்துணரக் கிடப்பதும் காண்க. "செய்வினையு மதன்பயனுஞ் சேர்ப் பானும்" (சாக். புரா) என்ற நுட்பம் கருதுக. "செய்தவ ரிசைந்த" என்று இத் திருப்பாட்டினைத் தொடங்கிக் காட்டிய குறிப்பும் இது. வந்ததென்றே என்ற பிரி நிலை ஏகாரமும் இக்குறிப்பு.

125348

**உவந்து கொண்டு** - தாமும் மனைவியாரும் மனமுவந்த மகிழ்ச்சியால் நிறைந்து பாராட்டிக்கொண்டு.

**திருவமு தாக்கலுற்றார்** - திருவமுது அமைத்தலில் இருவரும் தத்தமக் கேற்ற செயல்களைச் செய்தனர் என்பது. இளையான்குடிமாறர் புராணம் ஈண்டுச் சிந்திக்கற் பாலது. **திருவமுது** - ஈண்டு உணவுவகை முழுதும் குறித்து நின்றது. மேல்வரும் பாட்டுப் பார்க்க.

**உய்தும்** - உய்ந்திடுவோம், உய்வோமாக. மேற்சரித விளைவும் குறிப்பு. 22

1805. தூயநற் கறிக ளான வறுவகைச் சுவையா லாக்கி
யாயவின் னமுது மாக்கி, யமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மின் மூத்த திருநாவுக் கரசை "வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வா"வென விரைந்து விட்டார். உங

(இ - ள்) தூய...ஆக்கி - தூய்மையுள்ள நல்ல கறி வகைகளை ஆறு சுவைகளும் பொருந்தும்படி சமைத்து; ஆய இன் அமுதும் ஆக்கி - ஆகிய இனிய திருவமுதினை யும் சமைத்து; அமுது செய்தருள - அமுது செய்தருளுதற்குரிய பரிகலத்துக்காக; தங்கள்...திருநாவுக்கரசை - தமது மக்களுள்ளே மூத்த திருநாவுக்கரசினை நோக்கி; "வாழை...வா"வென - வாழையின் நல்லதொரு குருத்தை அரிந்துகொண்டு வா என்று சொல்லி; விரைந்து விட்டார் - விரைவுபடுத்தி ஏவி விடுத்தனர்.

(வி - ரை) **தூயநற் கறிகள் ஆன** - தூய கறிகளாவன தூய நிலத்தில் விளைந்தவை; தூய்மையற்ற எரு - நீர் முதலியவற்றால் விளைக்கப்படாதவை; அசுத்தமாகிய கொள் கலங்களிற் சேர்க்கப்படாதவை என்றிவ்வாறு சார்வன. நற்கறிகளாவன தாமத முதலிய குணபேதங்களை விளைக்காதவை, வாத பித்த ஐப் பகுதிகளுக்கு ஒவ் வாது நோய் செய்யாதவை, இலகுவில் சீரணிக்கத்தக்கவை, என்றிவ்வாறு உடற் சுகத்துக்கும் அறிவு விளக்கத்துக்கும் ஏதுவாயின கறிகள். **ஆன** - அத்தகையன பல வற்றுள்ளும் அந்த இடத்துக்கும் காலத்துக்கும் உண்பவர்க்கும் பொருத்தம் ஆயினவை.

**அறுவகைச்சுவை** - இனிப்பு - கார்ப்பு - புளிப்பு - உவர்ப்பு - துவர்ப்பு - கைப்பு என்பன. "உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில்" (443).

**ஆய இன் அழுது** - ஆய - உணவினுள் முதலாகிய. **இன் அழுது** - செந்நெல் அரிசியினாலாயது. **அழுது** - பசியாற் சாவாமற் காப்பது. தேவரமுதும் இக்காரணத் தால் அப்பெயர் பெற்றது. இதுபற்றித் தேவாமிர்தம்போல்வதென உபசரித்துக் கூறப்படும். தேவாமிர்தத்துக்கும் அப்பெயர் உபசாரமேயாகும். சிவன் ஒருவரே அமுதமாவார்; என்றும் அழியாத அமுதமாவார். சுடுகை மாறாது புதிதாய் இருத்தற் பொருட்டுக் கறிகளை முன்னரும் அமுதினைப் பின்னரும் சமைத்து வைக்கும் முறை குறிக்கக் கறிகளின்பின் அமுதமாக்கி என்று வைத்தோதினர். பரிகலத்திற் படைக்கு முறையும் காண்க.

**அழுது செய்தருள** - திருநாவுக்கரசு நாயனார் அமுது செய்தற்குரிய பரிகலமாக.

**சேயவர்** - ஆண்மக்கள். **மூத்த திருநாவுக்கரசு** - மக்களுள் மூத்தவர்.

**வாழை மேய பொற் குருத்து** - "குருகாளக் குருத்து" (1469) என்ற விடத்துக் குருத்தின் பெருமையும், நீளமும், முற்றியும் மிக முற்றாமலும் இருக்கும் நிலையும் கூறப்பட்டன. ஆதலின் இங்கு அதன் அழகும் பொன்னிறமும் மட்டும் குறிக்கப் பட்டன. முதல் வாழையின் குருத்தே இத்தகைய தன்மைகளுடனிருக்கும். ஆயின் முதல் வாழையின் இலையைஅரியின் பலன் குறையுமென்று உலகர் கொய்யமாட்டார்.

இங்கு அப்பூதியார் அவ்வாறு முதல்வாழை இலை அரியச் சொன்னமை அது பெற்ற பயனடைகின்றேமென்ற கருத்து. இத்தன்மைகளை ஈண்டு விரிக்கவைக்காது முன் விரித்தது என்னையோ? எனின், மகனுக்கு இத்தன்மையுள்ள குருத்து அரிந்து வருக என அறிவுறுத்தி ஏவுதல் ஆண்டுக் கூறும் அமைதி பற்றி என்க.

**விரைந்து வாவென விட்டார்** என்க. ஆவல்மிகுதியால், தாயாரும் தந்தையாரும் மகனை ஏவிவிடுதலினும், அவன் மீண்டு வருதலினும், இருபாலும், விரைவு காணும் அமைதிபற்றி, "விரைந்து" என்பதனை விரைந்துவா என்றும், விரைந்து விட்டார் என்றும் இருபாலும் கூட்டி யுரைக்குமாறு வைத்தார். வரும் பாட்டிலும் "விரைந்து - புக்கு" என்பது காண்க. 23

1806. "நல்லதாய் தந்தை யேவ நானிது செயப்பெற் றே"னென்
றெல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாள ராவொன்
றல்லுற் றழுங்கிச் சோர வங்கையிற் றீண்டிற் றன்றே. உச

(இ - ள்) நல்ல...என்று - "நல்ல தாயும் தந்தையுமாகிய இருவரும் ஏவ, அதன்படி நான் இந்தத் திருப்பணியைச் செய்யும் பேறு பெற்றேன்" என்று மூத்த திருநாவுக்கரசு உள் மகிழ்ந்து; ஒல்லையில்...புக்கு - மிக விரைவில் சென்று தோட்டத்தினுள்ளே புகுந்து; பெரிய...பொழுதினில் - பெரிய வாழையின் செழிப்பாகிய அழகிய குருத்தினை அரியும்போது; வாளரா...அன்றே - ஒளியுடைய பாம்பு ஒன்று துயரமுற்று மயங்கி வீழும்படி அவனது அங்கையில் அப்போதே தீண்டிற்று.

(வி - ரை) **நல்ல......என்று** - இது மூத்த திருநாவுக்கரசு தனக்குள் எண்ணி மகிழ்ந்துகொண்டு பணியிற் புகுந்த நிலை. **நல்ல** - நன்மை தருகின்ற - செய்கின்ற; நன்மை செய்கின்றவர்களாதலின் என்னை இப்பணியில் ஏவி வழிப்படுத்தினர் என்பது குறிப்பு. **தாய் தந்தை** - மக்களை நல்வழிப்படுத்தும் கடமை தாய் தந்தையாரிடத்து முதலில் முன்னிற்பது; அவருள் தாய் முதற்கண் நிற்பவர் என்பது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது நீதி நூல்; **ஏவ** - "ஏவா மக்கள் மூவா மருந்து" என்பது நீதி நூலாயினும் அது பொது விதி. ஈண்டு மக்கள் பலருள்ளும் காலமும் இடமும் தகுதியும் பிறவும் அறிந்து அவ்வவர்க் கேற்றபடி பணித்தல் தாய் தந்தையர்பாலதே யாதலும் அவர் ஏவலை எதிர் நோக்கி அவ்வழி நிற்றல் மக்கள் கடனாதலும் குறிக்க ஏவ என்றார்; **நான்** - மக்கள் பலருள்ளும் நானே இப்பணி பெற்றேன்; "அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே" என்றபடி உயர்வுடைய இறுமாப்பு; இது "நான்" என்றெழும் ஆணவ இறுமாப்பன்று; அவ்வாறன்றி அடிமையிற் சிறப்புடைமைபற்றி இறுமாத்தல் ஆணவத்தை வலியற்றதாகச் செய்யும்; **இது** - திருஅமுதுக்குப் பரிகலம் தேடிக் கொணர்தல் என்ற இப்பெரும் பணி; திருவமுது வகை எத்துணை உயர்வேயாயினும் அதற்கு ஏற்ற ஆசனமாகவும் ஆதாரமாகவும் உதவுவது பரிகலமேயாம். பூசைமுறையில் ஆசனமந்திரம் முதலில் வரும் கருத்தும் காண்க. "அமுது செய்தருள" (1805), (1469), (1470) என்பனவும் இதன் இன்றியமையாமையினையும் ஏற்றத்தையும் குறிப்பன. **செயப் பெற்றேன்** - பெரும்பேறு என்பது.—என்றிவை பலவும் கருதித் தன்னையே மகிழ்ந்து பணியிற் புகுந்தனன் என்ற நயமும், இதனால் அப்பூதியாரே யன்றி அவரது மக்களும் சுற்றமும் நின்ற அன்பு நிலையும் கருதுக.

**ஒல்லையில் விரைந்து** - ஒருபொருட் பன்மொழி மிகுதி குறித்தது.

**தோட்டத்துள்** - இது சோழ நாட்டிற் காணப்படும் அமைதியாக மனையை அடுத்து உள்ளது. இதனால் பரிகலக் குருத்து வாடுதலின்றிப் புதிதாய் இருக்க வேண்டுமென்ற கருத்துப்பற்றித் திருவமுது ஆக்கியபின் குருத்துக் கொண்டுவர விட்டனர் என்பது கருதப்படும்.

**பெரிய வாழை மல்லல் அம் - குருத்து** - "குருநாளக் குருத்து" (1469) என்றதனை விரித்தபடி காண்க. முன் சொல்லியது தாய் தந்தையர் குறிப்பின் ஏவியதும், ஈண்டுக் கூறியது அதனை அதனின் மேலாய் மகன் நிறைவேற்றியதுமாம்.

**வாள் அரா ஒன்று** - வாள் - ஒளி - வாள் போன்று துன்பம் செய்து வதைப்பது என்றலுமாம். "சுடர்விடு நாகம்" (தேவா), "புற்றில்வா ளரவு மஞ்சேன்" (திருவா). அரவுக்கு ஒளியாவது கண்களினின்று வீசும் விடத் தன்மையுடைய ஒளி ஒன்று; "கண்ணெரி காந்துகின்ற பையரவு" (1807); இலங்கையில் உள்ள "திருஷ்டி விட" முடைய பாம்பு வகையினையும் காண்க. இனி, விடப் பல்லின் கூரிய வொளி மற்றொன்று; "கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிறு" (முருகு); "அரவின் வாயின் முள்ளெயி றேய்ப்ப வரும்பீன்று. குரவம் பாவை முருகமர் சோலைக் குற்றாலம்" (பிள். தேவா); இவையன்றி அரவுகளின் உடலில் பன்னிறமுடைய மேல் கீழ்த்தோலின் ஒளி மேலும் ஒன்று; மணிகளின் ஒளியும் குறிப்பு.

**அல்லல் உற்று அழுங்கிச் சோர** - விரைந்து ஏவப்பட்டுப் புக்கு அரிந்த மூத்ததிருநாவுக்கரசு என்ற எழுவாய் மேற்பாட்டினின்றும் வருவிக்க; மேல்வரும் மூன்று பாட்டுக்களினும் இவ்வாறே எழுவாய் வருவித்துக் கொள்க.

**அங்கையில்** - குருத்தினை அரிந்த கையினில். குருத்தினைப் பற்றி அரியலுற்றபோது அவ்விடத்துத் தங்கிய அரவு கையினில் தீண்டுதல் இயல்பு. வாழைக் குருத்துக்களுள் இவ்வாறு சேரும் விடப்பிராணிகளின் தீமையும் நீங்கும் பொருட்டுப் பரிகல இலைகளை முன்னர் நீரால் கழுவியிடும் மரபு வழங்குவதாம். "நீரால் - விளக்கி" (1821) என்பது காண்க.

**தீண்டிற்று** - அரவு கொத்திக் கடித்தலுக்கு வழங்கும் மரபு வழக்கு.

**அன்றே** - அப்பொழுதே; அசை என்றுரைதக்குவாருமுளர்.

**ஒல்லையிலணைந்து** - அழுங்கி வீழ—என்பனவும் பாடங்கள். 24

1807. கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப் பதைப்புடன் "பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தா லெய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று கொடுப்பனென் றோடி வந்தான்;

1808. பொருந்திய விடவே கத்திற் போதுவான் வேக முந்த
வருந்தியே யணையும் போழ்து, "மாசுணங் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவ ரமுது செய்யத் தாழ்க்கயா னறையே" னென்று
திருந்திய கருத்தி னோடு செழுமனை சென்று புக்கான்; உசு

1809. எரிவிட முறையே யேறித் தலைக்கொண்ட வேழாம் வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு மேனியுங் கருகித் தீந்து
விரியுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான். உஎ

1807. (இ - ள்) **கையினில்...வீழ்த்து** - கையினில் தீண்டிக், கையினையே சுற்றிக்கொண்டு கண்களில் எரியினை வீசுகின்த நச்சுப்பையினையுடைய அந்த அரவைக்

கையினை உதறி வீழ்த்திவிட்டு; பதைப்புடன் - உளம் மிகு பதைப்புடனே; "பாந் தள்...கொடுப்பன்" என்று - பாம்பு தீண்டியதாலுளதாகிய கொடிய வேகத்தினால் நான் விழுவதற்கு முன்பே மிக வேகத்தாற் சென்று, அரிந்த இந்தக் குருத்தினைச் சென்று, கொடுப்பேன்" என்று தீர்மானித்து ஓடிவந்தனனாகி; உரு

1808. (இ - ள்) பொருந்திய...முந்த - சேர்ந்த விடத்தின் வேகத்தினும், முன் சொல்லியவாறு ஓடிச்செல்கின்ற அவனுடைய வேகம் முந்தும்படி; வருந் தியே அணையும் போழ்து - வருத்தத்துடனே அணைகின்றபோது; "மாசுணம்... அறையேன்" என்று - "பாம்பு தீண்டிய செய்தியினை அருந்தவராகிய திருநாவுக் கரசர் திருஅமுது செய்வதற்கு இடையூறுகும்படி, நான் யாவரிடமும் சொல்ல மாட்டேன்" என்று உட்கொண்டு; திருந்திய......புக்கான் - திருத்தமுற்ற கருத்தி னுடனே செழிப்புடைய மனையின்கண்ணே சென்று புகுந்தனனாகி; உசு

1809. (இ - ள்) எரிவிடம் முறையே ஏறி - அழிக்கும் விடமானது முறை யிலே மேல் ஏறி; தலைக்கொண்ட எழாம் வேகம் தெரிவுற - தலைக்கொண்ட ஏழாம் வேகத்தை அடைந்த நிலையினைப் புறத்தோற்றத்தினும் தெரியும்படி; எயிறும்... தீந்து - பற்களும் கண்களும் மேனியும் கருகித் தீந்து; விரி உரை குழறி - விரித்துக் கூறும் சொற்கள் தடுமாறி; ஆவி விடக்கொண்டு - உயிர் விடும் நிலை வரவும் அதை விடாமற் றாங்கிக்கொண்டு; மயங்கி வீழ்வான்...வீழ்ந்தான் - மயங்கி வீழ்கின்ற மகன் பரிகலத்துக்காக அரிந்து கொணர்ந்த வாழைக் குருத்தினைத் தாயாரிடம் வைத்து நிலத்தில் வீழ்ந்தனன். உஎ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன. செயலின் றொடர்பும் பொருளின் றொடர்பும் நோக்கி இவ்வாறுரைக்கப்பட்டது. தனித்தனி வினை முடிபு கொள்ளினு மிழுக்கில்லை.

1807. (வி - ரை) **கையினில்...வீழ்ந்து** - கையினில் தீண்டிய பாம்பு அத னோடு அமையாது கையினைச் சுற்றிக்கொண்டு கண்களில் கோபத்தீக் காலும்படி இருந்தது; **காந்துதல்** - தீயின் வெப்ப உணர்ச்சி அணிமையில் உள்ளார்பால் தாக்கும் படி வீசுதல்; **கண் எரி காந்துதலாவது** - கண்ணினின்றும் கோபத்தீயின் வெப்பம் தீக்காற்றுப்போலக் கொழுந்துவிட்டு வெளிவீசுதல். அந்தப் பாம்பு தன்னை ஊறு செய்ய முயன்றான் என்று நினைந்து அக்கோபத்தால் தீண்டினதுட னில்லாது கையினையும் சுற்றிக்கொண்டது. அதனோடு அக்கோபம் தணியாது மிகுந்து கண் எரிவீச நின்றது. தற்காப்புப் பயத்தாற் கோபித்தாலன்றிப் பாம்புகள் தீண்டி ஊறு செய்யா. அவற்றின் நச்சுப்பற்கள் தம்மியல்பில் மேல்வாயுடன் மடங்கிக் கிடப்பனவாதலின் கடிக்கும் இயல்பில்லாதவை. அச்சமும் சினமும் வந்தபோது அவை நிமிர்ந்து விடும்; அப்போது குழாய் போல உள்ள அவற்றின் உட்டுளையின் வழி அவற்றின் அடியில் இருக்கும் நச்சுப்பையினின்றும் விடத்தை கூரிய பல்லினால் கொத்தி, உடம்பில் ஊறுபடுத்தி, அந்த ஊற்றின் வழி உடம்பினுள் இரத்தத்தினுள் புகுந்து கலக்கும்படி உகுத்துவிடும். இது விடப்பாம்பின் பொது இயல்பு. தீண்டிய மட்டில் அகலாது சுற்றிக்கொள்ளுதல் ஒருவகை நச்சுப் பாம்புகளின் சிறப்பு இயல்பு.

**பை அரவு** - பையினை உடைய அரவு - நச்சுப் பாம்பு. பை - நச்சுப் பை. "பையஞ் சுடர்விடு நாகப் பள்ளி" (தேவா).

**உதறி வீழ்த்துதல்** - சுற்றிக்கொண்ட பாம்பினால் மேலும் தீங்கு விளையாமல் அகற்றும் உபாயம். உதறுதலின் விசையினால் வழுவழுப்பான அதன் உடல் நழுவி விழும்.

பதைப்பு - சடுதியில் நேர்ந்த அபாயத்தால் நிகழும் உடல் நடுக்கமாகிய மெய்ப் பாட்டுடன் கூடிய மனநடுக்கம். பதைப்புடன் ஓடிவந்தான் என்று கூட்டுக. பாந் தள் பதைப்புடன் பற்றும் என்று பாம்பின் செயலுக்குக் கூட்டியுரைக்கவும் நின்றது.

பாந்தள் - பாம்பு. பற்றும் - தீண்டும். பற்றும் வேகம் - என்றது பற்றிய தால் உளதாகும் விட வேகம்.

வேகத்தால் எய்தி - விரைந்து செல்லும் வேகத்தினாற் சேர்ந்து. "விடவேகத் திற் - போதுவான் வேகம் முந்த" என இதனை மேல் உரைப்பது காண்க. இங்குக் கூறியது மனத்துணிபு. மேல் உரைப்பது அதனைச் செயலில் நிகழ்த்துவது.

கோய்தூ - என்று இறந்த காலத்தாற் கூறியவதனால் குருத்தரிந்த செய்கை முன் னர் முடிந்தமையும் கூறியபடி. குருத்தை ஈரும்போது அரவு கையில் தீண்டியதாயி னும் அதனால் அம்முயற்சியினைக் கைவிட்டுவிடாது, நிறைவேற்றி முடித்தான் என் பது குறிப்பாற் கூறப்பட்டது. இதனானும், இப்பாட்டிற் கூறிய "சென்று கொடுப் பன்" என்ற மனத்துணிபானும், மேல்வரும் பாட்டிற் கூறுமாறு அதனைச் செயலில் நிறைவுபடுத்திய வகையானும் மகனது வீரமும் மனத்திண்மையும் வினைத்திட்பமும் அன்பின் உறைப்பும் உணர்த்தப்பட்டமை காண்க.

சேன்று கோடுப்பன் - விடவேகத்தினையும் தான் செல்லும் வேகத்தினையும் சென்று சேரும் தூரம் நேரங்களையும் துணிந்து கூறிய மன உறைப்பு.

வீழாமுன் - விடவேகத்தால் தான் வீழ்ந்துபடுவது உறுதி யென்று துணிந்து மேற்செயலை நிச்சயித்தனன் என்க.

பையரா—என்பதும் பாடம். 25

1808. (வி - ரை) போருந்திய - அரவம் தீண்டியதனாற் றன்பால் வந்து சேர்ந்த. இவர்க்கிது பொருந்தாதாயினும் குருவருள் வெளிப்பாடுற்றுப் பொருந்து தற்காக வந்து பொருந்திய என்பது குறிப்பு. விடம் போருந்திய வேகம் என்று கூட்டியுரைத்தலுமாம்.

விடவேகத்தின் - வேகத்தினும். இன் - எல்லைப் பொருளில் வந்த ஐந்த னுருபு. முந்த - விடவேகத்தினும் போதும் வேகம் முற்பட; மிகுதியாக; இதற்குப் பிறர் வேறுரைத்தார்.

முந்த வருந்தியே - முந்துதலினால் வருத்தமுற்று-அஃதாவது வேகத்திற் செல் வதனால் இரத்தவோட்டம் மிகுதிப்பட அதனுட் கலந்த விடத்தின் கொடுமையால் வருத்தமும் மிகுதிப்பட.

அணையும் போழ்து...என்று - செல்கின்ற காலத்தில் இவ்வாறு எண்ணிக் கொண்டு, செல்லத் தொடங்கியபோது வீழுமுன் வேகமாய்ச் சென்று கொடுப் பேன் என்று துணிந்து ஓடத் தொடங்கினான்; ஓட்டத்தினால் வருத்தம் மிகுந்தது; அப்போது "இதனை ஒருவருக்கும் சொல்லமாட்டேன்" என்று எண்ணிக்கொண்டே சென்றனன்.

திருந்திய கருத்து - திருத்தமாவது - யான் இதனை அறைந்தால் அதுபற்றித் தீர்வுதேடப் பெற்றோர் முதலியவர் முயல்வர்; அதனால் காலந்தாழ்க்கும்: அதனால் அருந்தவர் அமுது செய்தலும் தாழ்க்கும்; அது அபராதமாகும்; ஆதலின், என் பொருட்டு அந்த அபராதம் நிகழாமல் நான் இதனை எவர்க்கும் சொல்லமாட்டேன் என்றிவ்வாறு அன்பு வழியிற் கருத்தை ஒருப்படுத்தியது.

சேழுமனே - இந்நிகழ்ச்சியால் சிவனருளும் குருவருளும் திகழச் செழிக்கும் மனை. "அந்தமின் மனை" (458) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

**வேகத்தாற் போதுவான்**—என்பதும் பாடம். 26

1809. (வி - ரை) **எரிவிடம்** - எரிக்கும் விடம். **எரித்தல்** ஈண்டு உயிர்த்தன்மையைத் தாதுக்களினின்று அழித்தல் என்ற பொருளில் வந்தது. எரி போன்ற விடம் என்றலுமாம்.

**முறையே ஏறி** - என்பது இரத்தமுதலாக ஒன்றற்கொன்று தொடர்பாக அமைந்துள்ள தாதுக்களில் அத்தொடர்பு முறையிலே பரவி-முதலில் இரத்தத்திலும், பின்னர், அந்த இரத்தவோட்டம் இருதயத்துட் சென்று, அங்கு நின்றும் ஒருமுறை இருமுறை மும்முறை என்று உடல் முழுதும் பரவும்போது, இறைச்சியிலும் மேதையிலும் எலும்பிலும் என்றிவ்வாறு ஒவ்வொரு ஓட்டத்தில் ஒவ்வொரு தாதுவில் பரவுதல் என்றதாம்.

**தலைக்கொண்ட** - உச்சநிலையினை அடைந்த.

**ஏழாம் வேகம்** - இரத்தவோட்டம் இரத்தாசயத்தினிற் சுத்தி செய்யப்பட்டு உடலின் பல உறுப்புக்களினும் சென்று பரவி மீள அங்குச் சேர்தல் ஒரு ஓட்டம் அல்லது வேகம் எனப்படும். இவ்வாறு ஓடிச்செல்லும் இரத்தத்தில் விடம் பொருந்த அதனால் ஒருமுறை ஓடும்போது அது பரவப்பட்ட ஒரு தாது அழிவுபடும். அடுத்த முறை இன்னொரு தாதுவும் என்றிவ்வாறு ஏழு முறை செல்ல ஏழு தாதுவும் அழியும். இதனை "ஏழாம் வேகம் தேரிவுற......கருகித் தீந்து" என்றார்.

**ஏழாம் வேகம் தேரிவுற - கருகித் தீந்து** - ஏழு வேகமும் முற்றியதனால் தாதுக்களேழும் விடத் தன்மையினைப் பற்றிக்கொண்டு கருமை நிறம் விளங்கி. வேகமேழும் முற்றிய தன்மை கரு நிறம் தோற்றியதனால் வெளியில் தெரிய நின்றது ஆதலின் தேரிவுற என்றார். எயிறும் கண்ணும் மேனியும் என்ற இவையே கரு நிறம் தோன்றவுள்ளன. **தீந்து** - எரிபட்டது போன்ற நிலையடைந்து.* 26

1806 முதல் 1808 வரை நான்கு பாட்டுக்களினும் மகன் செயல் கூறப்பட்டது. அவனைப் பற்றிய வினையெச்ச முற்றுக்களுக்குத் தோன்றா எழுவாயாய் வைத்தது தற்போத மிழந்து பணிசெய்த இவனதுயர்வு குறிப்பு.

**விரி உரை குழறி** - மனக் கருத்தை விரிக்கும் சொல் நேராய் ஒலிக்க வாராது தடுமாற்றத்தை அடைதல் உயிர் போகும் நிலையின் அணிமையை உணர்த்தும் ஓர் குறி; ஆதலின் **ஆவி விட** என்றதனை அடுக்க வைத்தார்.

**ஆவி விடக்கொண்டு** - உயிர் போகும் நிலை வரினும் அதனைப் போகவிடாது தன் உறுதியினால் தடுத்து நிறுத்திக்கொண்டு. இது மிக்க மன வலிமையினால் கூடுவதாம். "தீதிலா நெறியில் விட்ட, சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற வாவி தாங்கும், கொற்றவன்" (486) என்ற மெய்ப்பொருள் நாயனார் வரலாறு ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

**மயங்கி வீழ்வான் - வீழ்ந்தான்** - உடலைத் தாங்கி நிற்கும் நரம்பு - முதலிய தாதுக்களின் இயல்பு அழிந்தமையின் மயக்கமும், அதனால் உடல் வீழ்வதும் நேர்வன: **ஏறி - கருகி-தீந்து - குழறி** - **மயங்கி வீழ்வான்** - என்ற இவைகள் அவன் வீழ்ந்த நிலையின் முன்னிகழ்ச்சிகளாய் வீழ்ந்ததற்குக் காரணமாயின என்று குறிக்க **வீழ்வான் - வீழ்ந்தான்** என்று முடித்தார். வீழ்வானாகி - விழுந்தான் என்க.

**பரிகலக் குருத்து** - பரிகலமாகப் பயன்பட நின்ற வாழைக் குருத்து.

---

*குறிப்பு :—விடம் ஏறும் வேகம் என்பது பற்றியும், பாம்பு விடம் - தீர்வு - முதலியவை பற்றியும் எனது சேக்கிழார் 101—103 பக்கங்கள் பார்க்க.

தாயார் பால் வைத்து - பால் - பாலாக; பாலின்; தாயார்பாற் கொடுத்தான் என்னது வைத்தான் என்றார்; வீழ்வானாகிய நிலையில் அவனது செயல் நிகழ்ந்த தாதலின், அவன் உரியபடி கொடுக்கவும் அம்மையார் வாங்கவும் செயல் முற்றுப் பேறுபெற இயலாமையால் வீழ்வான் - வைத்து - வீழ்ந்தான் என்றார். முன்னர்த் "தெருமந்து, செழுங்குருத்தைத், தாயர்கரத் தினினீட்டித் தளர்ந்ததனைத் தழலுக, மேயபடி யுரைசெய்யான் விழக்கண்டு" (1471) என்றதும் காண்க. முன்னர்த் தாயர் கரத்தினி னீட்டி" என்றது இங்குத் தாயார்பால் வைத்து என்றதனோடு மாறுபடுமே? என்னில் மாறுபடாதென்க. என்னை? வீழும் நிலையில் கையினி னீட்டிய அவன் அவர் வாங்குவதன்முன் நிலை தடுமாறி வீழ்வான் அவரிடத்து வைத்து வீழ்ந்து விட்டனன் என்க.

வைத்து வீழ்ந்தான் - தன் பணியை நிறைவாக்கி முடித்தனன் என்பது. அரா வுதறி வீழ்த்து - என்று - ஓடி வந்தான் (1807), என்று - புக்கான் (1808), கருகித் தீந்து குழறி - ஆவி விடக்கொண்டு - வீழ்வான் - வைத்து வீழ்ந்தான் (1809) என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்பாக்கி முடித்துக் கொள்க. 27

1810. தளர்ந்துவீழ் மகனைக் கண்டு, தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி, யுதிரஞ்சோர் வடிவு மேனி
விளங்கிய குறியுங் கண்டு, "விடத்தினால் வீந்தா" னென்று,
துளங்குத லின்றித், தொண்ட ரமுதுசெய் வதற்குச் சூழ்வார், ௨௮

1811. பெறலரும் புதல்வன் றன்னைப் பாயினுட் பெய்து மூடிப்,
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே,
"அறவிது தெரியா வண்ண மமுதுசெய் விப்போ" மென்று
விறலுடைத் தொண்ட னார்பால் விருப்பொடு விரைந்து வந்தார். ௨௯

1810. (இ - ள்) தாயரும் தந்தையாரும் - தாயாரும் தந்தையாரும்; தளர்ந்து வீழ் மகனைக் கண்டு - மேற்கூறியபடி தளர்ச்சி யடைந்து வீழ்ந்த மூத்த திருநாவுக் கரசு என்ற மகனைக் கண்டு; உளம் பதைத்து - உள்ளம் பதைப்பை யடைந்து; உற்று நோக்கி - அணுகிக் காரணத்தைக் காணக் கூர்ந்து நோக்கி; உதிரம்...கண்டு - உதிரம் சோர்ந்த வடிவத்தினையும் மேனியில் விளங்கிய பிற குறிகளையும் கண்டு; "விடத்தினால் வீந்தான்" என்று - "விடம் தீண்டியதனால் இறந்தான்" என்று துணிந்துகொண்டு; துளங்குதல்......சூழ்வார் - சிறிதும் மனத்துளக்கம் இல்லாமல், அடியவர் அமுது செய்வதற்கேற்ற உபாயத்தைத் தெரிந்து செய்வாராகி; ௨௮

1811. (இ - ள்) பெறல் அரும்...மூடி - பெறுதற்கரிய புதல்வனைப் பாயினுட் பொதிந்து மூடி; புறமனை...வைத்தே - மனையின் புறத்தின் முற்றத்தினிடத்து ஒரு புடையில் மறைத்து வைத்தே; "அற இது...செய்விப்போம்" என்று - "இது சிறிதும் தெரியாத வண்ணமாக அவரை நாம் அமுது செய்விப்போமாக" என்று துணிந்து உறுதிகொண்டு; விறலுடை...வந்தார் - விறலுடைய தொண்டராகிய திருநாவுக்கர சரை நோக்கி விருப்பினோடும் விரைந்து வந்தார். ௩௦

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1810. (வி - ரை) தாயரும் தந்தையாரும் - அடியவரைத் திருவமுது செய்வித்துப் பூசிக்கும் பணியில் முதன்மைநிலை இங்குத் தாயார்பால் நின்றமை குறிக்க அவரை முன்வைத்துக் கூறினார். முன் "தாய் தந்தை" (1806) என்றதும் ஆண்டுரைத்தவையும் சிந்திக்க; அங்குக் கூறியது திருப்பணியில் ஏவிய நிலை; இங்குக் கூறு

வது, "எத்தீ புகினு மெமக்கொரு தீதிலே"; "வானந் துளங்கிலென்" (தேவா); "பூத மைந்து நிலேயிற் கலங்கினும், மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார், ஓது காத லுறைப்பி னெறிநின்முர்" (142) என்றபடி மாயை வயப்பட்ட உலகர் கலங்கி நிலேதளரத்கூடிய எது வரினும் சிவனன்பிற் கலங்காத அதனினும் சிறந்த நிலே என்பது குறிக்க மீண்டும் தாயரும் தந்தையாரும் என்று எடுத்துக்கூறியதனுடன் அர் - ஆர் என்ற சிறப்புப்பன்மை விகுதிகளும் புணர்த்தி ஒதினுர். மேலும் "பெற்ற மனம் பித்து" என்ற முதுமொழிப்படி உலக நிலேயில் இவ்வாறு மகன் வீழக்கண்டபோது துளக்கமுறுவாரில் முன்னிற்பவர் தாயரேயாதலும் குறிப்பு. "தாய் பிடிக்க" என்ற சிறுத்தொண்டநாயனுர் புராணத்தினுள் வரும் இதன் முறுகி விளேந்த நிலேயின் தன்மையும் ஈண்டு வைத்துக் கருதற்பாலது.

**உளம் பதைத்து** - இது மகன் மயங்கி வீழக்கண்டவுடன் உலக நிலேயின் முதலில் அன்பு காரணமாக நிகழும் உள்ள நிகழ்ச்சியாயினும், அடியவர் திருப்பணியிற் புகுந்து பணி செய்தவனும், மேலும் செய்யவுள்ளவனுமாகிய ஒருவனுக்கு வந்த துன்பம் என்ற உணர்ச்சி அப்பதைப்பினே அதிகரிப்பித்து அதன் காரணத்தை உற்று நோக்கி யாராயத் தூண்டிற்று என்க. இல்லறத்தில் "வாழ்வாங்கு வாழ்ந்த" எந்தம் பெருமக்களாகிய அடியார்களிடத்து இவ்வாறு உலகநிலே யன்பு அங்கங்கும் காணப்படும். ஆயினும் உலகமே பொருளென மயங்கும் ஏனைய மாக்களிடத்துப்போல இவ்வன்பு சிவனடிமைத்திறச் செயல்களுக்கு இடையூருக நில்லாமையோடு அதனுள் அடிப்பட்டுத் துணையாயும் நின்றது. இவ்வியல்பும் வேற்றுமையும் உணரமாட்டாத புல்லறிவாளர் தத்தம் நிலேயே பற்றிப் பலவாறு பிதற்றுவர்.

**உற்று நோக்கி** - ஆராய்ந்து. காணப்பட்ட நிலேகளின் துணேகொண்டு காணப்படாத காரணத்தைக், கருதல் அளவையால் நிச்சயிப்பதற்காக ஆய்ந்து. **உற்று** - என்பது புறச்சோதனையினேயும், **நோக்கி** - என்பது அதன் துணேகொண்டு கருதும் மன நிகழ்ச்சியையும் குறித்தன.

**உதிரஞ்சோர் வடிவு** - இது முதலில் தேற்றமாகக் கண்ணுக்குப் புலப்பட்டதாதலின் முதற்கண் கூறப்பட்டது. வாழைக் குருத்துக் கொணர்ந்து வைத்த கையில் காணும் ஊறும், அதனில் சோரும் குருதியும் முன்னர்த் தோற்றப்பட்டன. மேல்தோலில் ஊசியாற் கொத்தப்பட்டன போன்ற இரட்டையாகிய ஓட்டைகளும் அவற்றினின்று சிறிதாகக் கசியும் இரத்தமும் என்ற இவையே மருத்துவ நூலோர் இது பாம்பின் கடியினுல் ஆயிற்று எனக்கருதித் துணியத் துணேசெய்யும் முதல் அடையாளங்கள் என்பர். இங்கு வடுவும் என்று பாடங்கொள்வாருமுண்டு.

**மேனி விளங்கிய குறியும்** - முன் பாட்டிற் (1809) கூறியவை. **குறி** - "உதிரஞ்சோர் வடிவு" அன்றிப் பிற குறிகள்.

**"விடத்தினுல் வீந்தான்"** என்று - உற்று நோக்கிக் கண்ட குறி முதலிய வற்ருல் துணிந்த முடிபு. இது குறிகளாகிய காரியம், மேலே "புகைதன் ஞுதி யாய வனல்காட்டல்" (சித்தி-அளவை-10) போலக் காரணமாகிய விடத்தினேக் காட்டியதனுற் றுணியச்செய்த காரிய எது எனப்படும். இதன் இயல்பெல்லாம் அளவை நூல்களுட் காண்க.

**துளங்குதல் இன்றி** - ஈண்டுத் துளக்கம் என்பது சிவனடிமைத்திறம் பற்றிய அன்பினிலேயினின்று நிலேபெயர்தல் என்ற பொருளில் வந்தது. "துளங்காத சிந்தையராய்த் துறந்தோர்" (திருத்தாண்டகம் - கோயில் - 7). **துளக்கம்** - மனவருத்தம் என்று பொருள்கொண்டு, வீந்தானென்று வருந்தாமல் என்றுரைப்பாருமுண்டு. எவ்வாறு கொள்ளினும், முன் "உளம்பதைத்து" என்றது, நோக்கித் துணிவதன்

முன்னர் முதற்கண் உண்டாகிய நிகழ்ச்சியாதலின் இதனோடு முரண்படாமை உய்த்துணர்ந்து கொள்க.

சூழ்வார் - சூழ்தல் - ஆராய்ந்து தகுதியாவனவற்றைச் செய்தல்; சூழ்வாராகி முற்றெச்சம். சூழ்வார் - பெய்து - மூடி - வைத்தே - என்று - வந்தார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 28

1811. (வி - ரை) பேறலரும் புதல்வன் - முன் பாட்டுக்களிலும், மேல் 1818-லும் கூறும் அவனது பெருமைகள் எல்லாம் குறிக்கப் பேறலரும் என்றார். பாயினுள் - பெய்தல் - மூடுதல் - புறமனை முன்றிலின் பாங்கு ஓர்புடையினின் வைத்தல் - மறைத்து வைத்தல் என்ற இச்செயல்கள் ஒவ்வொன்றும் அத்தாயர் தந்தையார்களது அன்பின் உறைப்பினையும், உண்மை தெளிந்த வுணர்வின் சீலச் செம்மை ஒழுக்கத்தினையும் சிறக்க உணர்த்தின. ஏனையோர்க்கு இவை ஒரு சிறிதும் இயலாமையும் கருதுக. சிவன்பா லன்புச்செயல்களின் முன்னர் உலக மாயா காரியங்கள் யாவையும் ஒதுக்கி வைக்கத்தக்கன என்ற உண்மை விளக்கப்பட்டதும் காண்க.

அற - ஒரு சிறிதும்: இது - மகன் விடத்தினால் வீந்ததும் தாம் அவனுடலை மறைத்து வைத்ததும் முதலிய இவற்றின் தொகுதி. புற நிகழ்ச்சிகளேயன்றித் தம் மன நிகழ்ச்சிகளும் குறிக்கப்பட்டன.

"இது அற தேரியாவண்ணம் அமுது செய்விப்போம்" என்று - இது அவர்கள் தொண்டரை அமுது செய்வித்தற்குச் சூழ்ந்து செய்துகொண்ட முடிபு. தேரியாவண்ணம் - புறத்திற் றோற்றுதபடி. சாவு நிகழ்ந்த மனையில் ஆசௌச முறைகள் கையாளப்படுதலான், இவ்வாறு நல்விருந்து அமுது செய்வித்தல் முதலியவை கூடா என்பது ஒழுக்க நூலுள் விதித்த மரபு. "அழலோம்பு மப்பூதி" (தேவா) என்றும், "அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார் (1466) என்றும் சிறப்பிக்கப்பட்ட வைதிக ஒழுக்கமுடைய அந்தணர் பெருமானாகிய அப்பூதியார், இவ்வாறு அன்று அந்நிலையில் அடியவரை அமுது செய்விக்கத் துணிந்தமை அவ்வொழுக்கத்துக்கு மாறுபாடன்றோ? எனின், அன்று; என்னை? அவ்விதிகள் எல்லாம் உலகநிலை நிறுத்தல் என்னும் பயனளவே தருவன; இங்கு மேற்கொண்டது உலகிறந்த நிலையில் அவற்றின் மேம்பட்டனவாய் உயிர்க்குறுதிதரும் சிவனடிமைத் திறத்தின் நிகழ்ந்தன. உலக வொழுக்க விதிகள் இவற்றின்முன் நில்லாவாதலின் அவற்றைக்கொண்டு சிவனடிமைப் பண்பின் உறைப்பின் நிகழ்ச்சிகளை அளக்க முயலுதல் அளவை மாறுபாடென் றொழிக. இதுஅற - இந்நிலை தீரும்படி என்ற குறிப்பும் காண்க.

விறல் - மறைப்பினும் மனத்தினுட் புகுந்து அறிந்து கொள்ளும் தெய்வ விறலும், சிவனருளால் உயிரை மீட்பிக்கும் விறலும் உடையார் என்பது குறிப்பு. "இது வீடும் வேண்டா விறல்" (143) உடைமையினால் வருவதென்க.

விருப்போடு விரைந்து வந்தார் - விருப்போடு - புதல்வன் செய்தி முற்றும் மறந்து மனத்தினுள் அடியாரை அமுது செய்விக்கும் விருப்பமே நிறைந்த நிலையில். விரைதல் - அடியவரைப் பசி தீர்த்தலின் விரைவு. "நாதன்ற னடியாரைப் பசி தீர்ப்பேனென" (1734) என்று அம்மையார் ஒரு மாங்கனியுடன் அமுது செய்வித்தமை கருதுக. "காலந்தாழ்க் கின்ற தென்றே... அணையவைத்து" என்று மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

வந்தார் - புதல்வனை மறைத்து வைத்த இடத்தினின்றும் தொண்ட ரெழுந்தருளியிருந்த இடத்தை நோக்கிவந்தார். 29

1812. கடிதுவந் "தமுது செய்யக் காலந்தாழ்க் கின்ற" தென்றே
அடிசிலுங் கறியு மெல்லா மழகுற வணைய வைத்துப்,
படியில்சீர்த் தொண்ட ஞர்முன் பணிந்தெழுந் "தமுது செய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீ" ரென்றவர் கூறக் கேட்டு, ௬0

1813. அருந்தவ ரெழுந்து செய்ய வடியிணை விளக்கி, வேறோர்
திருந்துமா சனத்தி லேறிப், பரிகலந் திருத்து முன்னர்,
இருந்து,வெண் ணீறு சாத்தி, யியல்புடை யிருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கு மளிக்கும் போழ்தில், ௬௧

1814. ஆதிநான் மறைநூல் வாய்மை யப்பூதி யாரை நோக்கிக்
"காதலா லிவர்க்கு மூத்த சேயையுங் காட்டு முன்னே
மேதகு பூதி சாத்த" வென்றலும், விளைந்த தன்மை
யாதுமொன் றுரையா "ரிப்போ திங்கவ னுதவா" னென்ருர். ௬௨

1812. (இ - ள்) கடிது வந்து-விரைவாக வந்து; அமுது...என்றே - அமுது செய்யக் காலதாமதம் நேரிடுகின்றதென்று உட்கொண்டு; அடிசிலும்...வைத்து - அடிசிலும் கறிகளும் முதலிய எல்லாவற்றையும் அணிபெற ஒழுங்காகப் பக்கத்தில் அமைத்துவைத்துக்கொண்டு அதன்பின்; படியில்...கூற - ஒப்பற்ற சிறப்புடைய தொண்டர்பெருமான் றிருமுன்பு விழுந்து பணிந்து எழுந்து நின்று, "திருவமுது செய்து எமது குடிமுழுதும் உய்யும்படி ஆட்கொண்டருள வேண்டும்" என்று அவர் சொல்ல; கேட்டு - (திருநாவுக்கரசர்) அதனைக் கேட்டு, ௬0

1813. (இ - ள்) அருந்தவர்...ஏறி - அருந்தவராகிய அவர் எழுந்து செம்மை பொருந்திய திருவடிகளை விளக்கிக் கொண்டு மற்ருெரு திருந்தும் ஆசனத்தில் ஏறி; பரிகலம் திருத்து முன்னர் - அவர்கள் பரிகலத்தைத் திருத்தி விதிப்படி அமைப்பதற்கு முன்னர்; இருந்து...போழ்தில் - அந்த ஆசனத்தில் அமர்ந்து தாம் திருவெண்ணீற்றினைச் சாத்தி, இயல்பின் நின்ற அப்பூதியாருக்கும் அவர் மனைவியார்க்கும் பொருந்திய திருநீற்றினை அளித்துப், புதல்வர்களுக்கும் திருநீற்றினை அளிக்கும் போது, ௬௧

1814. (இ - ள்) ஆதி...நோக்கி - ஆதி நான்மறைகளினும் நூல்களினும் பயின்ற வாய்மைச் சீலமுடைய அப்பூதியாரை நோக்கி; காதலால்...என்றலும் - காதலினுலே இவர்க்கு மூத்த பிள்ளையையும் முன்னே மேதகு திருநீறு சாத்துதற்குக் காட்டுவீராக!" என்று அரசுகள் சொல்லவும்; விளைந்த...என்ருர் - நிகழ்ந்த செயல்களொன்றினையும் சிறிதும் வெளிப்பட எடுத்து உரையாதவராகி "இப்போது இங்கு அவன் உதவமாட்டான்" என்று சொன்ஞர். ௬௨

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1812. (வி - ரை) கடிது வந்து - என்றே - எல்லாம் அணையவைத்து - "தொண்டனுர்பால் - வந்தார்" என முன்பாட்டிற் கூறியது, புறமனை முன்றிற் பாங்கோர்புடையினின்று தொண்டரை நோக்கி வந்தமை குறித்தது. இங்கு வந்து என்றது மனையினுள் அடிசில் அமைத்த இடத்துக்கு வந்தமை குறித்தது.

"அமுது...தாழ்க்கின்றது" என்றே - அரசுகளைக் கண்டுகொண்டு பின் இசைவு பெற்று அறுசுவை அமுது ஆக்கவும், பின்னர்ப் புதல்வனது நிகழ்ச்சி யமையவும், என்றிவ்வாறு பலவாற்ருலும் நெடுநேரம் சென்று விட்டமையால் மேலும் காலத்

தாழ்வு நேரலாகாதென்று உட்கொண்டு; அரசுகள் வழிப்போந்த வேனிலிளைப்பையும் உடன் உட்கொண்டு என்க.

**அடிசிலும்...வைத்து** - அமுதும் கறிகளும் வேண்டும்போது கொணர்ந்து பரிமாறுதலில் மேலும் காலத் தாழ்வு நேராதபடி உணவுகொள்ளு மிடத்தின் அணிமையிற் பாங்குபெற அமைத்து வைத்துக்கொண்டு. அழகுற - வரிசைபெற வைத்தல், நல்ல பாத்திரங்களில் வைத்தல் என்றிவ்வாறெல்லாம் பொருந்த. **எல்லாம்** - தண்ணீர் முதலியனவும்.

**படியில் சீர்** - **படி** - ஒப்பு. இவரின்படி வேறொருவருமிலர். **சீர்** - திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட சிறப்பு.

**அமுதுசெய்து எம் குடி முழுது உய்யக் கோள்வீர்** - சிவஞானிகளாகிய மாகேசுரர்களை அமுது செய்விக்கும் பலன்பற்றித் திருமூலர் "படமாடக் கோயிற் பகவற்கதாமே", "உண்டது மூன்று புவனமு முண்டது", "பகரு ஞானி பகலூண் பலத்துக்கு, நிகரில்லை" என்று பலவாறும் விதந்தெடுத் தோதுதல் காண்க.

**எம் குடி முழுது உய்ய** - ஒரு குடியில் ஒருவர் செய்த சிவ புண்ணியம் அக்குடியில் இருபத்தொரு தலைமுறையளவும் ஏற்றவாறு பலன் தரும் என்பர். "மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை, யாழா மேயரு ளரசே போற்றி" (திருவாசகம்). "கண்டோர் கேட்டோர், கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு முத்திவரங் கொடுப்போம்" என்று இதுபற்றியே அருணாசல புராணமும் கூறும். ஈண்டுக் **குடிமுழுது உய்யக்கோள்க** என்தனல் வீந்து கிடக்கும் புதல்வன் உள்ளிட்ட என் குடி முழுதும் என்ற குறிப்பும் தருதல் காண்க. "நானு மறியேன்; அவளும் பொய் சொல்லாள்" என்ற பழமொழிப்படி அப்பூதியார் திருவாக்கினின்று அவரை யறியாமலே போந்த விண்ணப்பத்தின்படி சிவனருளால் "மூத்த சேயையும் காட்டும் முன்னே மேதகு பூதி சாத்த" (1814) என்று அப்போதே அரசுகள் அருளிச் செய்த திறமும் கண்டு கொள்க. 30

1813. (வி - ரை) **செய்ய அடியிணை விளக்கி** - முன்னமே அப்பூதியாரால் தமது திருவடிகள் விளக்கப்பட்டு ஆசனத்தில் அரசுகள் எழுந்தருளி யிருந்தார் (1802 - 1803). ஆயினும் திருவமுது செய்வதற்குமுன் பாதம் விளக்கிக்கொள்ள வேண்டிய விதிபற்றி அடியிணையும் திருக்கைகளும் விளக்கினர்.

**செய்ய** - செம்மையுடைய. செம்மையாவது, சிவநெறியிற் சரித்த தன்மை. **செய்ய** - சிவந்த என்றலுமாம்.

**வேறு ஓர் திருந்தும் ஆசனத்தில் ஏறி** - **வேறு** - முன் அமர்ந்திருந்த (1803) ஆசனத்தின் வேறாகிய. **திருந்தும் ஆசனம்** - அப்போது பயன்படாது, இனிப் புதல்வன் உயிர் பெற்றெழுந்தபின் ஆசனமாகப் பயன்படவுள்ள தென்பது குறிப்பு. இவ்வாறன்றிச் **சேல்ல - அடியிணை விளக்கி - ஆசனத்திலேற்றி** - என்று பாடங் கொண்டு அப்பூதியாரது உபசரிப்பாக உரைகொள்வாருமுண்டு. அவை முன்னரே நிகழ்ந்து விட்டமை 1802 - 1803-ல் கூறப்பட்டன.

**பரிகலம் திருத்து**தலாவது, இடம் தூய்மை செய்தலும், வாழைக் குருத்தைக் கழுவித் தூய்மை செய்தலும், உரியபடி அமைத்தலும் முதலியன.

இங்கு இவை முற்றுப்பெறுமற் பின்னரே நிறைவெய்துதலின் பின்னர் (1821) விரிக்கப்படும்.

**இருந்து** - ஆசனத்தில் திருஅமுது செய்யும் பாங்கினில் அமர்ந்து.

**வெண்ணீறு சாத்தி** - அமுது செய்வதற்கு முன்னும், செய்த பின்னும் திருநீறணிதல் வேண்டுமென்பது விதி.

இயல்புடை இருவர் - "இயல்பினு லில்வாழ்க்கை" என்ற திருக்குறள் காண்க. இயல்பாவது சிவனடிமைத் திறத்தை அடிப்படையாகக் கொள்ளுதல்.

நீறு நல்கி - அடியார்கள் மாகேசுவர பூசை கொண்டருளுமுன்பு இவ்வாறு நீறு நல்குதல் சைவ மரபின் நல்வழக்கு. இதுவே இங்குச் சரித மேல்நிகழ்ச்சிக்குக் காரண மாயினமை காண்க. இந்த நல்வழக்குக் கையாளப்படுதல் நலம் தரும்.

இல்லுடை இருவருக்கும்—என்பதும் பாடம். 31

1814. (வி - ரை) ஆதி நான்மறை நூல் - எல்லாவற்றுக்கும் ஆதியாகிய மறை என்றும், ஆதியாற் றேற்றுவிக்கப்பட்ட மறை என்றும் உரைக்க நின்றது. மறை நூல் - மறைகளும் அவற்றின் வழிவந்த மிருதி முதலிய நூல்களும்.

வாய்மை - வேதத்தினுள் சிறந்த அறமாகச் "சத்யம் வத" என்று விதிக்கப் பட்டது வாய்மை.

வாய்மை அப்பூதியார் - சிவனடிமைத் திறமாகிய அன்பு நெறியிற் பிறழாமை போல, வேத வாய்மையினும் பிறழாத பெருமை விளங்கும் இடம் இதுவாதலின் இங்கு இத்தன்மையாற் கூறினர்.

காதலால் - சாத்த என்க. காதலால் - மூத்த சேய் - என்று கூட்டி உமது காதல் செல்லும் வகையால் மூத்தவன் என்றலுமாம்.

முன்னே மேதகு பூதி சாத்த - சிறுவர்களுக்குப் பெரியோர் தாமே கரத்தால் நீறு சாத்தி ஆசிபுரிதல் மரபு. முன்னே - ஏனை இளைய பிள்ளைகளுக்கு அளிக்கும் முன்பு. சேயையும் - இவர்களைக் காட்டியதுபோல அவனையும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. மேதகு - மேன்மையுடைய. மேம்பாடாவது உயிர்க் கும் உடலுக்கும் ஒருங்கே உறுதி செய்யும் பெற்றி.

பூதி - திருநீறு. சாத்த - அளித்துச் சாத்துவிக்க - அணியச் செய்ய என்றலுமாம்.

யாதும் ஒன்று உரையார் - நிகழ்ந்தனவும் மேல் விளைந்தனவுமாகியவற்றுள் எப் பகுதியும் ஒரு சிறிதும் விரித்துச் சொல்லாதவராகி: ஒன்று - ஒன்றும் - ஒரு சிறிதும். உம்மை தொக்கது. உரையார் - உரையாராகி: முற்றெச்சம். உரையார் - என்றார் என்று கூட்டி முடிக்க.

உரைத்தல் - ஈண்டு விரித்துக் கூறுதல் என்ற பொருளில் வந்தது. வரும் பாட்டில் "விரித்துரையும்" (1815) என்பது காண்க.

இப்போது இங்கு அவன் உதவான் - இஃது உண்மைக் கூற்றேயாதலை உணர்க. இங்கு அப்பூதியார் மெய் சொல்லாது மறைத்தது தகுதியாமோ? என்று ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சியாளருமுண்டு. இதனை நோக்கியே "களவு பொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்" (1784) என்றும், "ஆதி நான்மறை நூல் வாய்மை யப்பூதியார்" (1814) என்றும் ஆசிரியர் காட்டி, உலகர் அபசாரப்படா வண் ணம் எச்சரித்தமை காண்க. இஃது உரைத்தபோது உண்மையாதல் மட்டுமன்றி இப்போது - உதவான் என்றமையால் பின்னர் உதவுவான் என்றும், இங்கு என்றமை யால் இவ்விடத்தன்றிப் பின்னர்த் திருக்கோயிலில் உதவவுள்ளான் என்றும், மேல் வரும் விளைவுபற்றிய உண்மையும் குறிப்பிற் பெறவந்த அழகும் அமைதியும் காண்க. இப்போது - உதவான் என்றமையால் அழைக்க வந்து உதவும் நிலையில் அவன் இல்லை என்ற உண்மை தானே போதருதலும் காண்க. "மெய் விரித்துரை யும்" (1815) என்றமையால் அரசுகள் இதனை "மெய்" என்றே கொண்டமையும் காண்க.

காதலிவர்க்கு—என்பதும் பாடம். 32

1815. அவ்வுரை கேட்ட போதே யங்கண ரருளா, லன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர, நோக்கி, [டால்
"யிவ்வுரை பொறுதென் னுள்ள ; மென்செய்தா னிதற் "கோன்" றுண்
"மெய்விரித் துரையு " மென்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி, ௧௩

1816. "பெரியவ ரமுது செய்யும் பேறிது பிழைக்க வென்னோ
வருவ?" தென் றுரையா ரேனு, மாதவர் வினவ வாய்மை
தெரிவுற வுரைக்க வேண்டுஞ் சீலத்தாற், சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி, மைந்தற் குற்றது பகர்ந்தா ரன்றே ; ௧௪

1817. நாவினுக் கரசர் கேளா "நன்றுநீர் புரிந்த வண்ணம் ! ;
யாவரித் தன்மை செய்தார் ?" என்றுமுன் னெழுந்து சென்றே,
யாவிதீர் சவத்தை நோக்கி யண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார் ; ௧௫

1818. தீவிட நீங்க வுய்ந்த திருமறை யவர்தஞ் சேயும்,
மேவிய வுறக்க நீங்கி விரைந்தெழு வானைப் போன்று,
சேவுகைத் தவராட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ றளித்தா ரன்றே ! ௧௬

1815. (இ - ள்) அவ்வுரை......நோக்கி - அந்த உரையினைக் கேட்டவுடனே, அன்பரது செம்மையுடைய திருவுள்ளத்தின் கண்ணே ஓர் தடுமாற்றம் சேர, அதனை நோக்கி, "இந்த உரையினை என் உள்ளம் பொறுக்கலாற்றாது; அவன் என்ன செய்தனன்; இதற்கெல்லாம் உள்ளுறை "ஒன்று" திண்ணமாக உண்டு; மெய்யினை விரித்துக் கூறுவீராக !" என்று அரசுகள் கூறுதலும் உடல் நடுங்கிப் பயந்து, ௧௩

1816. (இ - ள்) பெரியவர்......உரையாரேனும் - "பெரியவராகிய திருநாவுக்கரசர் திரு அமுது செய்தருளும் இப்பெரும் பேறு கிடையாமற் பிழைக்கும்படி இவ்வாறு வருவதும் என்னோ ?" என்று உட்கொண்டு உரையாமல் இருப்பாராயினும்; மாதவர்......சீலத்தால் - பெருந்தவராகிய அவர் வினவும்போது வாய்மையை உள்ளவாறு தெரியும்படியாகச் சொல்லிவிட வேண்டும் என்ற செம்மை ஒழுக்க நிலையினாலே; சிந்தை நொந்து - மனம் உடைந்து வருந்தி; பரிவொடு வணங்கி - துயரத்தோடும் வணங்கி; மைந்தற்கு உற்றது பகர்ந்தார் அன்றே - மகனுக்கு நேரிட்டதனை உள்ளபடி அப்பொழுதே உரைத்தனராக; ௧௪

1817. (இ - ள்) நாவினுக்கரசர் கேளா - திருநாவுக்கரசர் அதனைக் கேட்டு; நன்று நீர்......சென்றே - "நீர் மொழிந்த வண்ணம் நன்று! இத்தன்மை செய்தவர் இவ்வுலகில் யாவர் உள்ளார் ?" என்று கூறி, முன்னாக எழுந்து சென்றே; ஆவி தீர் சவத்தை நோக்கி - உயிர் போயின அந்தப் பிள்ளையின் சவத்தினை நோக்கி; அண்ணலார்......பாற்றுவித்தார் - பெருமையுடையாராகிய சிவபெருமான் அருள் செய்யும்படி பாவின் இசையுடைய திருப்பதிகத்தினைப் பாடிப் பாம்பின் விடத்தைப் போக்கியருளினர் ; ௧௫

1818. (இ - ள்) தீ விடம்...சேயும் - தீப்போன்ற விடம் இவ்வாறு நீங்கப் பெற்று உய்தி யடைந்த திருமறையவராகிய அப்பூதியாருடைய புதல்வனும்; மேவிய......போன்று - பொருந்திய தூக்கத்தினின்றும் நீங்கி விரைவாக எழுவானைப்

போல ; சேவுகைத்தவர்......வணங்க - இடபத்தைக் கொடியாக உயர்த்த சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசருடைய செம்மையுடைய மலர் போன்ற திருவடிகளில் வணங்க ; கண்டு - அதனைக் கண்டு ; புனித நீறு அன்றே அளித்தார் - திருநாவுக்கரசர் புனிதத் திருநீற்றினை அன்றே அளித்தனர். ௫௬

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன. 1817 - 1818 திருப்பாட்டுக்கள் முன் பாட்டுக்களுடன் பொருட்டொடர்பும் சொற்றொடர்பும் கொண்டு விரைந்து தொடரும் ஒரு செயல் முடிபாகக்கொள்ள நின்றமையின் அவ்வாறு ஒரு முடிபாக்கி உரைக்கப்பட்டன. இவை யிரண்டினையும் இவ்வாறன்றித் தனி வினை முடிபாகவே கொண்டுரைப்பினு மிழுக்கில்லை. இவற்றின் பொருளனைத்தையும் திருநாவுக்கரசர் புராணத்தினுள் (1473) ஒரே பாட்டில் ஒரே முடிபாகவைத்துரைத்தமையும் காண்க.

1815. (வி - ரை) **அன்பர்** - திருநாவுக்கரசர். அப்பூதியார் என்று கொண்டுரைத்தனர் முன் உரைகாரர் ; அது பொருந்தாமை முன்னர் (1472-ம் திருப்பாட்டின் கீழ்) விளக்கப்பட்டது. ஆண்டுக் கண்டு கொள்க.

**செவ்விய** - திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட என்க. சிவத்தன்மையில் அடங்கி நிற்றலின் எதுவரினும் துளங்காது தம் நிலை திரியாமல் நிற்குமென்பதாம்.

**ஓர் தடுமாற்றம் திரு அருளால் சேர** - என்க. தடுமாற்றமாவது நிலை கலங்கும் உள்ள நிகழ்ச்சி. ஓர் - ஓர்வதற் கேதுவாகிய. ஒரு என்றலுமாம். சேர - முன் இல்லாத உரை கேட்ட அப்போதே வந்துகூட. நோக்குதல் - கருதுதல்.

**தடுமாற்றத்தின்** விளைவினை அரசுகள் கூறுவது, தாமறிந்தவாறு அன்பின் பெருமையுடைய அப்பூதியார், கேட்கப் பொறா உரை கூறும் காரணம் யாது என்ற குறிப்புடையதாம்.

**என் உள்ளம் இவ்வுரை போறாது** - அடியார்பால் அருட்பூதி பெறுதற்கு அனைவரும் முந்துகின்ற இச்சமயம் அவன் தானே முன்னிற்க வேண்டியவனாயிருந்தும், அரசுகள் "பூதி சாத்த அவனையும் காட்டுக" என்று தாமாகக் கேட்டருளிய போதும், "இங்கு இப்போது அவன் உதவான்" என்றவுரை கேட்க உள்ளம் பொறாதாயிற்று.

**என் செய்தான்** - பூதி சாத்த உதவாமைக்குத் தக்க குறையாக என் செய்தான் என்க.

**இதற்கு "ஒன்று" உண்டால்** - இதற்கு - இவ்வாறு வாராமைக்கு. ஒன்று - ஏதோ ஒரு மறைவாகிய காரணம். உண்டால் - உண்டென்பது துணிபு. இதற்கு "ஒன்று" உண்டு - "இதற்குத் தீர்வாகத் திருவருள் ஒன்றும், "ஒன்று கோலாம்" என்ற மந்திர உருவாகிய திருப்பதிகமும் உறுதியாக உண்டு ; நீர் அஞ்ச வேண்டா" என்ற பிற்சரித விளைவின் உண்மைக் குறிப்பும்பட நின்றது காண்க.

**மெய் விரித்து உரையும்** - நீர் முன் உரைத்தது மெய்யே ; ஆயினும் அது மறையாக இருத்தலின் அதனை விரித்துக் கூறுவீராக. மெய் உரையும் என்னாது விரித்துரையும் என்றதனால் அப்பூதியாரது வாய்மை தவறாத வேதவொழுக்கம் அரசுகளால் போற்றப்பட்டது காண்க.

**விதிர்ப்பு** - உடல் நடுக்கமும் மன நடுக்கமும். அஞ்சி - அச்சத்தின் காரணம் "இதனாற் பெரியவர் அமுது செய்யும் பேறு பிழைத்துவிடுமோ ?" என்பது என மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

1816. (வி - ரை) **பெரியவர்......உரையாரேனும்** - விரித்துரையும் என்ற அரசுகளுக்கு, அவ்வாறு விரித்துரைப்பின் பெரியவர் அமுது செய்யார்; இறந்த மகனைப் பற்றிச் செய்ய வேண்டுவனவற்றின் முயல விடுப்பர்; அவரை அமுது செய்விக்கக் கிடைத்த இப்பேறு பிழைக்குமாதலின் விரித்துரையார் ஆயினும்;

**மாதவர்......சீலத்தால்** - பெருந்தவர் விரித்துரைக்க வினவும்போது அவ்வாறே உண்மையினை அவர் தெரியும்படி விளங்க உரைத்தல் வேண்டும் என்பது சீலம் - செம்மை ஒழுக்க விதி - ஆதலினால்; இங்கு இரண்டு கட்மைகள் அப்பூதியார் முன் நின்றன; பெரியவர் அமுது செய்தல் பிழைக்கும்படியாக விளங்கச் சொல்லா திருத்தல் ஒன்று; அவர் கேட்க உண்மையே சொல்லும் சீல நெறி நிற்றல் மற்றொன்று; இவையிரண்டினும் சங்கடமுண்டாயினும் பிந்திய நெறி நிற்றலே இங்குச் செய் தக்கது; அவ்வாற்றினில்லாமை பாவம் எனத் துணிந்து என்க. இவ்வாறே இரண்டு தருமங்களினும் சங்கடங்களிடையே நின்ற நிலையில் காரைக்காலம்மையார் "செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தால்" (1744) நிகழ்ந்தபடியே கணவனிடம் மொழிந்த சரிதம் இங்கு நினைவு கூர்தற்பாலது.

உண்மைக்கு மாறு சொல்லாவிடினும், இவ்வாறு நிகழ்ச்சியை மறைவு செய்தலும், உண்மை தெரிந்தால் அமுது செய்ய மாட்டார் என்றறிந்த அருந்தவரை உண்மை தெரிவிக்காமல் அமுது செய்விக்கத் துணிதலும், தாம் மனமறிந்தபடி மகன் இறந்த ஆசௌசமுடைய மனையில் அமுது செய்வித்தலும் அப்பூதியார்பால் தகுதியாமோ? இவை, தாம் வழிபடு கடவுளாகக்கொண்ட பெரியவரை வஞ்சித்த செயல்களாகாவோ? என்றின்ன பலவாறும் இங்கு ஆராய்வாருமுண்டு. அன்று அப்பூதியாரிருந்த சிவனடிமைத் திறத்தின் உறைப்பு நிலையினை உணர்ந்தால் இக்கேள்விகள் நிகழா; சிறந்த அடியவரை அமுது செய்வித்தல் சிவனை அமுதூட்டுதலாம். அது உயிர்க் குறுதி செய்யும் சிறந்த பதி புண்ணியச் செயல். ஆசௌசம் என்பது உடலைப் பற்றியது; மர்யா சம்பந்தமானது. "யாவையும் சூனியஞ் சத்தெதி ராதலின்" (போதம்); "முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போல்" (சித்தி 7-1); "சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது" என்ற இலக்கணத்தின்படி பதிபுண்ணியத் தன்மையே நிறைந்த உள்ளத்தினிடையே தாழ்ந்த பாசத் தன்மைபற்றிய நிகழ்ச்சிகள் எழா என்க; அஃதொக்கும்; ஆயின் அப்பூதியார் இதனை அரசுகள் அறியாது மறைத்த தென்னை? எனின், அப்பூதியார் உலகிறந்த ஞானநிலை பெற்ற மறையவர். "ஞானத் திருமறையோர்" (1469); ஆயினும் தாம் உலகிறந்த நிலையினைப் பெற்றவர் என்பதனைத் தாம் உணர்ந்தாரில்லை; அதுவே அவரது மேம்பாடு; அதனை அரசுகள் திருவருள் காட்ட உணர்ந்தனர். தம்பெருமை உணராமையும், அரசுகள் உணர்வார் என்பதனை உணராமையுமே மறைத்ததனுக்குக் காரணம் என்க. "அறிவரும் பெருமை யன்பர்" (1819) என்று, பின்னர் இதனை உணர்ந்து போற்றியமையும் காண்க. உலக நிலையில் தாமதகுணம் பற்றி வரும் வஞ்சனை, ஏமாற்றம் முதலிய தாழ்ந்த மனவெழுச்சிகளுக் கெல்லாம் இப்புண்ணிய சரித்திரங்களுள் இடமேயில்லை என்றொழிக. இங்கு உலகர் தத்தம் தாழ்ந்த நிலையினையே பற்றுக்கோடாகக் கொண்டு செய்யும் ஆராய்ச்சிகளால் அபசாரமே விளையுமன்றி உண்மை விளங்காது. இவற்றின் இயல்பெல்லாம் அனுபவமுடைய தேசிகர்கள் பால் அடங்கிக் கேட்டறிந்துகொள்ளற்பாலன. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

**வாய்மை தேர்வுற உரைக்க வேண்டும்** - முன்னர் உரைத்ததும் வாய்மையே; இப்போது உரைப்பது அதனை விளங்க உரைத்தலேயாம்.

**சிந்தை நொந்து** - இதனால் மாதவர் அமுது செய்யும் பேறு பிழைக்க நேருமோ என்று மன வருத்தம் கொண்டு.

**பரிவு** - துன்பம். துன்பமாவது மேற்சொன்ன காரணத்தால் விளைந்தது.

**வணங்கி** - முன் விளங்க உரையாமையால் நேர்ந்த அபராதத்தைப் பொறுத்தருளும்படி வணங்கி.

**அன்றே** - அப்போதே. "மெய் விரித்துரையும்" என்று வினவிய பொழுதே.

**விதிர்ப்புற்று** - அஞ்சி (1815) - சிந்தை நொந்து - பரிவொடு வணங்கி என்ற இவை யெல்லாம் அரசுகள் அமுது செய்வதற்கு நேரநின்ற இடையூறு பற்றி வந்தன. 34

1817. (வி - ரை) **நாவினுக்கரசர் கேளா** - இங்கு இப்பெயராற் கூறியது "நன்று நீர் புரிந்த......செய்தார்" என்று கூறிய அருளிப்பாடாகிய மொழியும், இனிப் புதல்வன் விடம் நீங்கப் பாடியருளும் மந்திர மொழியும் வல்ல தன்மை குறிப்பதற்கு.

**நன்று நீர் புரிந்த வண்ணம் !** - அதிசயத்தின் வந்த புகழ்ச்சிக் குறிப்பு மொழி.

**யாவர் இத்தன்மை செய்தார் ?** - வினா ஒருவருமிலர் என்பது குறித்தது.

அப்பூதியார் இவ்வாறு செய்யாது முன்னரே பிள்ளையை அரசுகளிடம் காட்டிக், கூறி, வேண்டியிருந்தாராயினும் இப்பயன் பெற்றிருக்கலாமே? என்னின் ! அற்றன்று: பிள்ளை உயிர் நீத்ததனை மறந்தும், மறைத்தும் அன்பினால் அமுது செய்விக்கச் சூழ்ந்தமையே அவரது உலகிறந்த பெருமை; செயற்கரிய செயல்; அவ்வாறில்லையாயின் உலகரோடொப்ப நிகழும் பெருமையே யமைவதாம். இறத்தலும் பிறத்தலும் உலகியல்பே யாதலின் பிள்ளையை உயிர்ப்பிக்க அரசுகள் முற்பட்டிராது நின்றிடலும் கூடும். இவை பற்றி "அன்றவர்கண் மறைத்ததனாக் களவிறந்த கருணையராய்" (1473) என்ற விடத் துரைத்தவையும் பார்க்க. அடியார்கள், சிவநேசரது திறஞ் சொலக் கேட்டனர் ஆளுடையபிள்ளையார்; **சிவநேசர்** தம் மகளை மீள உயிர்ப்பிக்கும்படி பிள்ளையார்பால் **வேண்டினாரிலர்**; ஆயின் முன்னிகழ்ந்தது திருவுளத்தமைத்தும், பிள்ளையார், சிவநேசர் தஞ் செயல் வாய்ப்பவும், புறத்துறை யழியவும், வைத்த அப்பெருங் கருணை நோக்கான் மகிழ்ந்தருளிக் கபாலீசரை வழிபட்டுத், தாமாகவே, என்பு நிறைந்த குடத்தினைக் கொணரச் செய்து பாடியருளிப் பூம்பாவையை உற்பவிப்பித்தருளினர். திருப்புக்கொளியூரினும் மகனை இழந்தமை நினைந்து வருந்திய அந்தணரும் மனைவியும் ஆளுடைய நம்பிகளிடம் தம் மகனை மீளத் தருவிக்கும்படி **வேண்டினாரிலர்**; நம்பிகள் வரக்கண்டதும் தமது சித்தசோகத்தினை **முற்றும் மறந்து நம்பிகளை வணங்கினர்**. இந்நிகழ்ச்சிகளின் உள்ளுறைகளும் இங்கு வைத்துக் கருதத்தக்கன.

**என்று** - என்று கூறி - என்று கொண்டு.

**முன் எழுந்து சென்றே** - பிள்ளையைக் கோயிலின் முன்கொணர்வித்துத் திருமனையினின்றும் அங்கு எழுந்து சென்று. 1473-ம் ஆண்டுரைத்தவையும் பார்க்க. முன் உரைத்தமையால் ஈண்டு விரிக்கப்படவில்லை.

**ஆவி தீர் சவம்**-சவம் என்றலே அமையுமாயினும் ஆவி தீர் என்று விசேடித்தது ஆவி தீர்ந்தும் தீர்ந்திலதாய் அந்த ஆவி மீண்டும் அவ்வுடலிற்போதும் குறிப்புப்பற்றி. **பிரிவுறும் ஆவி** - என மேலும் (1819) கூறுவது மிக்கருத்து. இக்குறிப்புப்பற்றி இங்குப் பிள்ளை ஆவி பிரிந்து விடவில்லை என்றும், ஆவிபிரிந்தாற் போன்ற மயக்க நிலையேயடைந்திருந்தனன் என்றும், ஆராய்ச்சி செய்வாருமுண்டு. **சவம்** - உயிர்

நீங்கிய உடலின் பெயராதல் கருதுக. "பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு" (திருமூலர்); "தம் புதல்வன் சவ மறைத்து" (1472); வாகீசரின் ஞானப் பாடலுக்கு உயிரை மீளத்தருதல் ஒரு பெருங் காரியமன்று என்க.

அண்ணலார் அருளும் வண்ணம் - தற்போதமென்பது சிறிதுமின்றிச் சிவனருள் வழி நின்றே செயல் புரிவதும், தஞ்செயல் எல்லாம் அவன் செயலேயாக நிகழ்வதும் எந்தம் பெருமக்களியல்பு.

பா - இசை - பதிகம் - பாட்டுத் தோறும், அடிதோறும், சீர்தோறும், அசை தோறும் பாவும் இசையினையுடைய பதிகம். பாவுதல் - பரவிநிற்றல். இசைப்பா என்று கூட்டி, அடியடிதோறும் ஒன்று முதலாகப் பத்தீறாகச் சிவபெருமானிசைகளைப் போற்றும் பதிகம் என்று இப்பதிகச் சிறப்பியல்பு குறித்ததாகக் கூறுவதுமாம்.

பணி விடம் - பாம்பின் விடம். பணி - பாம்பு. சிவனடியார்களது ஏவலின் வழிப் பணிந்து நிற்கும் விடம் என்றதும் குறிப்பு.

பாற்றுவித்தார் - பாற்றுதல் - போக்குதல்; பிறவினையாற் கூறியது திருவருட் செயலால் நிகழ்ந்தது என்று குறிக்க.

மொழிந்த—செய்வார்—என்பனவும் பாடங்கள். 35

1818. (வி - ரை) முன்பாட்டும் இத்திருப்பாட்டும் பொருட்டொடர்புபற்றி ஒரே எதுகையின் அமைந்தன.

உய்ந்த - சேய் - என்று கூட்டுக. 1816-ல் அப்பூதியார் செய்கை கூறப் பட்டது; 1817-ல் அரசுகளின் அருட்செய்கை கூறப்பட்டது; இப்பாட்டிற் சேயின் செய்கை கூறுவதனால், அவர்கள் செய்ததற்கேற்பச் சேயும் - வணங்க என்று உம்மை இறந்தது தழுவியது.

மேவிய...எழுவானைப் போன்று - 1473-ன் கீழ் உரைத்தவை பார்க்க. இறத்தல் உறக்கம் போன்றதென்பதும், பிறப்பு விழித்தெழுதல் போன்றதென்பதும் நீதி நூல் மட்டுமின்றி ஞான நூல்களும் கூறும் உண்மைகள். சிவன் இயற்றும் ஐந் தொழில்களுள் அழித்தல் மறைத்தல் என்ற இவை இளைப்பாற்றலும், கன்ம ஒப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலுமாகிய பயன்செய்வன என்பது ஞானநூல் முடிபு. உடல் நூலாரும் உறக்கத்தின் பயன் இளைப்பாறுதலே என்பர். மேவிய - தன் முயற்சியாலன்றி வந்து பொருந்திய. உறக்கத்தினின் றெழுதல் என்ற உவமம், உவமான உவமேய மிரண்டினும் முன் குறித்த பயனேயன்றிச் செய்கை நிகழுமாறும் குறித்தது; வினையும் பயனும் பற்றி வந்த உவமம்.

ஆட்கொண்ட திருநாவுக்கரசர் - ஆளுடைய அரசுகள் பொது நீக்கித் தமக்கே ஆளாக அடிமை கொண்டருளியமையால், "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்" (போதம்-10) என்றபடி அவருளும் வண்ணம் பாடியவாறே அருளினர் என்பது. 1795-1796 திருப்பாட்டுக்களில் எடுத்துக் காட்டியபடி சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்றவர் என்ற நினைவில் ஊறி நின்ற புதல்வன் எழுந்தவுடன் அங்கினை வோடும் வணங்கினான்.

செய்ய - செம்மையுடைய; பூ - பூப்போன்ற.

கண்டு புனித நீறு அளித்தார் - கண்டு-"காட்டும் பூதி சாத்த" (1814) என்று அப்பூதியார்பாற் கேட்டருளியபடி, இப்போது சிவனருளால் வந்து காட்டக் கண்டு என்க. புனித நீறு - உயிரின் மாசறுத்துத் தூய்மை செய்வது.

அன்றே - இறந்தான் என்று பாயினுட்பொதிந்து மறைத்த அன்றே. 36

1819. பிரிவுறு மாவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் ; நின்றவப் பயந்தார் " தாங்கள்
அறிவரும் பெருமை யன்ப ரமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தா னிவ"னென்று சிந்தை நோந்தார் ; ௩௭

(இ - ள்) பிரிவு உறும்...வாழ்ந்தார் - பிரிந்த உயிரை மீளப்பெற்ற பிள்ளையைக் காண்பார்கள் எல்லாம் தெய்வத்திருத்தொண்டினது செந்நெறிச் சிறப்பினைப் போற்றி வாழ்வடைந்தனர் ; நின்ற...நொந்தார் - அங்கு நின்ற, அப்பெற்றோர்கள் "தாங்கள் அறிதற்கரிய பெருமையுடைய அன்பர் திருவமுது செய்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான்" என்று மனம் நொந்தார்கள் ௩௭

(வி - ரை) பிள்ளையைக் காண்பார் - தொண்டின் நெறியினைப் போற்றி வாழ்ந்தார் ; பயந்தார் - சிந்தை நோந்தார் - பிரியும் உயிரை மீளப் பெற்ற மகனை அந்நிலையிற் காண்பாராகிய பிற அடியார்களும் பெற்றோரும் என்றிருதிறத்தினருடைய மனங்கள் ஒரு தன்மையான நிலையமையாது வெவ்வேறு நிலைகளை அடைந்தன ; பிள்ளை உயிர்பெற்றெழுந்தது கண்டு மகிழ வேண்டிய பெற்றோர் அதற்கு மாறாக, வருந்தினர் ; இவ் விருவேறு நிலைகளும் இப்பாட்டால் உணர்த்தப்பட்டன.

காண்பார் - கண்டார் என்னாது காண்பார் என்று எதிர்கால வினைப்பெயரால் கூறியதென்னையெனின் ? காணுந் தொழில் முற்றுமுன் தொண்டினெறி போற்றுந் தொழில் முற்றிய விரைவு குறித்தற்கும், அங்கு அன்று கண்ணுற் காண்பாரேயன்றி இனிக் கருத்திற்காண்பாரும் இவ்வாறே வாழ்ந்தாராவர் என்று குறித்தற்கு மென்க.

தொண்டின் நெறி - திருத் தொண்டின் நிலையும் அதற்குச் சிவன் அருளும் முறையும். 606 பார்க்க.

போற்றி வாழ்ந்தார்-போற்றுதலால் வாழ்வடைந்தனர். வாழ்வாவது சிவனருள் பெறுதல். காண்பார் - வாழ்ந்தார் - இறந்தகாலம் உறுதியும் விரைவும் குறித்தது.

பயந்தார் - (பிள்ளையைப்) பெற்றோர்கள். பயனை அடைந்தவர்கள் என்ற குறிப்பும் காண்க. பிள்ளையினால் அடியவர் அமுது செய்தற்குத் தாம் மறைத்தும் மறைக்கலாகாது நேர்ந்த இடையூறு கருதிப் பயமடைந்து நின்றவர்கள் என்ற குறிப்பும் தருவதாம்.

தாங்கள் அறிவரும் பெருமை அன்பர் - தாம் மறைத்தாலும் அறிந்துகொள்ளவும் இடையூறு நீக்கவும் அருளாற்றற் பெருமை படைத்தவர் அரசுகளாவார் என்றுணராதிருந்ததனை எண்ணினர்.

சிறிது இடையூறு - காலந்தாழ்க்கக் காரணமாயிருந்ததனை இடையூறு என்றார். செய்தான் இவன் - இடையூறாக அப்புதல்வன் ஒன்றுஞ் செய்தானலன் ; அதுவன்றிக் காலந்தாழ்க்கலாகாதென்று உட்கொண்டு விடவேகம் பரவுமுன் ஓடி வந்து (1807) பரிகலக்குருத்தையும் சேர்ப்பித்தனன் ; அதுவேயுமன்றி, அருந்தவர் அமுது செய்யத் தாழ்க்க இதனை யார்க்கும் அறையேன் என்று திருந்திய மனத்துடன் வந்து அவ்வாறே அமைந்தனன் ; இவ்வாறாகவும், இவன் இடையூறு செய்தான் என்றது அவன் வழியாக நிகழ்ந்ததனை அவனால் நிகழ்ந்ததாக அப்பெற்றோர் அன்பு மேலீட்டினால் உபசரித்துக் கொண்டு வருந்தினபடி. உலகில் ஒரு குழந்தை பிறந்த போது தாய் தந்தையோ அன்றி நெருங்கிய உறவினரோ இறந்துபட நேர்ந்தால் அவரிழக்கும்படி அக்குழந்தை ஒன்றுஞ் செய்யாதிருப்பவும், இவன் தாயைத் தொலைத்தவன், பிறக்கும் போதே தகப்பனைத் தொலைத்தவன் என்றிவ்வாறு கூறுவதும் அக்கருத்தோடு பின்னாளினும் அவனைக் காண்பதும் உலக வழக்கில் நிகழ்வது. இது அவ்விறந்

தார்பால் வைத்த அன்பினல் ஆவது போல, இங்கு அருந்தவரை அமுதூட்டுதலில் வைத்த தீவிரதர அன்பினுல் இவ்வாறு கூறியதும், அவன் உயிர் பெற்றமை பற்றி மகிழாது சிந்தை நொந்தமையும் நிகழ்வனவாயின என்க.

சிந்தை நொந்தார் - இது உலகியல்புக்கு நேர்மாருயது. இதனை அன்பு நிலை இவ்வாறு கைவந்தாரே உணரத்தக்கார். ''உலகியற் பகையார்''(405-410) என்றவிடத்தின் வரும் நிலைகளும், பிறவும் கருதுக. இவ்வாறு ஈண்டு ''நொந்தமை''யும், முன்னர் ''மறைத்தமை''யுமே பிறராற் செயற்கருஞ் செயல்களாய் அப்பூதியார் - மனைவியார் இவர்களது பெருமைகளாயின. இங்குச் ''சிந்தை நோவாமே'' மகிழ்ந்திருப்பாராயின் முன்னர் மறைத்தமை முதலியவை எல்லாம் பொருளற்ற அன்பாய்த் தாழ்ந்த உலக நிலையினையே தரும். நொந்தமை இச் சரிதத்துக்கு உறையாணி என்க. அவர்தம் வாட்டத்தை அறிந்தே அரசுகளும் அவர்கள் மீள அழையாமலே திருக்கோயிலினின்றும் விரைவில் மனையிலெய்தி அமுதுசெய்தருளும் பாங்கினிலமர்ந்தருளினர் (1820). 37

1820. ஆங்கவர் வாட்டந் தன்னை யறிந்துசொல் லரசர் கூட
வோங்கிய மனையி லெய்தி யமுதுசெய் தருள வுற்ற
பாங்கினி லிருப்ப, முந்நூல் பயின்மணி மார்பர் தாமுந்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச் சார்வார், ௩அ

1821. புகழ்ந்தகோ மயத்தி னீராற் பூமியைப் பொலிய நீவித்,
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச், சிறப்புடைத் தீப மேற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரான்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய் வலம்பெற மரபின் வைத்தார், ௩௯

182. திருந்திய வாச நன்னீ ரளித்திடத், திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைக ளுடனே நோக்கி,
''யருந்துதல் வர்களு நீரு மமுதுசெய் வீரிங்'' கென்ன,
விரும்பிய வுள்ளத் தோடு மேலவ ரேவல் செய்வார், ௪0

1823. மைந்தரு மறையோர் தாமு மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனு ரடியா ரோடும்
அந்தமி லாளி யாரங் கமுதுசெய் தருளி னாரே. ௪௧

1820. (இ - ள்) அங்கு...அறிந்து - அப்படி அவர்களது மனவாட்டத்தினை அறிந்து, (அதனால்); சொல்லரசர்......இருப்ப - திருநாவுக்கரசர் அவர்களுடனே கூட அவர்களது ஓங்கிய மனையின் கண்ணே சேர்ந்து, அமுது செய்தருளப் பொருந்திய பாங்கினில் இருக்க; முந்நூல்......சார்வார் - முப்புரிநூல் அணிந்த மார்பினையுடைய அப்பூதியாரும் மேற்கொண்ட பெருமகிழ்ச்சியோடு, அதற்குச் செய்யத் தக்கவற்றை யெல்லாம் அமைத்துச் சார்வாராகி, ௩அ

1821. (இ - ள்) புகழ்ந்த......நீவி - புகழப்பட்ட கோமயங் கலந்த நீரினாலே நிலத்தை விளங்க மெழுகி; திகழ்ந்தவான் சுதையும் போக்கி - விளங்கும் வெள்ளிய சுண்ணச் சாந்தையும் கோலம்பெற இட்டு; சிறப்புடைத் தீபம் ஏற்றி - சிறப்பாகிய திரு விளக்கினையும் ஏற்றி; நிகழ்ந்த......வைத்தார் - சரித நிகழ்விற்குக் கருவியாக இருந்த அந்த வாழையின் நீண்ட குருத்தை விரித்து அதை நீரினாலே மகிழ்ச்சியுடனே விளக்கி, அரிந்த பக்கம் வலத்தில் இருக்கும்படி அதை முறைமையாக இட்டனராகி, ௩௯

1822. (இ - ள்) திருந்திய......அளித்திட - திருத்தமாகிய மணமுடைய நல்ல நீரைக் கொடுக்க; திருக்கை......என்ன - திருக்கரத்தைக் கழுவும் பெருந் தவராகிய திருநாவுக்கரசு நாயனர், அப்பூதியடிகளாரைப் பிள்ளைகளுடனே நோக்கி, "அருமையாகிய புதல்வர்களும் நீரும் இங்கு மருங்கிருந்து அமுது செய்வீராக" என்று சொல்ல, விரும்பிய...செய்வார் - விருப்பமுடைய உள்ளத்துடனே மேலவ ராகிய அவர் ஏவியபடி செய்வாராய், ௬௦

1823. (இ - ள்) மைந்தரும்......செய்ய - மைந்தர்களும் மறையவராகிய; அப்பூதியாரும் பக்கத்திலிருந்து அமுது செய்ய; சிந்தைமிக்கு......நல்க - மனமிக மகிழ்ச்சியுடன் மனைவியார் திருவமுது எடுத்துப்படைக்க; கொந்து அவிழ்...அருளி னர் - கொத்தாய் மலர்கின்ற கொன்றைமலரை அணிந்த சடையினையுடைய அருட் பெருங் கூத்தனாராகிய சிவபிரானது அடியார்களோடும் அழகிய தமிழ்ச் சிங்கம் போன்ற திருநாவுக்கரசு நாயனர் அங்குத் திருவமுது செய்தருளினர். ௬௧

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

1820. (வி - ரை) ஆங்கு - அவ்வாறாக. முன் பாட்டிற் கூறிய அக்கருத்தால் விளைந்த.

வாட்டந் தன்னை அறிந்து - மகிழாது சிந்தை கொந்தாராதலின், அந்த அகத்தின் குறி முகத்தில் தோன்றவே, அதனாலும் பிறவாற்றாலும் வாட்டம் அறியக் கிடந்தது. முன் "இப்போது இங்கவ னுதவான்" என்ற உரையினைக் கேட்டவுடன் திருவரு ளால் நிகழ்ச்சிகளை அறிந்த அரசுகள், இங்கு, அவர்களது வாட்டத்தினையும் அதன் காரணத்தையும் அறிதல் அரிதன்று.

கூட - அப்பூதியார் - மனைவியார் - புதல்வர் - முதலிய சுற்றமும், தொண்டர் களும் ஆகிய இவர்களுடன் கூட.

ஓங்கிய மனை - இந்நிகழ்ச்சி காரணமாகக் குருவருளால் முன்னையினும் பெருமை விளங்கிய திருமனை. "அந்தமின் மனை" (458) என்றதும் ஆண்டுரைத் தவையும் பார்க்க.

அமுது செய்தருள உற்ற பாங்கினில் இருப்ப - "அமுது செய்தெங் குடிமுழு துய்யக் கொள்வீர்" (1812) என்று முன்னர் அப்பூதியார் விண்ணப்பிக்க எழுந்து போந்து அமுது செய்ய வேறோர் ஆசனத்தேறியருளிய அரசுகள், அவ்விண் ணப்பத்தின் தொடர்பாய் மேலும் வேண்டுதல் இல்லாது தாமே சென்று அமுது செய்யும் பாங்கினி லமர்ந்தருளினர். பாங்கு - பண்பு.

ததுவன - பெரியவரை அமுது செய்வித்தற்குச் செய்யத்தக்க செயல்களுக் குரிய பண்டங்களும் பிறவும்.

சமைத்தல் - ஈண்டுக் கொணர்ந்து முறைப்பட அமைத்தல் என்ற பொருளில் வந்தது.

சார்வார் - அரசுகளைச் சிவனாகச் சார்வாராகி என்றதும் குறிப்பு.

அரசர் - இருப்ப - மார்பர் தாமும் - சார்பவராகி (1820), நீவி - போக்கி - ஏற்றி - விரித்து - விளக்கி - மரபின் வைத்தாராய் (1821); அளித்திடப் - பெருந்த வர் - நோக்கி - என்ன - ஏவல் செய்வாராய் (1822); அமுது செய்ய - நல்க - அடியா ரோடும் - தமிழாளியார் - அமுது செய்தருளினர் (1823) என்று இந்நான்கு பாட்டுக் களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க. வைத்தார் (1821) என்றதனை வினைமுற் றாக வைத்து முடிபு கொள்ளினும் இழுக்கில்லை.

ததுவன அமைத்து—என்பதும் பாடம். 38

1821. (வி - ரை) புகழ்ந்த - வேதங்களாலும் நூல்களாலும் புகழப்பட்ட; புகழ்ச்சிக் கமைந்த தன்மைகளாவன: திருநீறு தரும் மூலமாயிருத்தலும், திருக் கோயிலினை விளக்கும் திருமெழுக்காதலும், ஆனைந்தின் ஒன்றாயிருத்தலும்; பிறவுமாம். "விருத்தர் சாத்து நீறுதரு மூல மவதாரஞ் செய்யும் மூர்த்தம்" (1226); "புத் தேளிர் கோமானின் றிருக்கோயி றூகேன் மெழூகேன்" (திருவா), "அலகிட்டு மெழுக்கு மிட்டு" (தேவா).

கோமயத்தின் நீர் - கோமயம் கலந்த நீர். கோமயம் - பசுச் சாணம். "ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டிலர்".

பூமியைப் பொலிய நீவி - பூமி - திருவமுது செய்யும் இடம்; நீவுதல் - துடைத்து மெழுகுதல். இது ஐவகைச் சுத்தியுள் "தான சுத்தி" என்றதன்பாற் படும். சிவபூசையின் அங்கத்தினைப் போன்று மாகேசுர பூசையினும் இன்றியமையாது செய்யத் தகுவது.

திகழ்ந்தவான் சுதையும் போக்கி - வெள்ளிய சுண்ணச் சாந்தினால் நேர் கோல மிட்டு. சுதை போக்குதல் - கோல மிடுதல். கரைத்த மாவினாற் கோலமிடுதல் என்றலுமாம்.

சிறப்புடைத் தீபம் ஏற்றி - ஒளி தரும் அவசியத்துக்காக அன்றிச் சிறப்புக்காக விதிக்கப்பட்ட தீபம். தீபம் - தம்பமாக நிற்பதும், பூசையில் ஏந்துவதுமாம். "விதி முறை தீப மேந்தி" (851). சிவபூசையிற் போலத் தூப தீபங்கள் மாகேசுவர பூசைக் கும் உரியன. சிறப்புடை - சிறப்பு - விசேட பூசை. "சிறப்பொடு பூசனை" (குறள்). நைமித்திகம் என்பது ஆகமம். "பங்குனியுத் திரமாந் திருநா ளுயர் சிறப்பு" (நமிநந்தியார் புரா - 20) - சிறப்புடை - சிறப்புக்கு உரிய. அரசுகளது பூசைக்குதவும் பேற்றினால் எனைத் தீபங்களினும் சிறந்த என்றலுமாம்.

நிகழ்ந்த அக்கதலி நீண்ட குருத்து - நிகழ்ந்த - முன் சரித விளைவு நிகழ்ந்த; அ - முன்னறி சுட்டு; நீண்ட குருத்து - பொற்குருத்து (1805); "குருநாளக் குருத்து" (1469); விரித்து - விரியும் பருவத்தி லிருந்ததாயினும் முற்றும் விரியாத குருத்தாதலின் விரித்தல் வேண்டப்படுவது.

நீரால் - விளக்குதல் - பரிகலக் குருத்தினைக் கழுவியிடுதல் சைவ மரபு விதி. தூய்மை செய்தலும், இங்கு நிகழ்ந்தது போல அரவு முதலிய விடப் பிராணிகளின் தொடக்கு நீக்குதலும் கருத்து.

ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார் - இலை அரிந்த பக்கம் உண்பவருக்கு வலப்புறமாக இருக்கும்படி இலை வைக்கப்பட வேண்டுமென்பது சைவ மரபு விதி.

பூமியைக் கோமய நீரால் நீவுதல், சுதை போக்குதல், தீபம் ஏற்றுதல், பரிகலம் திருத்துதல், பரிகலம் இடுதல், கை நீவ நன்னீரளித்தல் முதலிய இவை எல்லாம் சைவ மரபில் மாகேசுரபூசைக்குரிய இன்றியமையாத அங்கங்கள் என்பதை விளக்கி வற்புறுத்தும் பொருட்டு இங்கு அப்பூதியார் செயலின் வைத்து, ஆசிரியர் விரித்துக் காட்டினர். மாகேசுர பூசை செய்யும் அன்பர்கள் தெளிந்து பின்பற்ற வேண்டுதலும் கருத்து. இவற்றை முன்னர் அரசுகள் புராணத்துள் அவ்விடத்து விரிக்காமல் இங்கு விரித்தது அக்குறிப்பும் தருவது. உண்ணும் மரபும், அடியார்க்கு மாகேசுர பூசை செய்யும் மரபும் சைவ வுலகில் மறந்து ஒதுக்கப்படும் இந்நாளில் இவற்றை எடுத்துக் காட்டுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

வலம்பட—என்பதும் பாடம். 39

1822. (வி - ரை) திருந்திய......திருக்கை நீவும் - கை நீவும் - கை கழுவும்; உணவு கொள்ளும் முன்னர்க் கை கழுவுதல் வேண்டும் என்பது சமய வொழுக்க

நெறியே யன்றிப் புறத் தூய்மைக்குரிய ஒழுக்கமுமாம். இல்லாவிடில் விரல் நுனிகளி லும் கையிலும் பற்றிய தூய்மையற்ற பொருள்கள் உணவுடன் கலந்து விடத்தன்மை விளைத்து நோய்க்குக் காரணமாகும். இவ்வொழுக்கந்தானும் இந்நாளில் கைவிடப் பட்டு மாக்கள் விலங்குத் தன்மை யடைந்து வருதல் வருந்தத் தக்கது.

**திருந்திய வாச நல் நீர்**-அடை மொழிகள், கை நீவுதற்கும் உண்ணுதற்கும் உத வும் நீருக்கு அமைக்க வேண்டிய அமைதிகள் குறித்தன. **திருந்திய** - ஊற்று - கிணறு - ஆறு - குளம் முதலிய நீர்நிலைகளினின்று எடுக்கும் நீர், மண்ணிலும் காற்றி லும் படுதலாலும், ஏனைப் பிராணிகளின் தொடக்காலும், பிறவாற்றாலும் நுண்ணிய விடப் பொருள்களுடன் பொருந்தும். அதனை மணல் - துணி முதலியவற்றுட் செலுத்தி அசுத்தங்களைப் போக்குதலும், பின்னர் வெயிலில் வைத்தாற்றுதலும், இவ் வாறு பிறவும் செய்து திருத்தல் வேண்டுமென்பது நமது முந்தையோர் கண்ட முறை. வெயிலின் வைத்தலால் நீரில் கண்காணமல் உள்ள விடப்பூச்சிகள் ஒழிந்துபடும் என்பது உண்மை. இந்நாளில் நீரைக் காய்ச்சி ஆற வைத்தலும், மருந்துப் பண்டம் பல பெய்தலும், பிறவும் செய்தல் காண்க. இந்நாள் முறை முன்னாள் முறை போல நாட்டு நடப்புக்கேற்றவாறு எளிதின் அமையாது பொருட் செலவும் பயப்பதும் கண்டு கொள்க. **வாசம்** - நீரினுட் பெய்யும் விலாமிச்சை முதலிய வாசனை வேர் களும் மலர்கள் பசுங்கற்பூரம் குங்குமப்பூ முதலியனவும் ஆம். இவை வெறும் மணத்துக்காக அன்றிக் குணத்துக்காகவும் உதவுவன. **நல் நீர்** - நீரின் நன்மையாவது தடிப்பில்லாது இலகுவான நீர் - உருசியுள்ள நீர் - சுத்த நிலத்தில் ஊறும் நீர் - மேனிலத்தும் பக்கங்களிலும் உள்ள அசுத்தங்களால் கெடாதவாறு அமைந்த நீர் என்றிவை முதலாயின. "வெயிலின்வைத் தாற்றிய தண்ணீர் நாற்றமிட் டிருப்ப" (திருவிடை - மும் - கோவை. 16).

**மறையோர் தம்மைப் பிள்ளைகளுடனே நோக்கி** - கருணை நோக்க மளித்து என்க. அனைவரையும் அருட்கண்ணாற் பார்த்துச் சிவனருள் பெருகச் சிவ தீக்கை செய்து மாகேசுரர்களாக்கி என்பதும் குறிப்பு. **நோக்குதல்** - அழுந்திய பார்வை.

**அரும் புதல்வர்களும் நீரும் இந்து அமுது செய்வீர்** - அருமையாவது பெற் றோர்க் கேற்குமாறு சிவனடிமைப் பண்பின் அமைந்த சிறப்பு; பேறலரும் - (1811). சிறப்பு நோக்கி **நீரும்** என்பதனைப் பின் வைத்தார். அருமை நோக்கி **புதல்வர்** முன் வைக்கப்பட்டனர் என்பதுமாம். வரும் பாட்டில் "**மைந்தரு மறையோர் தாமும்**" (1823) என்பதும் காண்க.

**இந்து** - இவ்விடத்து - எம்முடனே. இது அப்பூதியாருக் குரைத்தது.

**விரும்பிய உள்ளத்தோடு மேலவர் ஏவல் செய்வார்** - ஏவலினால் விருப்பும் நிகழ்ந் தது என்பதாம். அவ்வாறு அவர் ஏவியிராவிடின் அரசுகளுடன் அமர்ந்து திருவமுது செய்யும் தகுதி தமக்கில்லை என்றும், அவர் உண்டபின் குருவின் பரிகல சேடமாகப் பின் உண்பதே தகுதி என்றும் கொண்டது அப்பூதியார் திருவுள்ளம் என்பதை அரசு கள் அறிந்தருளி இவ்வாறு ஏவியருளினர் என்பது ஈண்டுக் கருதக் கிடப்பதாம். **மேலவர் ஏவல்** என்ற குறிப்புமது. மாகேசுவரர்கள் இயல்பு பற்றி 851-ல் (II பக் கம் - ௧0௯0) உரைத்தவை பார்க்க. **மேலவர்** - மேன்மையாவது திருத்தொண்டின் உறைப்பு. உத்தராபதியார் சிறுத்தொண்டரை உடனுண்ண ஏவியதும் காண்க. 40

1823. (வி - ரை) **மருங்கு** - தம்மருகு. தம்முடனே. **மருங்கிருந்து அமுது செய்ய** - உடனிருந்து அமுது செய்ய. இவ்விடத்து அந்தணர் வேளாளர் முதலிய சாதி குலங்களின் நிலை பற்றியும், உடனுண்ணல் முதலிய சமூக ஒழுக்க வழக்க நிலை பற்றி யும் பலவாறும் ஆராய்ச்சி செய்வார் பலர். இங்கு நிகழ்ந்தது சமய உயர்நிலை பற்றியது;

சாதிகுலம் சமூக ஒழுக்க வழக்கங்கள் வேறு; அவை ஒழுக்க உலக நிலைபெறக் கருதியனவாய் உடம்பைப் பற்றியன. முன்னையன உயிரினைப் பற்றியவை. அரசுகள் "புதல்வர்களும் நீரும் இங்கு அமுது செய்வீர்" என்று ஏவியதனாலே, அந்த ஏவல் செய்வாராய் மைந்தரும் அப்பூதியாரும் மருங்கிருந்து அமுது செய்தனர் என்றதனால், இது அந்நாளில் சமூக வழக்கன்று என்பது போதரும். சிவனன்பு பற்றிய உயிரின் உயர்ந்த சமய வொழுக்கந் தலைப்பட்டபோது ஏனைய உலக வொழுக்கங்கள் முனைக்க மாட்டா. ஈண்டு அவற்றுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அந்நினைவுகள் தானும் எழாது உலக முன்னைச் சார்புகள் மறக்கப்படும். அவ்வாறன்றி உலகச் சூழலில் முழுதும் உழன்றுபடும் ஏனையோர் இந்நிகழ்ச்சிகள் பற்றி உலக மக்கட் கூட்டங்களின் நிலைபேறுபற்றிய சமூக ஒழுக்கங்களை நீத்து விடுதல் செல்லாது. அரசுகளும் அப்பூதியாரும் உடனிருந்துண்டமை பற்றி வேளாளராவாரெவரும் வேதியராவாரெவரும் உடனுண்ணுதற்குரியார் என்று முடித்தல் சாதி வேற்றுமையை ஒழிக்க உதவாது உறுதிப்படுத்துவதற்கே துணை செய்வதாகும். நந்தனார் ஒருவர் அன்பு நிலைபற்றித் திரு அருளின்படியே தீயின் மஞ்சனஞ் செய்து இறைவர் திருமுன்பு நேரே சென்றருளினர் என்றதனால் அவர் குலத்தவராவார் எவரும் எத்திறத்தினரேனும் குல வொழுக்கங் கடந்து நேரே கோயிலினுள் திருமுன்பு புகுதற்குரியார் என்று கூறுவோரும் இவ்வாராய்ச்சியாளரும் ஒப்பர். இங்குச் "சிந்தை மிக்கு இல்ல மாதர் திருவமுதெடுத்து நல்க" என்று மேற் கூறுதலானும் இஃது அந்நாள் வழக்கின்மையும் சிவனன்பு மீக்கூர்தலால் உலகிறந்த நிலையின் நிகழ்ந்தது என்பதும் புலப்படும். "அடியாரோடும் அமுது செய்தருளினர்" என்றது மேலும் அதனை வற்புறுத்தும்.

**இல்ல மாதர் - திருவமுது எடுத்துச் - சிந்தைமிக்கு - நல்க** - என்க. இவ்வாறு சிவன் அன்பு மேம்பாடில்லாத உலக நிலையில் இவ்வாறு இல்ல மாதர் நல்குதல் நிகழ இயலாமையும் குறிப்பு. **இல்ல மாதர்** - மனைவியார்; இல்லத்திற்குரியவர்.

**அடியாரோடும்** - அரசுகள், அங்கு அப்பூதியாரும் மக்களும் என்ற இவர்களேயன்றி ஏனை அடியார்களுடனும் இருந்து மாகேசுவர பூசைகொண்டருளித் திருவமுது செய்தருளினர். குங்குலியக்கலய நாயனாரும் அடியார்களும் ஒருங்கு திருவமுது செய்யும்படி அவரது திரு மனைவியார் பூசித்தளித்தமை இங்கு நினைவு கூர்தற்பாலது (851). இந்த அடியார்கள் அரசுகளுடன் சென்றவர்களும் அங்குக் கோயிலின் முன் இந்நிகழ்ச்சி கண்டு போற்றி வாழ்ந்தார்களும், பிறருமாம் என்க. அடியார்களுடனன்றி அமுது செய்யலாகா வழக்குப்பற்றிச் சிறுத்தொண்ட நாயனார் புராணத்தினுள் உத்தராபதியார் கூறுதல் காண்க. (சிறுத் - புரா - 76).

மைந்தரும் மறையோரும் மருங்கிருந்து அமுது செய்யத் தமிழ் **ஆளியார்**, **அடியாரோடும்** அமுது செய்தருளினார் என்ற கருத்தும் முன் உரைத்த கருத்துக்களை வலியுறுத்துவதாம்.

**தமிழ் ஆளியார்** - திருநாவுக்கரசர்; ஆளி - சிங்கம்; அது ஏனையவற்றுக் கரசாயிருக்கும் தன்மையும், பெருந்தன்மையும் குறித்தது. தமிழின் சிறப்பே அருள் வெளிப்பாட்டுக்குக் கருவியானமை குறிப்பு. தமிழை ஆள்பவர் என்றலுமாம்.

**அமுது செய்து அருளினர்** - அருள் புரிந்தனர். அருள் புரிந்தது வரும் பாட்டிற் கூறுவார். 41

1824. மாதவ மறையோர் செல்வ மனையிடை யமுது செய்து
காதனண் பளித்துப் பன்னாள் கலந்துட னிருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து, நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார், சஉ

1825. அப்பூதி யடிக ளார்தம் மடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை விரும்பு "சொன் மாலே" வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோ ரெல்லேயி லன்பா லென்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம். சரு

1824. (இ - ள்) மாதவ மறையோர்......அமுது செய்து - மாதவஞ் செய்த மறையோராகிய அப்பூதியாரது செல்வம் பொருந்திய திருமனையில் இவ்வாறு திரு அமுது செய்தருளி; காதல் நண்பு அளித்து - காதல் பெருகிய நட்பின் திறத்தை அளித்தருளி; பன்னாள் கலந்து உடன் இருந்த பின்றை - பல நாள்கள் மனங்கலந்த வொருமையோடு உடனுகி இருந்த பின்னர்; மேதகு......செய்வார் - மேன்மையுடைய திருநாவுக்கரசர் விளக்கமுடைய திருப்பழனம் என்னும் மூதூரில் அமர்ந்தருளிய நாதருடைய திருவடிகளேச் சார்ந்து நல்ல தமிழ்ப்பதிகத்தை அருளிச் செய்வாராகி, சஉ

1825. (இ - ள்) அப்பூதி யடிகளார்தம்......சிறப்பித்து - அப்பூதியடிகளாருடைய திருத்தொண்டின் பெருமையினைச் சிறப்பித்து; ஆன்ற......வேய்ந்த - பெருமையுடைய திருமேனியில் திருநீற்றை அணிந்த சிவபெருமானை விரும்பும் "சொன்மாலே"யினைத் தொடுத்துச் சாத்திய; இப்பூதி பெற்ற நல்லோர் - இந்தப் பெருஞ் செல்வத்தைப் பெறும் பேறு பெற்ற நல்லோராகிய அவ் அப்பூதியார்; திருநாவுக்கரசர் பாதம் எல்லேயில் அன்பால் என்றும் செப்பு ஊதியம் கைக் கொண்டார் - திருநாவுக்கரசரது திருவடிகளே பொருள் என்று கொண்டு எல்லேயில்லாத அன்பினுலே எப்போதும் எந்நாளும் சொல்லித் துதிக்கின்றதாகிய இந்த ஊதியத்தினைக் கைவரப் பெற்றனர். சரு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1824. (வி - ரை) மாதவ மறையோர் - முன்னர்ப் பெருந்தவங்கள் செய்த தன் பயனுகக் குருவருள் பெறும் இப்பெரும்பேறு பெற்றனர் என்பது குறிப்பு.

செல்வமனே - செல்வம் - முத்தித்திரு; "செல்வன் கழலேத்தும் செல்வ" முடைய செல்வராய்த் "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர்"பெருமான் ருமே எழுந்தருளிக் கருணேசெய்தற் கிடமாய் நிகழ்ந்த செல்வம்.

காதல் நண்பு அளித்து - காதலாய் விளேந்த நண்பு. ஈண்டுக் காதல் என்றது அரசுகளினிடத்து "அறியா முன்னே, காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா யிருந்த (1781) அப்பூதியாரது மனக் காதல் குறித்தது. அக்காதலின் பொருளாவார் தமது நட்பினை அளித்து. அளித்தல் - கருணேயுடன் தருதல்.

கலந்து உடனிருந்த - கலத்தல் - மன வொருமைப்பாடு பெற்றுச் சேர்தல் - மனங் கலந்து என்க. உடனிருத்தலாவது இருவரும் ஒரு தன்மை பெற நிகழ்தல்; "உடனுறைவின் பயன் பெற்ருர்" (1509) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

பாதம் சேர்ந்து - அத்தலத்தை அடைந்து நாதருடைய திருவடிகளேச் சார்ந்து - பணிந்து என்ற பொருளில் வந்தது.

பதிகம் செய்வார் - பதிகத்தை அருளிச் செய்வாராகி: முற்றெச்சம்.

செய்வார் - வேய்ந்த - என்று வரும் பாட்டுடன் கூட்டுக. நாவின் மன்னர் - பழனநாதர்தம் பாதம் சேர்ந்து - பதிகம் செய்வார் (1824), அப்பூதியார் - அடிமையைச் சிறப்பித்துப் - பூதியணிந்தார் தம்மைச் - "சொன் மாலே" வேய்ந்த (தாகிய) - இப்பூதி (1825) என்று கூட்டி வினே முடிபு கொள்க.

செய்தார் - என்ற பாடம் பிழை. 42

1825. (வி - ரை) அப்பூதி - அடிமையைச் சிறப்பித்துச் "சோன் மாலே" வேய்ந்த - சோன் மாலே - இத் தொடக்கமுடைய திருப்பதிக முதற் குறிப்பு. "சொன் மாலே" என்று தொடங்கும் பதிகம் என்க. முன்னரும் இக் கருத்தே பற்றித் "தீந்தமிழின் தொடை மாலேச் "சொன் மாலே" பாடினர்" (1476) என்றமை காண்க. சோன்மாலே - பதிகத் தொடக்கத்துக்கும் பதிகத்துக்கும் இரட்டுற மொழிந்து கொள்க.

சோன் மாலே வேய்ந்த - பதிகத்தைத் தொடுத்துச் சாத்திய. மாலே என்ற தற் கேற்ப வேய்ந்த என்ருர்.

வேய்ந்த இப்பூதி - வேய்ந்ததாகிய இப்பெருஞ் செல்வம்.

நல்லோர் - அப்பூதியடிகள்.

பூதி பெற்ற நல்லோர் - பாதம் செப்பும் ஊதியம் கைக் கொண்டார் என்க. பூதி பெற்ற - பெற்றமையால் என்று காரணப் பொருட்டாகக் கொள்ள நின்றது. அரசுகள் திருப்பதிகத்தினுள் அடிமையைச் சிறப்பிக்கும் அருட் பூதியாகிய ஆசி பெற்றதனுல் குருவருளே மறவாது சிந்திக்கும் ஊதியம் பெறலாயினர். "அவனரு ளாலே அவன்ருள் வணங்கி" என்ற நிலே குருவினுக்கும் ஒக்கும். ஊதியம் - பெருஞ் செல்வம் பெற்ற பயன். இப்பாட்டிற்குப் பிறர் எல்லாம் தத்தமக்கு வேண்டியவாறே யுரைத்தனர். செப்புதல் - போற்றுதல்; "ஏத்தி" (1826) என்பது காண்க.

கைக் கோள்ளுதல் - திண்ணமாக - உறுதியாகப் - பிடித்தல்; விடாது பற்றி ஒழுகுதல். பாதம் - கைக் கோண்டார் - என்ற நயமும் காண்க. 43

1826. இவ்வகை யரசி னுமை மேத்தி, "யெப் போருளு நாளும்
அவ்வருந் தவர்போற் ருளே" யெனவுணர்ந் தடைவார், செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத், திருத்தில்லே மன்று ளாடும்
நவ்வியங் கண்ணுள் பங்கர் நற்கழ னண்ணி னுரே. சச

(இ - ள்) இவ்வகை......ஏத்தி - இவ்வகையாகத் திருநாவுக்கரசரது திருநாமத் தையே துதித்துக் கொண்டு; எப்பொருளும்......அடைவார் - "அடைய வேண் டிய உறுதிப் பொருள் எல்லாம் எந்நாளும் அந்த அருந்தவரின் பொற்பாதங்களே யாம்" என்று உணர்ந்து அவற்றையே அடைவாராகி; செல்லும் செவ்விய நெறி அது ஆக - செல்கின்ற செம்மையாகிய வழி அதுவேயாகக் கொண்டு, திருத் தில்லே......நண்ணினுர் - திருத்தில்லே யம்பலத்தில் ஆடுகின்ற, மான் போன்ற அழகிய கண்களேயுடைய உமாதேவியாரது பாகத்தை யுடையவரது நல்ல பாதங் களே அடைந்தனர்.

(வி - ரை) அரசின் நாமம் இவ்வகை ஏத்தி என்க; இவ்வகை - எல்லேயில்... பாதம் என்று முன்பாட்டிற் கூறியபடி; முன்பாட்டில் பாதம் செப்பும் ஊதியம் கைக் கொண்டார் என்றதனே ஏத்தி என்று விளக்கம் செய்தார்.

எப்போருளும் - இறைவர் வழிபாடும், பாச நீக்கமும், சிவப்பேறுமாகிய வீடு பேறும் முதலிய எல்லா உறுதிப் பொருள்களும். நாளும் - எந்நாளும். இன்பிலும் துன்பிலும், வாழ்விலும் சாவிலும், முதலிய எக் காலத்தும்; விழிப்பு - உறக்கம் முத லிய எந் நிலேயிலும்.

தாளே எப்போருளும் - ஆவன - என்று ஆக்கச் சொல் வருவிக்க.

உணர்ந்து - உள்ளுணர்ச்சியிற் கை வரப் பெற்று. அடைவார் - தாளே புகலாக அடைவார். "அடைவால்" என வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

செல்லும் - நெறி - அது - ஆக - அதுவே நெறியாக - சாதனமாக - ஆருக. அரசுகளின் பாதமே எப்பொருளும் ஆவன என்று கடைப் பிடித்து அதுவே வழியாகச் சிவனடி சேரப் பெற்றனர். பற்றுகச் சார்ந்தது அரசுகள் பாதம்; அச்சார்வே வழியாகச் சேரப் பெற்றது சிவன் பாதம் என்க. வரும் பாட்டும் பார்க்க. 44

1827. மான்மறிக் கையர் பொற்றாள் வாகீச ரடைவாற் பெற்ற
மேன்மையப் பூதி யாராம் வேதியர் பாதம் போற்றிக்,
கான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல நக்கர் திருத்தொழி னவில லுற்றேன். சரு

(இ - ள்) மான் மறிக்கையர்...போற்றி - மான்மறியினைக் கையில் ஏந்திய சிவபெருமானுடைய பொற்பாதங்களைத் திருநாவுக்கரசரது அடைவினுலே பெற்ற மேன்மையுடைய அப்பூதியார் என்னும் வேதியர் பாதத்தைப் போற்றி செய்து (அத் துணையானே); கான் மலர்...நவிலலுற்றேன் - காடுபோலத் தாமரை மலர்களை யுடைய வாவிகள் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருச்சாத்தமங்கையில் அவதரித்த நான் மறை வல்ல திருநீலநக்கர் செய்த திருத் தொண்டினைச் சொல்லப் புகுகின்றேன்.

(வி - ரை) இப்பாட்டினுல் இதுவரை கூறி வந்த புராணத்தைச் சுருக்கி வடித்தெடுத்து முடித்துக் காட்டி, இனிக் கூறப்புகும் புராணத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றுர் ஆசிரியர்.

வாகீச ரடைவால் மறிக்கையர் பொற்றாள் பெற்ற மேன்மை என்க. இஃது இப்புராணத்தின் சாரம். வாகீசர் அடைவு - வாகீசரது சார்பு - வாகீசரையே பொருளென அடைந்த நெறி. வழி வாகீசர் அடைவும், அவ் வழியே சென்று சேர்ந்த இடம் - சிவன் பொற்றாளுமாம். "திருநாவுக்கரசெனுமோர், சொற்று னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம், பெற்று 'னேருநம்பி யப்பூதி' யென்னும் பெருந் தகையே" என்று இக் கருத்தையும் திருத்தொண்டத்தொகை யாட்சியையும் சேர்த்துப் பாடினர் பின் வந்த பெரியாராகிய சிவப்பிரகாசர்.

மலர்க்கமலக் கான் வாவி - என்க. மலர்களாகிய தாமரையைக் காடுபோல உடைய வாவி. இக் கருத்தைத் தொடர்ந்து மேல்வரும் புராணத்துள் முதற் பாட்டில் "பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகய லுகளுங், காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டு" (1828) என்பது காண்க. சோழ நாட்டிற் கமலங்கள் இலையும் பூவுமாகக் காடாகத் தலை தடுமாறிக் கிடக்கும் வாவிகளைக் கண்ணுறுவார்க்கு இதனுண்மை விளங்கும். "கடிகமழ் கமலக் காடு பூத்தது" என்ற கம்பன் பாட்டும் காண்க. இனி, கான் - மணம் என்று கொண்டு, மணம் பொருந்திய மலராகிய கமலம் என்றும், கால் - தாள் - என்று கொண்டு தாளில் மலர் கமலம் என்றும் உரைத்தலுமாம். வாவிச் சிறப்புப் பற்றி இப்பாட்டிலும், வாவிகளைச் சென்று சென்று ஊட்டும் ஊற்றுச் சிறப்புப்பற்றி வரும் பாட்டிலுமாக நீர்வளம் பற்றி எடுத்துக் கொண்டது "ஒலிபுனல்சூழ் சாத்த மங்கை" என்ற முதனூற் கருத்தை விரித்துக் காட்டியபடி.

நான் மறை - மரபு அறிவித்தபடி. நான் மறை நீல நக்கர் என்றும், நீல நக்கர் நான் மறைத் திருத்தொழில் என்றும் கூட்டி உரைக்க நின்று, அவரது திருத் தொண்டினையும், அவர் ஆளுடைய பிள்ளையாரது திருமணத்தில் மறை வேள்விச்

சடங்கெல்லாம் செய்து சேவித்து உடன் சிவன் திருவடி யடைந்த சரித வரலாற்றுக் குறிப்பும் தோற்றுவாய் முகப்பிற் காட்டி நின்றது. 45

---

சரிதச் சுருக்கம் :—சோழநாட்டில் திங்களூரில் வேதியர் குலத்தில் அவதரித்தவர் அப்பூதியார். அவர் சிவனுக்கன்பர்; நற்குணங்கள் நிறைந்தவர்; களவு பொய் கோபம் முதலாகிய குற்றங்களைக் காய்ந்தவர்; திருநாவுக்கரசரைக் கண்டறியா முன்னே அவர் பாதங்களில் மிக்க அன்பு கொண்டவர்; தமது திரு மனையில் அளவைகள், மக்கள், முதலிய எல்லாம் திருநாவுக்கரசர் பெயரிட்டழைப்பர்; தாம் அமைத்த தண்ணீர்ப்பந்தர், சாலை, குளம் முதலிய அறங்கள் பலவற்றையும் திருநாவுக்கரசர் பெயராலே அமைத்து இயற்றி இவ்வாறொழுகி வந்தனர்.

அந்நாளில், திருப்பழனத்தை வணங்கிப் பிறதலங்களையும் வணங்கும் பொருட்டுத் திருநாவுக்கரசர் திங்களூரின் பக்கத்தே வழிச் சென்றனர். அங்கு அளவில்லாத சனம் எப்போதும் செல்கின்ற பெருவழிக் கரையில் அருளுடையார் உள்ளம் போன்று குளம் நிறைந்த தடம்போற் குளிர்ந்து நிழலைத் தரும் தண்ணீர்ப் பந்தரை வந்தடைந்தனர்; "திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தர்" என்று சந்தம்பட அதனுள் எங்கும் வரைந்திருந்ததனைத் தாம் கண்டார். "இப்பந்தரை இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யாவர்?" என்று கேட்டனர். அங்கு அதனை அறிந்தவர்கள் "ஆண்டவரசெனும் பெயரால் அப்பூதியார் செய்தனர். இவ்வாறு எங்குமுள்ளன சோலை, குளம், கா" என்றார். "இதற்கு என்ன கருத்து என்றறிதல் வேண்டும்" என்று கொண்டு, அங்குள்ளாரை "அவர் எவ்விடத்தார்?" என்று கேட்க, அவர்கள் "அவர் இவ்விடத்தார்; இப்போது தான் மனையிற் சென்றனர்; அதுவும் நணித்து" என்னக் கேட்டு, அவரது திருமனைக் கடையிற் சென்று சேர்ந்தனர்.

ஓர் அடியவர் தமது முன்கடைத் தலையில் வந்தார் என்று கேட்டு மனைக்குளிருந்த அப்பூதியார் வந்து அரசுகளை வணங்கா முன் அரசுகள் அவரை வணங்க, "அருள்முன் பொழியும் வடிவுடையீர்! தேவரீர் என் மனையில் வந்தருள அடியேன் முன்னே முடிவில் தவஞ் செய்தேன்கொல்!" என்றனர் அப்பூதியார். அதற்குக் கோதில் மொழிக் கொற்றவனார் "யாம் திருப்பழனத்திற் சிவபெருமானைச் சேவித்து வருகின்றோம். வழிக் கரையில் நீர்வைத்த வளந்தரு தண்ணீர்ப் பந்தரைக் கண்டும், அவ்வாறே செய்கின்ற பிற அறங்களையும் கேட்டும் இங்கு அணைந்தோம்" என்று சொல்லி, "அத் தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் எழுதாதே வேறொரு பேர் முன் எழுத வேண்டிய காரணம் என்கொல்? கூறும்" என்று வினவினர். இதனைக் கேட்டவுடன் அப்பூதியார் சிந்தை நிலையழிந்தனர்; "நீர் நன்று கூறியருளவில்லை; அமணர்களும் அரசனும் கூடிச் செய்த சூழ்ச்சிகளைத் திருத்தொண்டின் உறைப்பினாலே வென்றவர் தம் திருப்பெயரோ வேறொரு பேர் என்று சொல்லத் தகுவது? நம்மையுடையவராகிய சிவபெருமானது திருவடிக்கீழ் அன்பினுடன் செய்யும் திருத்தொண்டினாலே இம்மையிலும் நாம் பிழைப்பது என்று என் போல்வார்களும் தெளியும்படி செம்மைபுரி திருநாவுக்கரசர் திருப்பெயரினை யான் எழுத, யான் கேட்கவே வெம்மை மொழி விளம்பினீர்; கடலைக் கல்லே மிதப்பாகப் போந்து கரையேறிய அவரது பெருமையினைச் சிவனது புவனத்தில் அறியாதார் யாவர் உளர்?; மங்கலமாம் திருவேடத்துடன் நின்றும் இவ்வகை மொழிந்தீர்! நீர் எங்குறைவீர்? நீர் தாம் யார்? இயம்புவீர்!" என்று கேட்டனர். அவரது பெருமையினை அறிந்து, திருநாவுக்கரசர், "பிற துறையினின்றும் ஏறும்படி அருள் பெருகு சூலையினால் சிவபெருமான் ஆட்கொள்ள,

வந்து அடைந்த, தெருளும் உணர்வில்லாத அந்தச் சிறுமையுடையவன் யான்!" என்றனர். இது கேட்டதும் அப்பூதியடிகளது கைகள் சிரமேற் குவிந்தன; கண்ணீரருவி பொழிந்தது; உரை குழறிற்று; உடம்பெல்லாம் மயிர்க்கூச் செறிந்தது; அவர் தரையில் வீழ்ந்து அரசுகளது சரண கமலம் பூண்டனர். அவரை அரசுகள் எடுத்தருளினர். அற்றவர்கள் அருநிதியம் பெற்றுர் போல அப்பூதியார் மனமுற்றும் களிப்படைந்து அவரது திரு முன்பு நின்று கூத்தாடினர்; சூழ ஓடினர்; பாடினர்; மூண்ட மகிழ்ச்சியினுல் முன் செய்யத் தக்கது இன்னதென்று அறியாதே திருமனையினுட் சென்று மனைவியார் - மக்கள் - சுற்றத்தார் முதலிய எல்லாருக்கும் அரசுகள் எழுந்தருளும் மகிழ்ச்சியை சொல்லினர்; எல்லாரையும் உடன்கொண்டு வந்து அரசுகளை இறைஞ்சுவித்து மிக்க காதலுடன் அவரை உள்ளே எழுந்தருளுவித்தனர்; அவரது பாதங்களை விளக்கி அத்தீர்த்தத்தினை மேல் தெளித்து உள்ளும் கொண்டனர் ஆசனத்தமர்த்தினர்; உரிய பூசனைகள் எல்லாம் விரும்பிச் செய்தனர்; திருவமுது செய்தருளும்படி அவரிடம் விண்ணப்பிக்க அவரும் இசைந்தருளினர்.

அவர் இசைந்ததனைச் சிவபெருமான் திருவருளாற் பெற்ற பெரும் பேறு என மிக மகிழ்ந்து அப்பூதியார், திருமனைவியாரும் தாமும் திருவமுது ஆக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர்; அறுவகைச் சுவையாலான தூய நற்கறிகளையும் திருவமுதையும் ஆக்கினர். அரசுகள் திருவமுது செய்தற்கு ஏற்ற பெரிய வாழைக்குருத்தைக் கொண்டு வரும்படி தமது மக்களுள்ளே மூத்த திருநாவுக்கரசை ஏவினுர். "நல்ல தாய் தந்தையர்கள் என்னை இக்காரியத்தில் ஏவப் பெற்றேன்" என்று மகிழ்ந்து கொண்டு, அவன், தோட்டத்தினுட் புகுந்து செழிப்புடையதொரு குருத்தை அரியும்போது ஒரு பாம்பு அவன் வருந்திச் சோர்வடையும்படி அங்கையிற் றீண்டிக் கையினிற் சுற்றிக் கொண்டது. அவன் அதனை உதறி வீழ்த்திவிட்டுப் பதைப்புடனே, "இத்தீய விடத்தின் வேகத்தால் நான் வீழா முன்னர், அரிந்த இக்குருத்தைச் சென்று கொடுப்பன்; பெரியவர் திருவமுது செய்யத் தாழ்க்கும்படி நான் இச் செய்தியை யார்க்கும் சொல்ல மாட்டேன்" என்று திருந்திய மனத்தினுடன் செழுமனையிற் சென்று புக்கான்: விடம் முறையே ஏறி ஏழாம் வேகம் தலைக்கேறிற்று; பல் - கண் - மேனி - கருகின; உரை குழறிற்று; ஆவி விடும் நிலை வந்ததும் அதனை விடாமற் கொண்டு குருத்தைத் தாயர் கையில் நீட்டி நிலத்தினில் வைத்தான்; கீழே வீழ்ந்தான். பெற்றோர்கள் உளம்பதைத்து உற்று நோக்கினர்; உதிரம் சோரும் வடுவும் மேனியின் குறிகளும் கண்டு விடத்தினுல் வீந்தான் என்று துணிந்தனர். அதனுற் சிந்தை சிறிதும் தளங்காதவர்களாகித் தொண்டர் அமுது செய்வதற் குரிய உபாயத்தை எண்ணினர். பெறலரும் புதல்வனைப் பாயினுட் பெய்து மூடினர். புறமனை முன்றிலில் ஒரு புடையில் மறைத்து வைத்தனர். "இது சிறிதும் தெரியா வண்ணம் அமுது செய்விப்போம்" என்று கொண்டு காலந் தாழ்க்காமல் அமுதும் கறிகளும் முதலியவை எல்லாம் அழகுற அணைய வைத்துத், தொண்டர் முன் வந்து பணிந்து "தேவரீர் திருவமுது செய்து எங்குடிமுழுதும் உய்யக்கொள்வீர்" என்று வேண்டினர். அரசுகள் எழுந்து அடியிணை விளக்கி வேறோர் ஆசனத்தேறிப் பரிகலம் திருத்தும் முன்பு இல்லுடை யிருவருக்கும் திருநீறு நல்கி, ஏனைப் புதல்வர்க்கும் அளிக்கும்போதில், "இவர்க்கு மூத்த பிள்ளையையும் நீறு சாத்த அழையுங்கள்" என்றனர். அது கேட்ட அப்பூதியார் விளைந்த தன்மை ஒன்றும் உரையாமல் "இப்போது இங்கு அவன் உதவான்" என்றனர்; அவ்வுரை கேட்டபோதே சிவபெருமான் திருவருளால் அரசுகளது செவ்விய திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் சேர்ந்தது; அது கருதி அவர் அப்பூதியாரை நோக்கி "இவ்வுரையினை என் உள்ளம் பொறுது; அவன் என்ன

செய்தனன்; இதற்கோன்றுண்டு; உண்மையை விரித்துரையும்" என்றார். அதற்கு அப்பூதியார் மெய்விதிர்த்து அஞ்சிப், பெரியவர் அமுது செய்யும் இப் பேறு பிழைக்க வருமே என்று விரித்துரையாராயினும், அப்பெரியோர் கேட்கும்போது உண்மையை விளங்க வுரைக்கவேண்டும் சீலத்தினாலே மனம் நொந்து மைந்தனுக்கு நேரிட்டதனை விரித்துரைத்தனர்.

அதைத் திருநாவுக்கரசர் கேட்டு "நீர் புரிந்தவண்ணம் நன்று; இத்தன்மை செய்தார் யாவர் உளர்?" என்றருளி, எழுந்து சென்று, அவ்வுடலைத் திருக்கோயிலின்முன் கொண்டுவரச் செய்து சிவபிரான் அருளும்படி அதனை நோக்கி, "ஒன்றுகொலாம்" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியருளினர். உறங்கி யெழுவானைப் போன்று பிள்ளை விடம் நீங்கி உயிர்பெற் றெழுந்து திருநாவுக்கரசர் திருவடிகளை வணங்கி நின்றனன்; அது கண்டு அவர் அவனுக்குப் புனித நீறு அளித்தனர். இப்பெரு நிகழ்ச்சியைக் காண்பார் எல்லாம் சிவபெருமான் றிருத்தொண்டி னெறியினைப் போற்றி வாழ்ந்தனர்; ஆனால் அப் பயந்தவர்களோ தெரிவரிய பெருமையுடைய அண்பர் திருவமுது செய்தற்கு இவன் சிறிது இடையூறு செய்தனன் என்று சிந்தை நொந்தனர்.

அவர்களது மனவாட்டத்தை அறிந்த அரசுகள் அவர்களுடனே ஓங்கிய திருமனையில் எய்தி அமுது செய்யும் பாங்கில் இருந்தனர். அதற்கு வேண்டிய எல்லாவற்றையும் அப்பூதியார் மகிழ்ந்து செய்தனர். நிலத்தைக் கோமயத்தால் மெழுகி வெண் சுண்ணக் கோலமிட்டனர். அதன்மேல் வாழையின் அக் குருத்தினை விரித்து நீரினாற் கழுவி ஈர்வாய் வலமுற மரபின் வைத்தனர்.

அரசுகளது ஏவலின்படியே அப்பூதியாரும் பிள்ளைகளும் அங்கு உடனே அமுது செய்ய இருந்தனர்; சிந்தை மகிழ்ந்து மனைவியார் திருவமுது எடுத்து நல்கினர்; அரசுகள் சிவனடியார்களுடனே திருவமுது செய்தருளி அப்பூதியார்க்குக் காதல் நட்பின் உரிமையளித்தனர். அவ்வாறு பன்னாள் கலந்து உடனிருந்தருளினர். பின்னர்த் திருப்பழனம் சேர்ந்து நாதரைப் பாடிய சொன்மாலைப் பதிகத்தில் அப்பூதியாரது அடிமைத் திறத்தைச் சிறப்பித்துப் பாடியருளினர். இப் பேறுபெற்ற அப்பூதியார் தாம் அடையும் உறுதிப்பொருள் யாவும் திருநாவுக்கரசரது பாதமேயாம் என்று கொண்டு அவற்றை அன்புடன் துதித்திருந்து சிவபெருமான் றிருவடி சேர்ந்தனர்.

கற்பனை :—1. காண்டலின்றியும், பெரியோர்களது குணங்களைக் கேட்டதும் அவர்களிடம் அன்புபூண்டு அவர்களை வழிபட் டொழுகுதல் சிறந்த குணமுடைமையாம்.

2. அன்பு முதலிய நற்குணங்களால் நிறைவுடைமை மட்டுமேயன்றிக் களவு பொய் கோப முதலிய தீக்குணங்களைக் காய்தலும் நன்மக்கள் இலக்கணம்.

3. பெரியோர்களது பெயரைத் தம் மக்களுக்கும் மற்றும் உடைமைகளுக்கும் இட்டு வழங்குதல் அப்பெரியோரை வழிபடும் முறைகளுள் ஒன்று.

4. தங்கள் தங்கள் பேர் எழுதித் தண்ணீர்ப் பந்தர் முதலிய அறங்களைச் செய்தல் சாதாரண உலக வழக்கு. ஆனால் தாம் செய்யும் அவ்வகை அறங்களைத் தம் பெயர் எழுதாது தாம் வழிபடும் பெரியோர்கள் பெயரை எழுதி அப்பெயரால் செய்தல் உயர்ந்தோர் முறை.

5. தண்ணீர்ப் பந்தர்கள், அளவில்லாத சனம் எப்போதும் செல்லும் வழிக் கரையில் வேனில் வெப்பத்தை அகற்றுவதில் அருளுடைய பெரியோர்களது உள்ளம்போலக் குளிர்ச்சியுடையனவாய்க் குள நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்ந்து நிழல் தருவனவாய் அமைக்கப்படுதல் வேண்டும். அப்பூதி நாயனார் இவ்வாறு

திருநாவுக்கரசர் பெயரால் அமைத்த தண்ணீர்ப் பந்தல் ஏனை உலகவர் பார்த்துப் பின்பற்றத் தக்க இலக்கியமா யமைந்தது. (1787)

6. பெரியவர்களைத் தியானப்பொருளாய்க் கொண்டு பல நாள் வழிபட்டு அழைத்து வந்தால், ஒருநாள் அவர்கள் அத்தவங் கூட்டிவைக்கத் தாமாக வந்து வெளிப் பட்டுக் கூடுவர் என்பது அப்பூதியாரது மனையின் முன் கடையில் அப்பர் சுவாமிகள் வந்து தாமாகச் சேர்ந்ததினின்று நன்கு அறியக் கிடக்கும் உண்மை. சிவபெருமான் வெளிப்பட்டருளுவது மிவ்வாறேயாம். (1787-1791)

7. வெளியிற் சென்றுவந்த உடலின் அயர்ச்சி தீருமுன், "அடியார் ஒருவர் மனைக் கடையில் வந்தனர்" எனக் கேட்டலும் உடனே வெளிவந்து அடியாரை வரவேற்றல் சிவனிடத்துக் கொண்ட அன்பின் திறம். (1791)

8. அடியவர் தம்மை வணங்கும் முன் தாம் வணங்குதல் அன்பின் தன்மை. அடியார்கள் தலைக் கூடியபோது இன்னார் தாம் முன் வணங்கினர் என்றறியா முறைமையில் வணங்குதல் முறை. (1792)

9. சிவனடியாரை "வேறொருவர்" என்று கூறுதல் அடிமைத் திறத்தை நிந்தித்தலாகும். அது சிவ நிந்தனை - சைவ நிந்தனை - என்றதன்பாற்படும். அதனை யாரேனும் தம் முன் செய்யக் கேட்கில் சிவனிடம் அன்புடையோர் பொறுக்க லாற்றாது சினங்கொள்வர்; அது செய்தோரைத் தம்மால் இயன்றவாறு தண்டமும் இயற்றிடுவர். சத்தி நாயனார் சிவ நிந்தனை செய்தோரது நாவை வலித் தரிந்து தொண்டு செய்தனர். தம்மால் அவ்வாறு ஒன்றும் செய்ய வியலாதபோது "சிவ சிவ" என்று காது பொத்திக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கிவிட வேண்டும் என்பதும் விதி. சிவ நிந்தனை பொருது வரும் சினம் விலக்குதற்குரிய மனக்குற்ற மாகாது. அறுவகைக் குற்றத்தினுட்பட்ட ஏனைச் சினம், பாவம் பயக்கும்; இந்தச் சினம் சிவபுண்ணியமாய்ப் படிப்படி முத்திக் கேதுவாகும். அப்பூதியார் "களவு பொய் கோப முதலிய குற்றங் காய்ந்தார்" (1784) என்றதும், "கேளா நிலையழிந்த சிந்தையராய்" (1795) என்றதும் ஒப்பிடற்பாலன. "மறைகணிந்தனை சைவ நிந்தனை பொறு மனமும்" என்ற வரங்கேட்டுப் பெற்றனர் நந்திபெருமான். உடலோடு ஒழிந்துவிடக்கூடிய அளவில் பொருத்தமுடைய சாதாரணமான ஒரு நட்பினரையோ, அன்றி, மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரையோ ஒருவன் நிந்தை செய்தாற் பொறுது சினந்து பகை மூண்டு தகாத பலவும் செய்தல் உலக வழக்கில் காண்கிறோம். ஆனால் உயிருடன் பொருந்திவரும் சிவனன்பின் திறத்தில் நிந்தை செய்யக் கேட்டால் வாளா விருப்பர். அது மட்டுமோ அந் நிந்தை செய்தாருடன் உறவும் கொண்டாடுவர்! இது என்ன கொடுமை! திருநாவுக்கரசரது பெயரை 'வேறொரு பேர்' என்னக் கேட்டபோது அப்பூதியார் தமது சிந்தை நிலையழிந்தார். எதிர்மொழிந்தவர் அடியார் திருவேடத்துடனில்லாதிருப்பின் இயன்ற தண்டமுஞ் செய்திருப்பர்! இவ்வாறு சிந்தை நிலையழியினும் அடியவரிடம் தாம் நடக்கும் முறையில் திரியாது (1795-1797) "நன்றருளிச் செய்திலீர்!" என்பது முதலாக அமைந்து நின்ற நேர்மை பெரியோராகிய அடியார்களது சிறப்பு.

10. தம்மைத், தத்தம் பெருமை பற்றித் தாமே அறிவித்துக் கொள்வது கீழோர் தன்மை; தமது சிறுமைபற்றி அறிவித்துக் கொள்வது அறிவுடைப் பெரி யோர் தன்மை. (1798)

11. பெருமகிழ்ச்சி மூண்டபோது முன் செய்யத் தகுவனவாகிய வழிபாட்டு முறைகளும் மறந்து போய்ப் பித்தர்போல நிகழும் தன்மை வரும். (1801)

12. தமக்கு ஒரு நல்ல பேறு கிடைத்தபோது இது சிவனருளால் வந்ததென்று கண்டு மகிழ்வது பெரியோரியல்பு. (1804)

13. தமது பெற்றோரும் பெரியோரும் தம்மை ஒரு காரியத்தில் ஏவியபோது அதனை மகிழ்ந்தன்புடன் ஏற்றுச் செய்வதும், "நல்ல தாய் தந்தை யேவ நானிது செயப் பெற்றேன்" என்று திருந்திய கருத்துடன் அதனுட் புகுவதும் நல்ல மக்களியல்பு. (1806)

14. திருநாவுக்கரசர் அமுது செய்தற்குப் பரிகலக்குருத்தை அரியும் போது அல்லலுற்று அழுங்கிச் சோரக் கையினில் அரவந் தீண்டப்பெற்ற பிள்ளையாகிய மூத்த திருநாவுக்கரசு, "அரவின் வேகத்தால் யான் வீழா முன்னம் வேகத்தாற் சென்று இக்குருத்தைக் கொடுப்பன்; பெரியவர் அமுது செய்யத் தாழ்க்கும்படி இதனை யாரிடமும் சொல்லேன்" என்று ஓடிச் சென்று குருத்தைத் தாயார்பால் வைத்து மயங்கி வீழ்ந்தான். இதுவே சிவனன்பின் றிறத்துத் திருந்திய அம் மகனது சிறப்பு. இளைஞர்கள் இவ்வாறு சிவன்பால் அன்பு திருந்திய சிந்தையும் செயலும் பொருந்தப் பழகி ஒழுகுதல் உயிர்க்கு ஊதியம் தருவதாம். சைவ வுலகம் இதனைக் கண்டு திருந்த ஒழுகுவது நலம். (1808)

15. மயங்கி வீழ்ந்த மகனது உடலில் உதிரஞ்சோர்வடுவும், மேனியும், பல்லும் கண்ணும் கருகிய நிலையும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று துணிந்த அப்பூதியாரும் மனைவியாரும் அதனாற் சிறிதும் தளங்காது திருத்தொண்டர் அமுது செய்யும் வகைகளைச் சூழ்ந்து செய்யலாயினர்; இது சிவனன்பின்றிறம். "மெய்ம்மை யாம் பொருள் விவேகமும் வேறுபா டாய, பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற"த் தெளிந்து இம்மை மறுமையிரண்டின் ஆசையும் நீத்துச் சிவனடியாகிய வீடு பேற்றின் விருப்பமிக்கவரே இத்தன்மை செய்யவல்லவர். உலகர்க்கு இதன் உண்மை விளங்குதல் அரிது. (1810)

16. நீறு சாத்த உமது மூத்த பிள்ளையையும் காட்டும் என்று வாகீசர் சொன்னபோது அப்பூதியார் அவன் "இப்போது இங்கு உதவான்" என்றனர். அது கேட்டலும் அப்பரது செவ்விய திருவுள்ளத்துள் ஓர் தடுமாற்றம் சேர்ந்தது. உண்மை விளங்கச் செய்தது. இவ்வாறு திருவருள் தமது உள்ளத்தினின்று உண்மையுணர்த்த உணர்குவர் பெரியோர். (1815)

17. திருநாவுக்கரசர் சிவபெருமானைப் பாட, மகன் விட நீங்கி உயிர் பெற்றெழுந்தனன். அது கண்ட பெற்றோர்கள் மகிழாது பெரியவர் அமுது செய்ய இவன் சிறிது இடையூறு செய்தனன் என்று சிந்தை நொந்தனர். இது உலகை உள்ளபடி தெளிந்த உண்மை யன்பின் திறம். (1819)

18. தாமும் அடியார்களும் அமுது செய்யும்போது அப்பூதியாரையும் மக்களையும் தம் உடனிருந்து அமுது செய்யும்படி ஏவினர் திருநாவுக்கரசர்; அவர்களும் அவ்வாறே செய்தனர். இஃது சிவனன்பின் றிறத்தால் உலகிய லுணர்வு தீர்ந்து சிவபோதம் வெளிப்படலால் நிகழ்ந்த செயல். சாதிநிலை மரபுகள் சமய நிலைகள் வேறு; சமயங் கடந்த சிவபோத நிலைவேறு. இந்நிகழ்ச்சியினின்றும் சாதி நிலை மரபுகள் இல்லை என்றுவது, அவை வேண்டப்படா என்றுவது கொள்ளும் முடிவுகள் போதரா. சாதி, சமய, மரபொழுக்கங்களை மனத்தினாலுங் கடத்தலாகா தென்பது தற்போத முடையார்க்கு விதித்த இறைவன் கட்டளை. (1822 - 1823)

19. அப்பூதியாரது திருத்தொண்டினைச் சிறப்பித்துச் சிவபிரானைத் துதிக்கும் திருப்பதிகத்துட் பாடியருளினர் திருநாவுக்கரசர். பெருமானது திருப்பாட்டினுள் வைத்துச் சிறப்பிக்கப்படுதல் அன்பின் மேன்மையாம். 1825)

20. அப்பூதியார் திருநாவுக்கரசரது திருநாமத்தைத் துதித்த வழியினாலே சிவன் கழல் நண்ணினார். இது அடியார் பெருமை. (1826)

தலவிசேடம் - (1) திங்களூர் - சோழநாட்டில் தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று. III பக்கம் ஙகரு - பார்க்க.—2. திருப்பழனம் - சோழநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருவையாறுள்ளிட்ட ஏழு பெருந் தலங்களுள் ஒன்று. III பக்கம் ஙஙக பார்க்க.

சில குறிப்புக்கள் - அப்பூதியார் சரித நிகழ்ச்சிகள் இப்புராணத்தினுள்ளும், திருநாவுக்கரசு நாயனார் புராணத்தி (1465 முதல் 1476 வரை)னுள்ளும் கூறப் படுகின்றன. இவ்வாறு ஒரே சரிதத்தை இரண்டு முறை கூற நேர்ந்த போது கூறியதுகூற லாகா வண்ணமும், முன்பின் மலைவுபடா வண்ணமும் அவ்வவ்விடத் துக் கேற்ற அளவுமட்டில் அமைத்துக் கூறுவது ஆசிரியரது தெய்வக் கவிநலச் சிறப்புக்களுள் ஒன்று. திருநாவுக்கரசர் புராணத்தினுள் இது மிகச் சுருக்கியும், ஈண்டு அச்சுருங்கிய இடங்களை விரித்தும் சொல்லிப் போகும் அழகு காணத்தக்கது.

"செப்பருஞ்சீர் அப்பூதியடிகள்" (1465) என்று முன்கூறிய அப்பூதியாரது சிறப்பை, ஈண்டுத் "தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னாருக் கன்பர்" (1783), "களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்" (1784), "வடிவுதான் காணா ராயும்" (1785) என்ற மூன்று பாட்டுக்களால் விரித்தனர். அவர் அரசுகளது திரு நாமத்தாற் செய்த அறங்களை முன்னர் "அந்தணரின் மேம்பட்ட" (1466) என்ற தொரு பாட்டாற் கூறியதனை, ஈண்டு (1787 முதல் 1791 வரை) ஐந்து பாட்டுக்களாற் சிறப்பித்தனர். அரசுகளைத் தமது மனைக்கடைத் தலையில் அப்பூதியார் கண்டு அறிந்து வழிபட்டுத் திருவமுது கொள்ள விண்ணப்பித்து அவரிசைவு பெற்றது வரை முன்னர், "மற்றவரு மனமகிழ்ந்து" (1467) என்ற ஒரு திருப்பாட்டிற் சுருக்கிக் கூறியருளிய ஆசிரியர், ஈண்டு 1792 முதல் 1803 வரை பன்னிரண்டு திருப்பாட்டுக் களால் விரித்துக் கூறினர். இவ்வாறே, பிள்ளை வாழைக்குருத்தரியப் புக்கபோது அரவந்தீண்ட அவன் அதனைப் பொருட்படுத்தாது மனைக்கு ஓடிவந்து குருத்தை வைத்து வீழ்ந்த நிகழ்ச்சியினை ஈண்டு, (1806—1809) நான்கு பாட்டுக்களாலும்; புதல்வன் விடத்தினால் வீந்தான் என்றறிந்த அப்பூதியாரும் மனைவியாரும் மனத்திற் றடுமாற்ற மில்லாது அவனுடலைப் பாயினுள் மறைத்து அரசுகள் திருஅமுது செய்வதற்குச் சூழ்ந்த செயல்களை 1812 முதல் 1816 வரை ஐந்து திருப்பாட்டுக்களாலும்; அரசுகளைத் திருஅமுது செய்வித்த சிறப்பை 1818 முதல் 1824 வரை ஏழு திருப்பாட்டுக்களாலும் ஈண்டு விரித்தருளினர்; இப்பகுதிகள் முன்னர் ஒவ்வோர் பாட்டிற் கூறப்பட்டன. இவை அப்பூதியாரது தன்மைகளைச் சிறப்பிக்கும் பகுதிகளானமையால் இப்புராணத்தி னுள் விரிக்கப்படும் தகுதியுடைமை காண்க.

புதல்வனது உடலை மனையிலிருந்து அரசுகள் திருக்கோயிலின்முன் கொணர் வித்து விடம் நீங்க அருளும்படி அங்குப் பாடினர் என்றும், "ஒன்றுகொலாம்" என்ற பதிகம் பாடினர் என்றும் (1473) முன்னர் அரசுகளது புராணத்தினுட் கூறினர். அவை ஈண்டுக் கூறாது குறிப்பிற்பெற வைத்தருளினர். இவை அரசுகளது செயல் களானமையின் ஆண்டுக் கூறப்படும் தகுதியுடைமையுங் காண்க.

இவ்வாறே ஆளுடைய பிள்ளையாரும் அரசுகளும் திருப்புகலூரில் ஒன்றுகூடித் திருமறைக்காட்டினின்று பிரியும்வரை சேர்ந்தே யாத்திரை செய்தனர். திருவீழி மிழலையில் அருட்காசு இருவரும் பெற்றனர். திருமறைக்காட்டில் கதவம் திறக்கவும் அடைக்கவுமாக இருவரும் அற்புதச் செயல்கள் நிகழ்த்தினர். இப்பகுதிகள் அவ் விருவர் புராணத்தினுள்ளும் உரைக்கப்படுவன. ஆயின் மேலே கூறிய தகுதிபற்றி அவ்வவரைப் பற்றிய பகுதிகள் அவ்வவர் புராணத்தினுட் சிறப்பாகவும் விரிவாகவும், ஏனையவை பொதுவாகவும் சுருக்கமாகவும் பேசப்படும் முறை அவ்விரண்டு புராணங் களின் அவ்வப் பகுதிகளையும் ஊன்றி நோக்குவோர்க்குப் புலப்படும். ஆண்டும் இவ்வாறே ஒப்புநோக்கிக் கண்டுகொள்க. இவ்வாறு வரும் பிறவும் காண்க.

## அப்பூதியடிகணுயனுரது துதிகள்

அந்தமினற் றிங்களூர் வருமப் பூதி யருமறையோர் திருநாவுக் கரசி னுமம்
பந்தரிடை யெழுதக்கண் டரசு மெய்தப் பணிந்துபரி கலநேடிப் படப்பை சேர்ந்து
மைந்தனுயி ருயர்கதலி யிலைமேற் றுஞ்சும் வாளரவு கவரவுடன் மரித்தல் கேட்டுச்
சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தாற் றீர்த்துத் திருவமுது செயவருளைச் சேர்ந் தனாரே.

(திருத்தொண்டர் புராணசாரம் - 28)

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்கொல்வெள் ளேறுடையான்
றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்த !வித் தாரணியில்
நினக்கன்பு செய்கின்ற வப்பூதி யைச்சிவ நேசமுறும்
இனர்க்கன்பு செய்நம்பி யாரூர னேத்து மியல்பறிந்தே. (6)

உற்று னலன்றவன் தீயினின் றுனல னூண்புனலா
அற்று னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்று னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்று "ஞேநம்பி யப்பூதி" யென்னும் பெருந்தகையே. (38)

(நால்வர் நான்மணிமாலை)

---

## பாட்டு முதற்குறிப்பு அகராதி

### அப்பூதியடிகணுயனுர் ப்ராணம்

எண்கள் பக்கங் குறிப்பன


| | | | |
|---|---|---|---|
| அங்ககன்று | ௧௧ | திருமறையோர் | ௧௮ |
| அப்பூதியடிகள் | ௪௯ | தீவிடநீங்க | ௩௮ |
| அரசறிய | ௨௦ | தூயநல் | ௨௬ |
| அருந்தவரெழுந்து | ௩௫ | நம்மையுடை | ௧௫ |
| அவ்வுரை | ௩௮ | நல்லதாய் | ௨௭ |
| அளவில்சனம் | ௫ | நாவினுக்கரசர் | ௩௮ |
| ஆங்கவர் | ௪௪ | நின்றமறை | ௧௫ |
| ஆசனத்தில் | ௨௪ | பிரிவுறுமாவி | ௪௩ |
| ஆதிநான்மறை | ௩௫ | புகழ்ந்தகோமயம் | ௪௪ |
| ஆறணியும் | ௧௩ | பெரியவரமுது | ௩௮ |
| இப்பந்தர் | ௯ | பெறலரும் | ௩௨ |
| இவ்வகையரசு | ௫௦ | பொங்குகடல் | ௧௫ |
| எரிவிடம் | ௨௮ | பொருந்திய | ௨௮ |
| என்றுரைக்க | ௧௦ | பொருப்பரையன் | ௪ |
| ஒருகுன்ற | ௧௩ | மற்றவரை | ௨௧ |
| கடிதணைந்து | ௧௨ | மனைவியாருடன் | ௨௨ |
| கடிதுவந் | ௩௫ | மாதவமறை | ௪௮ |
| களவுபொய் | ௩ | மான்மறிக்கையர் | ௫௧ |
| கையினில் | ௨௮ | மூண்டபெரு | ௨௨ |
| செய்தவர் | ௨௫ | மைந்தரும் | ௪௪ |
| தளர்ந்துவீழ் | ௩௨ | வடிவுதான் | ௪ |
| தாண்டவம் | ௧ | வந்தணைந்த | ௮ |
| திருந்தியவாச | ௪௪ | | |



Printed at the Sadhu Press, Royapettah, Madras, Paper Issue Card No. M. S. 115
for C. K. Subrahmanya Mudaliar, 41, Broadway, Madras,
Paper Issue Card No. M. S. 272—Copies 250—15-12-45



125348

# கோவைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A. இயற்றியன | ரூ. | அ. |
| --- | --- | --- |
| சேக்கிழார் (அச்சில்) ... ... ... | 1 | 8 |
| ஸ்ரீ மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை—இரண்டாம் பதிப்பு (அச்சில்) | | |
| கருவூர்த்தேவர் ... ... ... | 0 | 8 |
| அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத்தமிழ் (பிரதிகள் இல்லை) ... | 0 | 8 |
| கண்ணப்ப நாயனார் புராணம் உரையுடனும் படங்களுடனும் ... | 2 | 0 |
| கண்ணப்ப நாயனார் சரிதம்—தலத் தேவாரங்கள்—படங்களுடன் ... | 0 | 4 |
| திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் உரையுடனும் படங்களுடனும் | 0 | 4 |
| சண்டேசுர நாயனார் புராணம் உரையுடனும் படங்களுடனும் ... | 1 | 4 |
| திருநாவுக்கரசு நாயனார் புராணம்—உரையுடன் தேவாரக் குறிப்புகள், தலக் குறிப்புக்கள், படங்களுடன் ... ... | 8 | 0 |
| திருநாவுக்கரசர் புராண வசனம் முதலியன ... ... | 0 | 6 |
| அப்பூதியடிகளாயனார் புராணம் உரையுடனும் படங்களுடனும் ... | 1 | 0 |
| காரைக்காலம்மையார் புராணமும் நூல்களும் ,, ... | 1 | 12 |

---

| | | |
| --- | --- | --- |
| சுப்பிரமணியர் திரிசத நாமார்ச்சனை—பீசாட்சரங்களுடனும் பஞ்சாட்சர சடாட்சர மாறலுடனும்-சுப்பிரமணிய சரித அரிய நாமாவளி—(இது வரை வெளிவராதது; தமிழிலும் கிரந்தாட்சரத்திலும்) ... | 0 | 2 |

---

| | | |
| --- | --- | --- |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (மூன்றாம் பதிப்பு; சமாஜ வெளியீடு) ... | 1 | 0 |

விலாசம்:—

**வைசியாள் வீதி, கோயமுத்தூர்.**

9A
9-24